விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 05 ஞாயிற்றுக்கிழமை (18.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## ஜனாதிபதி கோட்டாவால் உயிர் அச்சுறுத்தல்
## எனது பாதுகாப்பை பலப்படுத்துங்கள்
### பொலிஸ்மா அதிபருக்கு விஜயதாஸ ராஜபக்ஷ கடிதம்

(கொழும்பு)
ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ, தனது பாதுகாப்பைப் பலப் படுத்தக்கோரி பொலிஸ்மா அதிபருக்கு நேற்று கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அரசின் முறைகேடுகள் தொடர்பாக கருத்து வெளியிட்டதால், ஜனாதிபதி தன்னை அச்சுறுத்தி ▷15

## கொரோனா மேலும் 2 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
கொரோனாத் தொற்றால் பாதிக்கப் ▷15

## புலிகளை மீள உருவாக்க முயற்சியாம்
## பயங்கரவாத தடுப்புப் பிரிவால்
# வடக்கில் 5 பேர் கைது
## கொழும்பில் தடுத்து வைத்து விசாரிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் வகையில் குழுக்களை அமைத்துச் செயற்பட்டனர் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நால்வர் மற்றும் புதுக்குடியிருப்பில் ஒருவர் நேற்று சனிக்கிழமை பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இளவாலைப் பொலிஸ் பிரிவில் இருவரும் கோப்பாய், பலாலி பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் இந்தியாவில் ஆயுதங்களுடன் கைது செய்யப் பட்டவர்களுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர் எனும் சந்தேகத்திலேயே நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

மேலும் யாழ்ப்பாணத்தில் அதிகாலை கைது செய்யப்பட்ட நால்வருடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புதுக்குடியிருப்பில் ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். ▷15

## கோயில் மணி அறுந்து விழுந்ததில்
### முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
கோயில் மணி தலையில் விழுந்ததால் படுகாயமடைந்த முதியவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை ▷15

## யாழ்ப்பாணத்தில் பொலிஸாருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பொலிஸாரின் எண்ணிக்கை 03 ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாண ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளில் யாழ். ▷15



## சின்னக் கலைவாணர் விவேக் காலமானார்
### அரச மரியாதையுடன் உடல் தகனம்

(சென்னை)
மாரடைப்பால் மரணமடைந்த நடிகர் விவேக்கின் உடல், 78 ▷15

## யாழ்ப்பாணத்தில் 10 பேர் உட்பட வடக்கில் 14 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் 10 பேர் உட்பட வடக்கில் 14 பேருக்கு கொரோனா தொற்று நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் ஆய்வுகூடத்தில் 404 பேரின் மாதிரிகள் ▷15

## கிளிநொச்சி சிவபுரம் பகுதியில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை



(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் 4 பிள்ளைகளின் தந்தையான மாயழுகு மனோகரன் (வயது-42) என்பவரே ▷15

## மானிப்பாயைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்
### கொரோனாவால் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மானிப்பாயைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவர் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்துள்ளார்.

இந்தத் தகவலை ▷15

துறைமுக விவகாரம்
## பிரதமர் மகிந்த அமைச்சர்களுடன்
### விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)
பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்புத் துறை ▷15

## யாழில் முடக்கப்பட்ட பகுதியை விடுவிப்பது தொடர்பில்
### 2 வாரங்களின் பின் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் முடக்கப்பட்டுள்ள திரையரங்குகள், திருமண மண் ▷15

## வெளிநாட்டில் இருந்து இலங்கை வருவோருக்கு
### மேலும் கட்டுப்பாடுகள் விதிக்க தீர்மானம்

(கொழும்பு)
வெளிநாடுகளில் இருந்து இலங்கை வருபவர்களில் கோவிட் - 19 ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவையா?**

உங்கள் நிறுவன Vacancy ( Office Works, Driver, Data Entry Operator ) களை நிரப்ப dewmasweb.com

(6518)

**074 138 3368**

**கடை வாடகைக்கு**

மானிப்பாய் வீதி, பள்ளிவாசல் அருகாமையில் நீளம் 37'20'

தொடர்பு (6618)

**077 617 6413**

**காணி விற்பனைக்கு**

யாழ். தையிட்டியில் காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் என்பவற்றிக்கு ஒரு கிலோ மீற்றர் (1km) தூரத்தில் 8 1/2 மற்றும் 12 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு. (C-1321)

**- 076 172 4033**

**வேலை ஆட்கள் தேவை**

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்

தொடர்பு (C-1996)

**077 725 9245**

**மணமக்கள் தேவை**

1980 - 1990 வரையுள்ள வெளிநாட்டிலிருக்கும் மணமகன்மாருக்கு படித்த மணமகள்மார், 1982 - 1995 வரையுள்ள வெளிநாட்டிலுள்ள மணமகள்மாருக்கு பல்கலைக்கழகம் படித்த மணமகன்கள் மற்றும் திருமண வயதிலுள்ள ஊரிலுள்ள மணமகள், மணமகன் தேவை. (6616)

**077 023 7639**

Viber 0094762049298

Whatsapp 004917643399372

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 10 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்.) (6623)

தொடர்பு கொள்ளும் நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை

**077 468 3354, 077 203 6402, 077 235 2656**


## ஓராண்டு நினைவுகளுடன்



தோற்றம் 1962.11.15 — அமரர் — மறைவு 2020.04.28

### குகனேஸ்வரராணி செல்வராஜா

எம் வீட்டின் குலவிளக்கே!
பாசமுள்ள அம்மாவே
நீங்கள் எம்மைவிட்டு நீங்கினாலும்
நிழலாய் எம்முடனே வாழ்கிறீர்கள்.

(6622)

தெல்லிப்பழை, மாவிட்டபுரம்.

ஆத்மா சாந்தியடைய சந்நிதியானைப் பிரார்த்திக்கும் கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சந்திரசேகரம் சபேஷன்

**தோற்றம் : 24.06.1978 மறைவு : 13.04.2021**

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் Baevervej8, 7100 Vejie டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சபேஷன் கடந்த 13.04.2021 ( செவ்வாய்க் கிழமை) இறைபதம் அடைந்தார்.

அன்னார் சந்திரசேகரம் - கெங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் செல்வராணி (செல்வி - ஜேர்மனி) தம்பதியரின் அன்பு மருமகனும் ருஷாந்தியின் அன்புக் கணவரும் அக்ஷயா, அஸ்விதா, அங்கிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சன், சுஜீவன் (ஜேர்மனி), நிகேதனன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.04.2021) ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரம் பி.ப 2.00 மணியளவில் டென்மார்க்கில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுதர்சன் (ராயு- சுந்தர்மடம்) : 077 846 9199
சுஜீவன் (ஜேர்மனி)
நிகேதனன் (ஜேர்மனி) (6610)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்



அண்மையில் அல்கொய்தா, ஐ.எஸ்.உள்ளிட்ட 11 இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

(கொழும்பு)

**தடை செய்யப்பட்ட 11 இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்யும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், அந்த அமைப்புகளின் தலைவர்களிடமிருந்து தகவல் பெறப்படுவதாகவும் தெரிவித்தார்.

பறிமுதல் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர்களின் சொத்து மற்றும் வங்கிகணக்குகள் தொடர்பான ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் தலைவர்கள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

## விஜயதாஸ மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்- கெஹலிய



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சட்டமூலம் தொடர்பாக குற்றச்சாட்டுகளை முன் வைத்த அவர், யதார்த்தத்தை புரிந்து கொள்ளாதமை வருத்தமளிப்பதாகவும் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய கெஹலிய ரம்புக்வெல, நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காது என்றும் நாட்டின் வளங்களை வெளிநாட்டுக்கு விற்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் குறித்து கருத்துத் தெரிவித்தமையை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை மிரட்டியதாக விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று முன்தினம் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வெளிநாடுகளிலிருந்து வருபவர்களால் தொற்று அதிகரிக்கும் அபாயம்

## இராணுவத் தளபதி எச்சரிக்கை



(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து வருகை தருபவர்கள் மூலம் நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரிக்கும் அபாயம் நிலவுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்களில் 78 பேருக்கு நேற்று முன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த வியாழக்கிழமை நாட்டிற்கு வருகை தந்தவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 237 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளங் காணப்பட்ட நிலையில், அவர்களில் 159 பேர் உள்நாட்டினர் என்பதுடன், ஏனைய 78 பேரும் வெளிநாடுகளிலிருந்து நாட்டிற்கு வருகை தந்தவர்களென இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளில் நாளாந்தம் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்படும் தற்போதைய சந்தர்ப்பத்தில், இலங்கையில் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்துள்ளதாகவும் இத்தகைய பின்புலத்தில், வெளிநாடுகளிலிருந்து வருகை தருபவர்களினால் நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# ஜனாதிபதி அச்சுறுத்தினார் என பகிரங்கமாக கூறுவது தார்மீகமானதல்ல

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அச்சுறுத்தும் வகையில் கதைத்தார் என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ ஊடக சந்திப்பில் பகிரங்கமாகக் கூறியது தார்மீகமானது அல்ல என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கோட்டே ரஜமஹா விகாரையில் நேற்று நடைபெற்ற தலைக்கு எண்ணெய் பூசும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் சரத் வீரசேகர மேலும் தெரிவிக்கையில்,

துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் விஜயதாச ராஜபக்ஷவுக்கு பிரச்சினைகள் இருந்தால், அதனை ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி இருக்கலாம். எனினும் அவர் அப்படிச் செய்யவில்லை.

துறைமுக நகரத்தில் பாதுகாப்பு பொறுப்பு இலங்கை பொலிஸாருக்கே இருக்கின்றது. அந்த நிலத்தில் உலங்குவானூர்தியைத் தரையிறக்கக் கூட அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படியான பின்னணியில் விஜயதாச ராஜபக்ஷ வெளியிட்டுள்ள விடயங்கள் தவறானவை. துறைமுக நகரத் திட்டம் என்பது இலங்கை பொருளாதாரத்தின் திருப்புமுனை.

அதனை ஆரம்பத்திலிருந்தே சீர்குலைக்க பல்வேறு தரப்பினர் முயற்சித்து வருகின்றனர். இதனால், விஜயதாச ராஜபக்ஷ செயற்பாடுகள் தொடர்பிலும் சந்தேகம் உள்ளது எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## 22 இலட்சத்திற்கு மேற்பட்டோருக்கு இதுவரை ரூ.5000 வழங்கப்பட்டது

(கொழும்பு)



நாட்டில் இதுவரை 22 இலட்சத்து 66 ஆயிரத்து 301 குடும்பங்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதற்கமைய, இதுவரை 11 ஆயிரத்து 332.5 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், 5000 ரூபாய் கொடுப்பனவு இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் நாளை திங்கட்கிழமை முதல் அதனைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோராக அடையாளம் காணப்பட்டுள்ள குடும்பங்கள், முதியோர் கொடுப்பனவை பெறுவோர் குடும்பங்கள், விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவை பெறும் குடும்பங்கள், சிறுநீரக நோய் நிலைமைக்கான கொடுப்பனவை பெறும் குடும்பங்கள், முதியோர் கொடுப்பனவை பெறும் குடும்பங்கள் உள்ளிட்ட 7 பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்டோருக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (நி-8)

## தெரிவுக்குழுக் கூட்டம் நாளை நடைபெறும்

(கொழும்பு)

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக்குழுவின் கூட்டம் கட்சி தலைவர்களின் பங்குபற்றலுடன் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாளை பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன்போது நாளை மறுதினம் 20 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள ஏப்ரல் மாதத்தின் இறுதி பாராளுமன்ற வாரத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணைகள் மற்றும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற சட்ட மூலங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம்- ராஜன்- கங்கு வெற்றிக்கிண்ணம் - 2021
# கிறாஸ்கொப்பர்ஸ் எதிர் ஜொலிஸ்ரார் இறுதிப் போட்டி இன்று





விக்ரம்-ராஜ்-கங்கு வெற்றிக் கிண்ணத்திற்காக 30 ஆவது ஆண்டாக வளர் மதி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் கலந்து கொள்ளும் இரு அணிகளும் துடுப்பாட்டத்தில் பலம் பொருந்திய அணிகளாக கருதப்படுகின்றது. கிறாஸ்கொப்பர் அணி 3 ஆவது தகுதிகாண் போட்டியில் விக்டோரியன்ஸ் அணியை 92 ஓட்டங்களால் வெற்றியும் 5 ஆவது தகுதிகாண் போட்டியில் கே.சி.சி.சி. அணியை 94 ஓட்டங்களால் வெற்றியும், Play off சுற்றில் முதலாவது தகுதிகாண் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியிடம் 01 இலக்கினால் தோல்வியும், Play off சுற்றில் 2 ஆவது தகுதிகாண் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணியை 146 ஓட்டங்களால் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜொலிஸ்ரார் அணி முதலாவது தகுதிகாண் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணியை 3 இலக்குகளால் வெற்றியும், 2 ஆவது தகுதிகாண் போட்டியில் AB அணியை 3 இலக்குகளால் வெற்றியும் அடைந்து Play off சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஜொலிஸ்ரார் அணி Play off சுற்றில் முதலாவது தகுதிகாண் போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 1 இலக்கினால் வெற்றி பெற்று நேரடியாக இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக இத்தொடரை பொறுத்த வரையில் ஜொலிஸ்ரார் அணி (UN BEATEN தோல்வியடையாத ஓர் அணியாக திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

## தென்னாபிரிக்க அணிக்கெதிரான இருபது-20
## தொடரை வென்றது பாகிஸ்தான்



தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 4 போட்டிகளைக் கொண்ட இருபது- 20 ஓவர் கிரிக்கெட் தொடரின் 3 போட்டிகளில் 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான நான்காவது இருபது-20 போட்டி செஞ்சூரியனில் நேற்று முன் தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர்களாக மாலன் மற்றும் மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர்.

19.3 ஓவர்நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த தென்னாபிரிக்கா 144 ரன்களை எடுத்தது. பாகிஸ்தானின் பந்துவீச்சில் அஸ்ரப் மற்றும் ஹசன் அலி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து 145 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணியின் முஹமது ரிஸ்வான் மற்றும் கப்டன் பாபர் அசாம் களமிறங்கினர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 19.5 ஓவரில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 149 ரன்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முகமது ரிஸ்வான் 25 ரன்கள் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் பாகிஸ்தான் வெற்றிக்கு வழி வகுத்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 3-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியது.

இப்போட்டியில் பாகிஸ்தான் வீரர் அஸ்ரப் ஆட்ட நாயகன் விருதையும், தொடர்நாயகன் விருது பாகிஸ்தான் கப்டன் பாபர் ஆசமுக்கு வழங்கப்பட்டது. (4-6)

## சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக 200ஆவது போட்டியில் தல டோனி




ஐ.பி.எல். போட்டியில் சி.எஸ்.கே. அணி பஞ்சாப்பை வீழ்த்தி முதல் வெற்றியைப் பெற்றது.

அந்த அணி தொடக்க ஆட்டத்தில் டெல்லியிடம் தோற்று இருந்தது. இந்த வெற்றி குறித்து சி.எஸ்.கே. கப்டன் டோனி கூறியதாவது.

பந்து வீச்சாளர்களால் இந்த வெற்றி கிடைத்தது. தீபக் சாஹர் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. அவர் ஒரு முதிர்ச்சி அடைந்த பவுலராக திகழ்ந்துள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக 200-வது போட்டியில் விளையாடியதை நான் மிகவும் சிறப்பாக உணர்கிறேன்.

தற்போது மும்பை எங்களது சொந்த மைதானமாக இருக்கிறது.

மும்பை எங்களது ஆடுகளமாக மாறும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

இவ்வாறு டோனி கூறி உள்ளார். சென்னை சுப்பர் கிங்சின் 3ஆவது ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்சை எதிர்வரும் 19 ஆம் திகதி மும்பையில் எதிர் கொள்கிறது. (4-6)







யூனிவெர்சல் சோட்டோகான் கராத்தே சங்கத்தால் USKU ஜப்பான் தலைமை யகத் தால் நடத்தப்பட்ட 2021 இற்கான சர்வதேச காட்டா போட்டி இணையவழி ஊடாக நடை பெற்றது. இதில் கலந்து கொண்ட SSKA கரா த்தே கழகத்தின் பிரதம ஆசான் சென்சே எஸ். விஜயராஜ் காட்டா போட்டியில் வெண் கலப்ப தக்கம் பெற்றார். இவரது புதல்வராகிய விஜயராஜ் தமிழ் நில வன் (14 வயதுப்பிரிவு) தங்கப்பதக்கம், விஜய ராஜ் நிவேதன் (18 வயதுப் பிரிவு) வெள்ளி ப்பதக்கம் பெற்றனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வன்முறைகளுக்கு வழிவகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம்

## சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டிருக்கும் பயங்கரவாதத்தடை தொடர்பான விதிமுறைகள் ஏற்கனவே மிகவும் ஆழமான குறைபாடுகளைக் கொண்டிருந்த பயங்கரவாத் தடைச்சட்டத்தின் மூலம் மேலும் வன்முறைகளும் மீறல்களும் இடம்பெறுவதற்கு வழிவகுக்கும் என்று சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து சர்வதேச யூரர்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, பயங்கரவாதத்தடை தொடர்பான விதிமுறைகள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் கடந்த செவ்வாய்க் கிழமை வெளியிடப்பட்டது.

அதில் 11 அமைப்புக்கள் "தீவிரவாத அமைப்புக்களாக" இனங்காணப்பட்டிருப்பதுடன் இதுபோன்ற அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாக செயற்படுபவர்களை 20 வருடங்களுக்கும் அதிகமான காலம் சிறைப்படுத்தவும் அத்தகைய செயற்பாடுகள் அல்லது அவற்றை முன்னெடுப்போருடன் தொடர்புகளைப் பேணியவர்களை 10 வருடங்களுக்கும் அதிகமான காலம் சிறைப்படுத்தவும் முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுதல் என்ற பெயரில் மோசமான விதிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்ற இலங்கையின் நிறைவேற்றதிகாரப்போக்கின் தன்மையே தற்போதும் பின்பற்றப்பட்டுள்ளது.

எவ்வித விசாரணைகளுமின்றி ஒருவரை இருவருடகாலம் வரை தடுத்து வைப்பதற்கு அனுமதியளிக்கும் தீவிரமயமாக்கலை ஒழித்தல் தொடர்பான விதிமுறைகள் வெளியிடப்பட்டு ஒரு மாத காலத்தின் பின்னர் இந்த விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தன்னிச்சையான கைது நடவடிக்கைகள் தொடர்பான அடிப்படைத் தராதரங்களை மீறுவதற்கான நியாயமாக தேசியப் பாதுகாப்பு என்ற விடயத்தைக் குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-8)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

இலங்கையில் 26 வருடங்கள் முதன்மை நிறுவனமாக யாழ்.நகரில் இயங்கி வரும் நிறுவனம் ஒன்றில் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன

1)Business Advisers 2)Unit leaders

நிரந்தர வேலைவாய்ப்பும் பெற்றுத்தரப்படும்.பகுதி நேர மாகவும் முழுநேரமாகவும் வேலை பார்க்கலாம்.

O\L -6 பாடங்கள் சித்தி மற்றும் A\L தோற்றி இருத்தல் வேண்டும். (ஆண், பெண்) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(6594) சம்பளம் - 25,000-50,000

உடனே தொடர்பு கொள்ளவும்

076 408 4333

### விற்பனைக்கு

சணான் மறிக்குட்டிகள், கடாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு

(6593) 075 728 6754

### மணமகன் தேவை

1994, அவிட்டம் 4, 42 பாவம் Doctor மணமகளிற்கு தகுதியான மணமகன் தேவை துர்க்கா திருமண சேவை.

தொடர்பு:-

(6602) 077 818 5978

### மணமகள் தேவை

1987. யாழிந்து. கார்த்திகை. I.T.Engineering. நீர்வேலி. பதிவு: 5720. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401. (C-1319)

### மணமகள் தேவை

1985. யாழிந்து. அவிட்டம். Doctor. யாழ்ப்பாணம். பதிவு: 5675. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com, 076 664 9401. (C-1319)

### மணமகள் தேவை

1987. யாழிந்து. ஆயிலியம். Regional Manager. யாழ்ப்பாணம். பதிவு: 5624. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401 (C-1319)

### மணமகன் தேவை

1981. யாழிந்து. மூலம். Executive Officer. சுன்னாகம். பதிவு: 5665. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com, 076 664 9401. (C-1319)

### மணமகன் தேவை

1992. யாழிந்து. பூராடம். Development Officer சரசாலை. பதிவு: 5650. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com, 076 664 9401. (C-1319)

### மணமகன் தேவை

1993. யாழிந்து. கார்த்திகை. Teacher. காரைநகர். பதிவு: 5611. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService. com, 076 664 9401. (C-1319)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 63 3/4 செவ் 4 சூரி 5 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: **Engineer (London) PR** உண்டு
எதிர்பார்ப்பு: **BCS, Doctor, Engineer, Accountant,** வெளிநாடு மட்டும்
தொ.இ: **B/8564**

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: **IAB Accounting,** திரைப்பட விநியோகஸ்தர்
எதிர்பார்ப்பு: நல்ல குடும்ப பெண், படித்திருத்தல், உள்நாடு மட்டும்
தொ.இ: **B/11792**

பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 25 செவ் 1 சூரி 12 இல் உயரம்: **174cm**
தகைமை/தொழில்: **B.A,D.S Office**
எதிர்பார்ப்பு: குணமான ஓரளவு படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: **B/11793**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 100 செவ் 8 சூரி 1 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: **A/L, U.K PR** உண்டு
எதிர்பார்ப்பு: உள்நாடு வெளிநாடு இரண்டும்
தொ.இ: **B/11794**

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:28 1/2 செவ் 2 சூரி 1 இல்
தகைமை/தொழில்: **A/L**
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: **G/3818**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 61 செவ் 2 சூரி 11 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: **H.N.D.M,C.M.A. Work-Account Clerk**
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: **G/3842**

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 37 1/2 செவ் 1 சூரி 12 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: **A/L**
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: **G/3849**

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 32 3/4 செவ் 10 சூரி 12 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: **B.Com, Teacher**
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியர் நன்று, அரச வங்கி உத்தியோகம்
தொ.இ: **G/3871**

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

## மணிவிழா காணும் நாயகிக்கு சேவை நலன் பாராட்டுக்களும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்



### திருமதி. சிவகுமாரி நல்லதம்பி
*(நிர்வாக உத்தியோகத்தர்)*

- 1992 வைகாசி எழுதுவினைஞர் முதல் நியமனம் புனர்வாழ்வுப் பகுதி, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
- 1992 ஆனி –1996 ஆனி எழுதுவினைஞர் பிரதேச செயலகம் வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய்.
- 1996 ஆடி – 1997 வைகாசி எழுதுவினைஞர் புனர்வாழ்வுப் பகுதி, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
- 1997 ஆனி – 1999 மார்கழி எழுதுவினைஞர்பிரதேச செயலகம்,வலிகாமம் மேற்கு, சங்கானை.
- 2000 தை – 2012 பங்குனி பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திணைக்களம் பேராதனை, கண்டி.
- 2012 சித்திரை –2016 ஐப்பசி பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி.
- 2016 கார்த்திகை – 2021 தை பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சிறுவர் பெண்கள் அபிவிருத்திப் பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
- 2021 மாசி – 2021 சித்திரை 18 வரை (இன்று வரை) நிர்வாக உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தீவகம் தெற்கு, வேலணை.

(6589) வாழ்த்துவோர்:-குடும்ப உறவுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அண்மையில் யாழ் மாநகர மேஜர் மணிவண்ணனால் சனசமூக நிலையைத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம். சுபேசன்)

# நால்வர் கைது



(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கடந்த 14 ஆம் திகதி நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நான்கு பேரும் பொலிஸ் விசாரணையின் பின் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (4-8-60)



கொடிகாமம் ஒட்டங்கேணி பாலாவித் தாழ் இந்து கிறிஸ்தவ மயானம், ஒட்டங்கேணி சனசமூக நிலைய மக்கள், இளைஞர்கள் இணைந்து சொந்த முயற்சியில் சிரமதானப் பணி மேற்கொண்டனர். (படம்: சிவசாந்தன்)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந் தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட் டில் இறை ஆசிவேண்டி நாளை திங்கட் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் உரும்பிராய் பர்வதபத்தினி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேடபூஜை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ. க. மு. சோமசுந்தரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பாக இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. (4-8)

# பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)


வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவின் (சங்கானை) பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வருடந்தோறும் பணுவில் இதழினை 2015 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக இவ்வருடமும் அதன் ஐந்தாவது மலரினை பணுவில் இதழ்-7 எனும் பெயரில் வெளியிடப்படவுள்ளது.

இம் மலருக்காக பிரதேசஞ் சார் தொல்லியல், வரலாறு, ஆன்மிகம், சமூகவியல், மானிடவியல், கலை மரபுகள், வாழ்வியல், மரபுரிமைகள், வழக்காறுகள் மற்றும் பொது விடயங்கள் சார் ந்த ஆவணப்படுத்தல்கள் சார்ந்த ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 25.05.2021 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை, வலி.மேற்கு, சங்கானை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கலாம் என்பதுடன் பொருத்தமான ஆக்கங்கள் மலர்குழுவால் பரிசீலிக்கப்பட்டு பிரசுரிக்கப்படும் எனவும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பொ. பிரேமினி அறிவித்துள்ளார். (4-8)

# மறைத்து வைக்கப்பட்ட வாகனம் மீட்கப்பட்டது



(கரணவாய்)

வடமராட்சி முள்ளிப்பகுதியில் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டினை மீறிச் சென்ற மணல் கடத்தல்காரர்களின் வாகனம் நெல்லியடி பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மணல் கடத்தல்காரர்களை நிறுத்துமாறு சைகை காட்டிய விசேட அதிரடிப் படையினரின் தடுப்புகளையும் மீறிச் சென்ற மணல் கடத்தல் வாகனம் மீது விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் இரண்டு குடும்பஸ்தர்கள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் தப்பிச் சென்ற மகேந்திரா ரக வாகனம் துன்னாலை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெள்ளிக்கிழமை பொலிஸாரினால் மீட்கப்பட்டு நெல்லியடி பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இவ் வாகனம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் படவுள்ளது. (4-8-60)




## நூல் வெளியீடும் ஆவணப்படம் திரையிடலும்

(பொற்பதி)

பொற்பதி சென்.பீற்றர்ஸ் கலை மன்றம் நடத்தும் செல்வி பா.சிவாந்தினியின் "ஒற்றைப் பனை" நூல் வெளியீடும் "கடலே எங்கள் மூச்சு" ஆவணப்படம் திரையிடலும் இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யா/ குடத்தனை கரையூர் றோ.க.த.க. பாடசாலையில் மருதங்கேணி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சே.செல்வசுகுணா தலைமையில் இடம் பெறும். (4-8-64)

# விளையாட்டு மைதானம் அமைத்துத் தருமாறு கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வரணி மாசேரி கிராம உத்தியோகத்தர் பிரிவில் பொது விளையாட்டு மைதானம் ஒன்றில்லாமையால் இளைஞர்களும் யுவதிகளும் தமது விளையாட்டு திறன்களை வளர்த்துக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாக அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாசேரி கிராமம் பின் தங்கியதொரு கிராமம் ஆகும். இங்கு அரச காணிகள் பல காணப்படுகின்ற போதும் விளையாட்டு மைதானம் ஒன்று அரசாங்கத்தால் அமைத்து கொடுக்கப்படாமையால் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தமது நேரத்தினை வீணாகப் பொழுது போக்குவதாக குறிப்பிடுவதுடன் அவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்துவதன் மூலம் இளையோரை நல்வழிப்படுத்துவதுடன் திறன்களையும் வளர்த்துக்கொள்ள வழி வகுக்கும் எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி பொது விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும் என மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (4-8-103)



புளொட் அமைப்பின் சுவிஸ் கிளையூடாக வடமராட்சிப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கடந்த வியாழக்கிழமை துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.




ஈழத்தில் உருவாக்கப்பட்ட அகோரன்-2 திரைப்படத்தின் முதல் பார்வை கடந்த 14 ஆம் திகதி இணைய வழியில் வெளியிடப் பட்டது. சுஜந்தன் ஸ்ரீ குமார் தயாரிப்பிலும் அஜிதன்.ஜே இயக்கத்திலும் உருவாகிய இத் திரைப்படத்தின் முதற்பார்வை போஸ்டர் தென்னிந்திய பின்னணிப் பாடகர் வி.வி. பிரசன்னா, மலையாள இயக்குநர் அனில்குமார் ஆகியோரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின், பணத்துடன் பெண்ணொருவர் கைது



(கொழும்பு)

பொறளை-மகசின் வீதியில் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 4 இலட்சத்து 13 ஆயிரத்து 350 ரூபாய் பணத்துடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொறளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகசின் வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு தெற்கு பிரிவுக்குச் சொந்தமான குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது ஹெரோயின் மற்றும் பணத்துடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8)

# 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு இவ் ஆண்டில் கொரோனா தொற்று

(கொழும்பு)

**இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 52 ஆயிரத்து 710 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

அவர்களில் 1,593 பேர் வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் பதிவாகிய மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 96 ஆயிரத்து 186 ஆக உயர்ந்துள்ள நிலையில் அவர்களில் 92 ஆயிரத்து 611 பேர் குணமடைந்துள்ளனர்.

தற்போது 2960 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் 615 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## போலிப் பிக்கு அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை


(கொழும்பு)

மீகலாவ - பகுதியில் அமைந்துள்ள விகாரை ஒன்றில் போலிப் பிக்குவாக வருகைதந்த நபரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மீகலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விகாரை ஒன்றுக்கு தான் ஒரு பிக்கு எனத் தெரிவித்து நபரொருவர் வருகை தந்துள்ளதுடன் அவர் மீது சந்தேகம் கொண்ட விகாராதிபதி அவரிடம் விபரங்களைக் கேட்டு அறிய முயற்சித்த போது குறித்த நபர் அப்பகுதியில் காணப்பட்ட வனப்பகுதிக்கு தப்பி ஓடியுள்ளதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த நபர் ஏதேனும் குற்றச் செயலில் ஈடுபடுவதற்காகவே இவ்வாறு மாறு வேடத்தில் வந்திருக்கலாம் என்று கருதப்படுவதால் சந்தேக நபரை அடையாளம் காணுவதற்காக பொலிஸார் பொது மக்களிடம் உதவி கோரியுள்ளனர். (நி-8)



புத்தாண்டை முன்னிட்டு தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்றது. நேற்றுக் காலை 7.16 மணிக்கு தெற்கு திசை நோக்கி நீல நிற ஆடை அணிந்து தலைக்கு ஆலம் இலை வைத்து ஆலம் சாறு மற்றும் எண்ணெய் வைத்து குளிப்பது இம்முறை புத்தாண்டு சடங்காகும். நிகழ்வில் பிரதமரின் பாரியார் திருமதி. ஷிராந்தி ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சிரிபால கம்லத் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (நி-8)


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1962 – 06 – 25 |  | 2021 – 04 – 16 |

## துரைரத்தினம் சிவகுமார்

(ஒளி KTS லொறி உரிமையாளர்)

அச்சுவேலி வளலாயை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் சிவகுமார் 16.04.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைரத்தினம்-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி- இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபேசன் மற்றும் சந்திரகுமார், காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மல்லிகாதேவி, யோகேஸ்வரி, ராஜவினோதினி, சீவரட்ணம், பராசக்தி, காலஞ்சென்ற சச்சிதானந்தம், காலஞ்சென்ற பேரானந்தம், பவானி, கமலாவதி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும், சிவப்பிரியன் சுகப்பிரதா தசாருதன், தர்சன், சுகன்யா, கஜானன், ஷானுஜா, தனுஷ்யா, ஷாரங்கன், பிரவீனா ஆகியோரின் சிறிய தந்தையும், சரண்யா அபிநயா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சிறுப்பிட்டி மேற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (18.04.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக வளலாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6604)

சிறுப்பிட்டி மேற்கு. தகவல் குடும்பத்தினர்.


# ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல்?


(கொழும்பு)

இலங்கையில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யுமாறு அரசாங்கத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, விரைவில் ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்னிலங்கையில் செயற்பட்டு வருகின்ற கடும் போக்குவாத பௌத்த அமைப்புக்களில் ஞானசார தேரர் தலைமையிலான பொதுபல சேனா அமைப்பு முன்னிலை வகித்து வருகின்றது. முஸ்லிம் மக்களுக்கு விரோதமான அமைப்பாகவே இது கருதப்படுகின்றது.

குறிப்பாக, இனவாத செயற்பாடுகள், பேச்சுக்கள், மஹரகம மற்றும் அளுத்கம பகுதிகளில் ஏற்படுத்திய கலவர நிலைமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஞானசார தேரருக்கு எதிர்ாக காணப்படுகின்றன.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில், பொதுபல சேனா அமைப்பு இனவாத செயற்பாட்டிற்கு ஊக்கமளித்து வருவதால் அதனை தடை செய்ய வேண்டும் என்கின்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.




சிவில் மற்றும் அரசியல் உரிமை பற்றிய சர்வதேச பிரகடனத்திற்கமைவாக, ஞானசார தேரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான பரிந்துரையை ஏற்கனவே ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்திருந்தது. இதன் காரணமாக தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதோடு, எந்தவகையிலும் அந்த அமைப்பின் மீது தடையை அரசாங்கம் பிரயோகிக்காது என்பதை அரச தரப்பு அமைச்சர்களும் பொது மேடைகளில் தெரிவித்து வருகின்றனர்.


இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒப்படைத்த அறிக்கையை மீளாய்வு செய்து பரிந்துரைப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட துணை அமைச்சரவைக் குழுவே வழக்கு தாக்கல் செய்வதற்கான இந்தப் பரிந்துரையை முன்வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை நடிகர் விவேக் காலமானார்

## சோகத்தில் மூழ்கியது திரையுலகம்





(சென்னை)

உடல்நலக் குறைவு காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரபல நடிகர் விவேக் உயிரிழந்துள்ளார்.

நடிகர் விவேக்கிற்கு நேற்று முன்தினம் காலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. இதையடுத்து வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, அங்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டது.

எக்மோ கருவி பொருத்தப்பட்டு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நடிகர் விவேக் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 5 மணியளவில் காலமானார் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத நடிகர்களில் ஒருவராக வலம் வந்தவர் விவேக்.

இவர் தமது நகைச்சுவை மூலமாக மக்களுக்கு தேவையான நல்ல கருத்துக்களை கொண்டு சேர்த்துள்ளார். இவரது மறைவிற்கு திரை உலகத்தினர், அரசியல் தலைவர்கள், பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர். (நி-8)

சமூகத்தின் மீதான அக்கறையை தனது திரைப்படங்களில் பிரதிபலித்தவர் நடிகர் விவேக்.
- மோடி

மனிதர்கள் மட்டுமல்ல... நீ நட்ட மரங்களும் உனக்காக துக்கம் அனுஷ்டிக்கின்றன.
- வைரமுத்து

விவேக்குடன் நடித்த நாட்களை மறக்க முடியாது.
-ரஜினிகாந்

அப்துல் கலாமின் இளவலாக, பசுமைக் காவலராக வலம் வந்த விவேக்கின் மரணம் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு.- கமலஹாசன்

நடிகர் விவேக் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது.
- எடப்பாடி பழனிசாமி

பல்கலை வித்தகரை இயற்கை அவசரமாகப் பறித்ததோ...
-மு.க.ஸ்டாலின்

நடிகர் விவேக் மறைவு தமிழ்ச்சமூகத்திற்கு பேரிழப்பு.
- டி.டி.வி.தினகரன்

மனிதநேயரை, தூய சிந்தனை கொண்ட ஒரு மனிதரை இழந்திருக்கிறோம்.
-கே.எஸ்.அழகிரி

37 இலட்சம் மரம் நட்டு அரசு செய்ய வேண்டியதை தனி மனிதனாக செய்தவர் விவேக்.
-சீமான்

சமூகத்தின் மீது தீரா நேசம் கொண்டவர்.
- பார்த்தீபன்

வார்த்தைகளால் ஆறுதல் சொல்ல முடியாது.
-சத்தியராஜ்

நகைச்சுவை மூலம் சமுதாய சிந்தனைகளை விதைத்தவர் விவேக்.
-தமிழிசை சவுந்தர ராஜன்

சமூகப் பிரச்சினைகளைத் தொடர்ந்து பேசியவர் நடிகர் விவேக்.
- கனிமொழி

விவேக்கின் மறைவு திரைப் படத் துறைக்கும் தமிழ் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.
- ஜி.கே.வாசன்

# உச்சக் கட்டத்தை நெருங்கும் கொரோனாப் பரவல்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

**(ஜெனிவா)**

**சர்வதேச ரீதியில் கடந்த இரண்டு மாதங்களில் கொவிட்-19 தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

கொரோனாத் தொற்று பரவல் உச்சக்கட்டத்தை நெருங்குவதை இது வெளிப்படுத்துவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அச்சம் வெளியிட்டுள்ளது.

பிரேசில், இந்தியா, போலந்து, துருக்கி உள்ளிட்ட மேலும் சில நாடுகளில் கொரோனாப் பரவல் நிலை தீவிரமடைந்துள்ளது.

இதேநேரம், அனைத்துப் பிராந்தியங்களிலும் தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-8)

## 'ஹரிபோட்டர்' நடிகை ஹெலன் காலமானார்

(லண்டன்)

ஹரிபோட்டர் திரைப்பட நடிகை ஹெலன் மெர்க்குரி புற்று நோயால் உயிரிழந்துள்ளார். உலகளவில் மிகவும் புகழ் பெற்ற திரைப்படங்களில் ஹரிபோட்டர் திரைப்படம் முதன்மையானது. ஹரி போட்டர் திரைப்படம் பல்வேறு தொகுப்புகளாக வெளிவந்துள்ளது.

நடிகை ஹெலன் மெர்குரி ஹரிபோட்டர் திரைப்படத்தில் நர்சிசா மல்ஃபய் என்ற கதாபாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பொது இடங்களில் முகக்கவசம் தேவையில்லை

## இஸ்ரேல் அறிவிப்பு



(ஜெருசலேம்)

கொரோனாவுக்கு எதிரான போரில் இஸ்ரேல் வெற்றி பெற்றுள்ளதால் இனி பொது இடங்களில் முகக் கவசம் தேவையில்லை என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் கொரேனாத் தொற்று குறைந்துள்ளதால் பொது இடங்களில் இனி முகக்கவசம் தேவையில்லை என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் மூடிய அரங்கில் நடைபெறும் நிகழ்வுகளில் மக்கள் முகக் கவசம் அணிந்து கொள்ள வேண்டும். எதிர்வரும் ஞாயிறு முதல் இஸ்ரேலில் பொது இடங்களில் மக்கள் முகக்கவசங்கள் அணிந்து கொள்ளத் தேவையில்லை. கொரோனாத் தடுப்பூசியை மக்களுக்கு செலுத்தியதன் காரணமாகவே இந்த நிலையை அடைந்துள்ளோம். தடுப்பூசிகள் பலனளிக்கின்றது என அவர்கள் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 29 ஆவது நாடாக விளங்கும் இஸ்ரேலில் இதுவரை எட்டு இலட்சத்து 36 ஆயிரத்து 740 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு ஆறாயிரத்து 315 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ரஷ்யா மீது புதிய பொருளாதார தடையை விதித்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அரசுத் துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மீது நடத்தப்பட்ட சைபர் தாக்குதலுக்கு ரஷ்யாவே காரணம் என குற்றம் சாட்டப்பட்ட நிலையில் ஜனாதிபதி தேர்தலில் தலையிட்டது மற்றும் அரசுத் துறைகள் மீது சைபர் தாக்குதல் நடத்தியது ஆகிய விவகாரங்களில் ரஷ்யா மீது அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

மேலும் இந்த விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்காவில் உள்ள ரஷ்ய தூதர்கள் 10 பேர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளனர். இதற்கான நிர்வாக உத்தரவை ஜனாதிபதி ஜோபிடன் பிறப்பித்தார். சர்வதேச அளவில் ஸ்திரத்தன்மையை குழப்பும் வகையில் ரஷ்யாவின் நடவடிக்கைகள் தொடர்ந்தால் அதற்கு அமெரிக்கா தகுந்த பதிலடி கொடுக்கும்.

அதேசமயம் ரஷ்யாவுடன் மோதும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.(நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

18.04.2021
சித்திரை 05, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி முன்னிரவு 7.09 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 1.38 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சந்திராஷ்டமம்:-அனுசம், கேட்டை
உலக மரபு தினம், சஷ்டி விரதம்

வளவன்



மேஷம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



ரிஷபம்

நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கிச் செல்லும் எண்ணம் உருவாகும், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும்.



மிதுனம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



கடகம்

குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன்கருதிய பயணங்கள் இட ம்பெறலாம், வழிபாடு இன்பம் தரும்.



சிம்மம்

பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொன்னான நாள், காரிய அனுகூலமுண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.



கன்னி

அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், கனவு பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.



துலாம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.



விருச்சிகம்

வரவும் செலவும் சமமாகும் நாள், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.



தனுசு

குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.



மகரம்

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உடல் நலன் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.



கும்பம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



மீனம்

நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக வரவேண்டிய வரவுகள் வந்து சேரும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

மன்னிப்பு குற்றவாளிகளை உற்பத்தி செய்யும்

# ஜனாதிபதியால் அச்சுறுத்தப்பட்ட முதல் நபர் விஜயதாஸ அல்ல

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் விஜயதாஸ ராஜபக்ஷ மட்டும் அச்சுறுத்தப்படவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையே ஜனாதிபதி அச்சுறுத்தும்போது சாதாரண பொதுமக்களின் நிலை என்ன என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

எனவே மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்களால் நாட்டை ஆட்சி செய்ய ஜனாதிபதியும் அரசாங்கமும் மேற்கொண்ட முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து தொடர்பாக தனது கருத்தை தெரிவிக்க ஜனாதிபதிக்கு உரிமை உண்டு. ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அல்லது சாதாரண மக்களின் கருத்திற்கு பதிலளிக்க பல்வேறு வழிகள் உள்ளன. ஜனாதிபதி ஊடகப் பிரிவு அல்லது அரசாங்க தகவல் திணைக்களம் ஊடாக அந்த அறிக்கைக்கு பதிலளித்திருக்க முடியும்.

நாடு குறித்து முடிவுகளை எடுக்கும்போது மக்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். எனவே தான் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் அங்கீகரிக்க வேண்டும் எனக்கோரி உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (நி-8)

# இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதியில்லை

## வதந்திகளை நம்பவேண்டாம் என்கிறார் நாலக

(கொழும்பு)

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களை அனுமதிப்பதற்கான நிலைப்பாடு அரசிடம் இல்லை என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தபோது, மீனவர் பிரச்சினை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவுள்ளனர் என்று வெளியாகிய பொய்ச்செய்திகளை பொதுமக்கள் நம்பக்கூடாது.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற நாள் முதல் இதுவரை நாட்டைக் காட்டிக்கொடுக்கின்ற எந்தவொரு செயற்பாட்டையும் ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை. இதனால் ஜனாதிபதி மீது பொதுமக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும். அவரது ஆட்சி முறை பற்றி நம்பிக்கை வைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# சீரற்ற காலநிலை காரணமாக 324 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 324 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 365 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் கண்டி மாவட்டத்தின் கங்கவட்டகோரல பகுதியைச் சேர்ந்தவர்கள் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் 195 குடும்பங்களைச் சேர்ந்த 846 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 142 பேர் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற வானிலை காரணமாக வீடொன்று முற்றிலுமாக சேதமடைந்துள்ளதாகவும், 113 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நேற்று முன்தினம் மாலை 6 மணி வரை மின்னல் தாக்கம் மற்றும் வெள்ளத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ரஞ்சனைச் சந்தித்தார் நாமல்



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டார்.

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்ட நாமல் ராஜபக்ஷ, அங்கு ரஞ்சன் ராமநாயக்கவிடம் குறைகளைக் கேட்டறிந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனையை உச்ச நீதிமன்றம் விதித்துள்ளது.

மேலும் அவருக்கு கிடைத்த பாராளுமன்ற பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான அஜித்மன்னப்பெரும நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களின் எதிர்ப்பை சமாளிக்கவே வடக்கில் கைதுகள் இடம்பெறுகின்றன

(நல்லூர்)

**சிங்கள மக்களின் எதிர்ப்பினை சமாளிக்கவே வடக்கில் கைதுகள் இடம்பெறுவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரி வித்துள்ளார்.**

வடபகுதியில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் இடம்பெற்றுவரும் கைதுகள் தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய கோட்டபாய அரசாங்கம் சிங்கள மக்களின் பெரும்பான்மையான ஆதரவோடு ஆட்சி பீடம் ஏறிய போதிலும் தற்போது சிங்கள மக்களின் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகிய நிலை காணப்படுகின்றது.

சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட்டு உள்ளார்கள். பௌத்த துறவிகள் சிங்கள மக்கள் அரசுக்கு எதிராக முழுமையான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். குறிப்பாக ஆட்சிக்கு வரும்போது இந்த அரசாங்கம் நாட்டிற்கு நன்மை புரியும் நீதியை நிலைநாட்டும் நேர்மையான அரசாக இருக்கும் எனவும் சிங்கள மக்கள் விரும்பியே இந்த அரசாங்கத்திற்கு பூரண ஆதரவு வழங்கி ஆட்சிபீடம் ஏற்றினார்கள்.

எனினும் தற்போதைய அரசாங்கமானது இலங்கையின் முக்கிய ஸ்தானங்களை வெளிநாடுகளுக்கு தாரைவார்க்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதன் காரணமாக சிங்கள மக்கள் பௌத்த துறவிகள் தமது எதிர்ப்பினை அரசாங்கத்திற்கு எதிராக வெளியிட்டு வருகிறார்கள்.

வடகிழக்குப் பகுதியில் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளை மீள உருவாக்க எத்தனிக்கின்றார்கள் எனக் காரணங்காட்டி இளைஞர்-யுவதிகளை கைது செய்து சிங்கள மக்களின் எதிர்ப்பினை சமாளிப்பதற்காக வடக்கில் பல்வேறுபட்ட கைது நடவடிக்கைகள் இந்த அரசினால் திட்டமிடப்பட்டு இடம்பெற்று வருகின்றது என தெரிவித்தார். (4-8-33)

# கிளிநொச்சி - ஆனையிறவு குறுந்தூர பஸ் சேவை நடத்தப்பட வேண்டும்

(அக்கராயன்)

பரந்தனுக்கும் திருமுறிகண்டிக்கும் இடையில் பேருந்து சேவைகள் நடைபெறுகின்ற போதிலும் பரந்தனில் இருந்து உமையாள்புரம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி பகுதிகளுக்கு பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் கரைச்சிப்பிரதேச செயலகம், கண்டாவளை பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்ற கூட்டங்களில் கோரிக்கைகளாக பொதுமக்களினால் கடந்த பத்தாண்டுகளாக விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இக்கோரிக்கைகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவு, உமையாள்புரம், தட்டுவன்கொட்டி கிராமங்களுக்கு கிளிநொச்சி நகரத்தில் இருந்து குறுந்தூர பேருந்து சேவைகள் இடம்பெற வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும்.

இக்கிராமங்களில் இருந்து கிளிநொச்சி, பரந்தன் நகரங்களில் உள்ள பாடசாலைகளுக்கு செல்கின்ற மாணவர்களை கூடுதலாக பேருந்துகள் ஏற்றுவதில்லை எனவும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. (4-8-350)



வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய வளாகத்தில் சிவத்தொண்டர் லயன நாகேந்திரம் சுபாதர்ஷன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நகரசபை உறுப்பினர்களான சந்தரகுலசிங்கம், லக்சனா நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-வசந்தரூபன்)



உரும்பிராய் தெற்கு செல்வபுரம் உதயசூரியன் முன்பள்ளியின் 20 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நேற்றுச் சனிக்கிழமை மேற்படி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:-ரவிசாந்)

## சிறுமி உயிரிழப்பு

(ஹற்றன்)

ஹற்றன்-கினிகத்ஹேன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அபர்டீன் நீர்வீழ்ச்சிக்கு நீராடச் சென்ற சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி நீர் வீழ்ச்சியில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் சிறுமி மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (4-8)

# துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானவர்கள் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி -முள்ளி பகுதியில் விசேட அதிரடிப்படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இருவரையும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்துறை நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இருவரையும் இணைய வழி காணொளி தொடர்பாடல் தொழில் நுட்பம் ஊடாக விசாரணை செய்த பதில் நீதவான் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-8)

# கோழி இறைச்சிக்கு வர்த்தமானி

## இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

சந்தைகளில் கோழி இறைச்சிக்குப் பற்றாக்குறை இருப்பதாகவும் இதன் காரணமாகப் புத்தாண்டு கால விருந்துபசாரங்கள் உள்ளிட்ட நிகழ்வுகளில் பொதுமக்கள் அசௌகரிய நிலையை எதிர்நோக்கியுள்ளதாகச் சந்தை வட்டாரங்கள் தகவலை வெளியிட்டுள்ளன.

விநியோகிப்பதற்கு போதுமானளவு கோழி இறைச்சி கிடைக்காமையால், அதனை விற்பனை செய்யும் பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இந்தநிலை தொடருமாயின், நுகர்வோரின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, கோழி இறைச்சி தொடர்பான புதிய வர்த்தமானியை வெளியிடும் நிலை ஏற்படும் என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். (4-8)



ஆரோக்கியமான எதிர்காலம் எனும் தொனிப்பொருளில் முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதார பெறுமதியை மக்களிடம் பிரபல்யப்படுத்துவதற்கான "வாழ்க்கைக்கான தோட்டம்" எனும் தேசிய வேலைத்திட்டம் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)

# தாக்குதல் மேற்கொண்டவர்கள் பிணையில் விடுவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி- முரசுமோட்டை பகுதியில் பெண் உட்பட மூன்று பேர் மீது தாக்குதல் மேற்கொண்ட நான்கு சந்தேக நபர்களையும் கடும் நிபந்தனைகளுடன் தலா இரண்டு இலட்சம் பெறுமதியான ஆட் பிணைகளில் செல்லுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இரவு கடைக்கு பொருட்களை வாங்கச் சென்ற இரண்டு சகோதரர்கள் மீது மதுபோதையில் இருந்தவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

இதனை கேட்பதற்கு சென்ற அவர்களது தாயார் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் அணிந்திருந்த தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டதாகவும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட நான்கு சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியதை யடுத்து குறித்த நான்கு பேரும் கடும் நிபந்தனைகளுடன் தலா 2 லட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டனர். (4-8-350)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒன்பது மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட

## சிவப்பு எச்சரிக்கை - வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு கடுமையான மின்னல் மற்றும் இடியுடன் கூடிய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களிலும் பொலநறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் 75 மி.மீக்கும் அதிகமான மழை பெய்யக் கூடும். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

அதன்படி, முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை மற்றும் மொனராகலை உட்பட்ட 9 மாவட்டங்களுக்கு வானிலை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடி மின்னல் காரணமாக ஏற்படும் சேதத்தை குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இடியுடன் கூடிய மழைக்காலங்களில் நெல் வயல்கள், தேயிலைத் தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி நீர்நிலைகள் போன்ற திறந்த பகுதிகளை தவிர்க்கவேண்டும். அத்துடன் கம்பி தொலைபேசி மற்றும் இணைக்கப்பட்ட மின்சார சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

ஈருருளி, உழவியந்திரங்கள் மற்றும் படகுகள் போன்ற திறந்த வாகனங்களைப் பயன் படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என வானிலை மையம் அறிவுறுத்தியுள்ளது. (நி-8)

# பொலித்தீன் உற்பத்திகளுக்கான தடை; முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை

## அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர் சங்கம் குற்றச்சாட்டு


(கொழும்பு)

பொலித்தீன் உற்பத்திகள் சிலவற்றை அரசாங்கம் தடை செய்திருந்தாலும், அது தொடர்பான சட்டம் நடைமுறையில் இல்லை என அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உரிய முகாமைத்துவமின்றி, இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சஷே பைக்கற்று உள்ளிட்ட 6 பொலித்தீன் உற்பத்திகளுக்கு கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

சுற்றுச்சூழல் மாசடைவதை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



எவ்வாறிருப்பினும், குறித்த தடை மூலம், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் உரியவாறு நிறைவேற்றப்படவில்லை என பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அநுர விஜேசிங்க தெரிவித்தார்.

தடை செய்வதன் மூலமாக மாத்திரம், இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முடியாது. குப்பை முகாமைத்துவம் தொடர்பில் இதனைவிடவும் விரிவாக சிந்திக்க வேண்டும்.

20 மில்லிமீற்றருக்கு குறைந்த அளவான சஷே பக்கெற்றுக்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

எனினும் அதே கொள்ளளவையுடைய சோஸ் மற்றும் மருந்து பைக்கற்றுக்களுக்கு தடை விதிக்கப்படவில்லை.

இவற்றினூடாக, சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதா? என பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். (நி-8)

# துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் பரிசீலனைக்கு

(கொழும்பு)

அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் 19 விசேட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவை அனைத்தையும் நாளை திங்களன்று பரிசீலனைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் பட்டியலிட்டுள்ளது. (நி-8)

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதமளவில் சமையல் எரிவாயுவின் விலை 195 ரூபா முதல் 200 ரூபாவரையில் அதிகரிக்கக்கூடும் என அரச வட்டார தகவல் தெரிவித்துள்ளன.

12.5 கிலோ கிராம் எடையுடைய லிற்றோ நிறுவனத் தின் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 700 ரூபாவிலும் லாப் நிறுவனத்தின் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 655 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கேட்டுக் கொண்டுள்ளதாக அந் நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்[illegible] துடன் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி யடைந்துள்ளதனால் தமது நிறுவனங்களுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தற்போது காணப்படும் விலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை தொடர்ந்தும் விற்பனை செய்வதற்கு முடியாதென அந்நிறுவனங்கள் அரசாங்கத்திடம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளதாவது. "சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பதற்கு நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ள போதி[illegible] இறுதித் தீர்மானம் [illegible]ல்லை" என தெரிவித்தார். (நி-8)

# துறைமுக நகரம் சீன காலனியாக மாறும் என்பது ஆதாரமற்ற கருத்து

(கொழும்பு)

துறைமுக நகரம் ஒரு "சீன காலனியாக" மாறும் என்று அரசாங்க தரப்பு உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஆதாரமற்றவை என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட குறித்த சட்டம் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு ஒரு திருப்பு முனையாக கருதுவதாகவும், நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் உள்ளூர் சட்டங்களின் கீழ் இணங்குவதை உறுதி செய்வதற்கு போதுமான பாதுகாப்பு கட்டமைப்புக்கள் உள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

துறைமுக நகர ஆணைக் குழுவின் செயற்பாடுகள் மூலம் தேசிய நலன்களைப் பாதுகாப்பதை உறுதி செய்வதற்கு பரந்த அளவிலான அதிகாரங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொண்டிருப்பதாகவும் கப்ரால் தெரிவித்தார்.

இலங்கையின் கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விகிதம் 98வீதமாக உயர்ந்து வருவதால், அடுத்த சில ஆண்டுகளில் அதிக கடன் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் துறைமுக நகரத்தின் பொருளாதார திட்டம் அவசியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகவே குறித்த சட்டமூலம் இலங்கை அரசியலமைப்பிற்கு முரணானது என தாங்கள் நம்பவில்லை என்றும் உயர் நீதிமன்றமும் அதை அவதானிக்கும் என நம்புவதாகவும் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (நி-8)

# சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்களின் நடத்தை கவலையளிக்கின்றது

**சுதத் சமரவீர**

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்கு மத்தியில் சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் நடந்துகொண்ட விதம் வருத்தமளிப்பதாக தலைமை தொற்றுநோயியல் நிபுணர் சுதத் சமரவீர கவலை வெளியிட்டுள்ளார்.

பொதுமக்களின் இந்த நடத்தைகளின் விளைவாக கடுமையான, எதிர்மறையான தாக்கம் எதிர்காலத்தில் வெளிப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சுகாதார ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் தற்போது பொறுப்பற்ற வாழ்க்கை முறையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் இந்த நிலைமை தொடர்ந்தால் சுகாதார விதிமுறைகளை கடுமையான முறையில் செயற்படுத்த வேண்டி ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்குவது தொடர்பான இறுதி முடிவை அடுத்த வாரம் சுகாதார அமைச்சு அறிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 |
| தக்காளி | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 50 |
| கோவா | 120 | 160 |
| கரட் | 160 | 280 |
| பூசணி | 70 | 80 |
| புடோல் | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 |
| பாகற்காய் | 200 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 |
| பயற்றங்காய் | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 160 |
| பீற்றூட் | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 600 |
| போஞ்சி | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 |
| கீரை - 1 பிடி | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50-80 |
| இராசவள்ளி | 180 | 200 |
| வெங்காயப்பூ | -- | 240 |
| முள்ளங்கி | 100 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 40 |
| வல்லாரை | 20 | 40 |
| ஈரப்பலா | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாழ்க்கைக்கான தோட்டம்'' தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்



(மன்னார்)

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதாரப் பெறுமதியை மக்களிடம் பிரபல்யபடுத்துவதற்கான "வாழ்க்கைக்கான தோட்டம்" தேசிய வேலைத்திட்டத்தின் மாவட்டமட்ட ஆரம்ப நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் முருங்கன் கமநல சேவைகள் நிலையைத்தில் இடம்பெற்றது.

கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளார் அன்ராணி மெரின் குமார் தலைமையில் இடம்பெற்ற குறித்த தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரன்லி டி மேல், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் திருச்செல்வம் பரஞ்ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 13 ஆயிரம் முருங்கை மரக் கன்றுகளை இலவசமாக வழங்கும் குறித்த நிகழ்வில் 400 முருங்கை மரக் கன்றுகள் முருங்கன் கமநல பிரிவு பகுதி மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதாரப் பெறுமதியை மக்களிடம் பிரபல்யபடுத்துவதற்கான வாழ்க்கைக்கான தோட்டம் என்னும் தேசிய வேலைத் திட்டத்திற்காக புது வருடத்தில் தலையில் எண்ணெய் பூசும் சுபநேரத்தில் வைபவ ரீதியாக குறித்த தேசிய வேலைத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

மத ஸ்தலங்களில் இலவசமாக முருங்கை மரக்கன்றுகள் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-8-285)

# பச்சிலைப்பள்ளியில் 175 குடும்பங்களுக்கு சொந்த காணிகள் இல்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சுமார் 175 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் சொந்த காணிகள் இன்றி வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இதுவரை 4632 வ்ரையான குடும்பங்கள் மீள்குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் குறித்த பிரதேசத்தில் காணப்பட்ட காணிகளற்ற 530 குடும்பங்களுக்கு புதிய காணித் துண்டுகள் வழங்கப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதாரம், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேலும் 175 குடும்பங்கள் இதுவரை காணியற்ற குடும்பங்களாக வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் மீள்குடியேறிய சுமார் 4 ஆயிரத்து 632 குடும்பங்களில் 3665 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் 748 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த பிரதேசத்தில் 1810 குடும்பங்களுக்கான வாழ்வாதார வசதிகளையும் ஏற்படுத்த வேண்டிய தேவை இருப்பதாகவும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-315)





மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் மற்றும் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்தும் திருக்குறள் விழா நேற்று முன்தினம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி.ந.ரஞ்சனா தலைமையில் நடைபெற்றது. (படம்- தேவானந்தன், கிருஸ்ணகுமார்)

# திருக்குறளின் வழியில் அனைவரும் பயணிக்க வேண்டும்

(அக்கராயன்)

திருக்குறளில் கூறப்பட்டுள்ளது போல் வாழ்வினை அமைத்துக் கொண்டால் பிரச்சினைகள் ஏற்படாது என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருக்குறள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளிலே வாழ்விற்கேற்ற வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

அவ் வழிமுறைகளை நாம் பின்பற்றுவதில்லை. செய் நன்றியையே மறந்து செயற்படுகின்றோம். இல்லறம் தொடர்பாக திருக்குறளில் கூறப்பட்டுள்ள விடயங்களைக் கடைப்பிடித்தாலே குடும்பங்களில் பிரச்சினைகள் எழாது.

இள வயது திருமணங்கள் கூடுதலாக தற்போது நீதிமன்றம் வரை பிரச்சினைகளாகச் செல்கின்றன. திருக்குறளிலே வாழ்வின் எல்லாப் பக்கங்களுக்குமான அறிவுரைகள் இருக்கின்றன. ஆனால் நாம் அதனைக் கடைப்பிடிப்பதில்லை. இளைய தலைமுறை திருக்குறள் வழியிலே பயணிக்க வேண்டும்.

ஒருவர் செய்கின்ற உதவியினை எப்போதும் மறக்கக் கூடாது என்பது திருக்குறளில் கூறப்பட்டுள்ளது. இதனை எல்லோர் மனங்களிலும் விதைக்க வேண்டும்.

மாணவர்களிடையே கூடுதலாக திருக்குறள் தொடர்பான அறிவுரைகள், போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்தார்.(4-8-316-350)

# நிரந்தர வீடுகள் இன்றி தவிக்கும் குடும்பங்கள்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் நிறைவடையாத காரணத்தினால் தாம் இருந்த தற்காலிக கொட்டகையை இழந்து தற்பொழுது வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முன்னைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்திற்கான கொடுப்பனவுகள் பூரணமாக தமக்கு கிடைக்கப்பெறவில்லை எனவும் தற்பொழுது இருப்பதற்கு ஓர் வீடும் இன்றி தற்காலிக கொட்டகைகளில் எந்தவித பாதுகாப்பும் இன்றி வசித்து வருவதாகவும் மழைகாலம் மழை வெள்ளத்தில் தாங்கள் சீரழிவதாகவும் அயல் வீடுகளில் தஞ்சம் அடைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி தமக்கான சமுர்த்தி கொடுப்பனவு கடந்த 2020, ஒக்டோபர் மாதத்திலிருந்து ஆறு மாத காலமாக தமக்கு வழங்கப்படவில்லை எனவும் அந்தப் பணத்தை நம்பியே தாம் வாழ்ந்து வருவதாகவும் தற்பொழுது அதுவும் கிடைக்கா மல் போய் உள்ளதால் தாங்கள் மிகவும் வறுமையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமக்கு ஒரு வீட்டினை தந்துதவுமாறும் இல்லாவிடின் ஒரு தற்காலிக கொட்டகையையாவது அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-8-316)




# 'இன உறவுகளும் வரலாறும்' நூல் வெளியீடு

(மன்னார்)

முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஜெயசீலன் ஞானசீலன் எழுதிய "இன உறவுகளும் வரலாறும்" எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை




மற்றும் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா,வவுனியா வளாக முதல்வர் கலாநிதி தம்பு மங்கலேஸ்வரன், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். ரி.விக்னராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.(4-8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியம் இல்லாமல் இதயத்தைச் சுத்தப் படுத்திக் கொண்டே இருந்தால் போதும், அவனுக்கு அனைத்தும் நல்லவையாக அமையும். ~ ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# உயிர்கொடுத்த விவசாயிகள் இழப்பீடு யார் கொடுப்பர்

மின்னல் தாக்கி மூன்று விவசாயிகள் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் உயிரிழந்து போன சம்பவம் மிகப்பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயப் பணிக்காக வேளாண் செய்நிலத்தில் நின்றபோது மின் தாக்கியதில் மூன்று விவசாயிகள் அந்த இடத்திலேயே பலியாகிப் போயினர்.

அவர்களின் கதை ஒரு கணப்பொழுதில் முடிந்து போயிற்று. இனி விளக்கம் விசாரணை என்பதோடு, மின்னல் தாக்கியதால் மரணம் ஏற்பட்டது என்ற எழுத்துமூலத்துடன் சட்டமும் தனது கடமையை முடித்துக் கொள்ளும்.

ஆனால் அந்த மூன்று விவசாயிகளையும் நம்பியிருந்த அவர்களின் குடும்பங்களின் கதி பற்றி யார் சிந்திக்கப் போகின்றார்கள் என்பதுதான் நம்மிடம் எழக்கூடிய கேள்வி.

ஆம், இது இலங்கைத் திருநாடு. இங்கு ஆட்சிக்குரிய சிங்கள மக்கள் பெரும்பான்மையினம்.

அந்தப் பெரும்பான்மை இனம் இரங்கினால் மட்டுமே ஏதேனும் இழப்பீடு கிடைக்கும் என்ற அவலநிலையில் வாழும் தமிழ் மக்கள் சிறுபான்மையினம்.

ஒரு நாட்டுக்குள் இப்படியொரு வஞ்சகம். இந்நிலையில் முல்லைத்தீவில் மின்னல் தாக்கி உயிரிழந்த மூன்று விவசாயிகளின் குடும்பங்கள் எதிர்கொண்டுள்ள அவலம் அரச வாசலைச் சென்றடையுமா? என்பது கேள்விக்குரியது.

இதை நாம் கூறும்போது மின்னல் தாக்கி மூன்று விவசாயிகள் உயிரிழந்த செய்திகூட மத்திய அரசாங்கத்தை எட்டியிருப்பது சந்தேகமாக இருக்கும்போது; உயிரிழந்தவர்களின் குடும்பத்தின் அவலம் பற்றிச் சிந்திக்கின்ற அளவுக்கு மத்தியின் கருசனை இருக்கப் போவதில்லை.

இந்நிலையில் இத்தகைய மரணங்கள் ஏற்படும்போது அவர்களின் குடும்பங்களுக்கு உதவுகின்ற ஏற்பாடுகளை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆம், புலம்பெயர் உறவுகளினதும் எங்கள் தாயக உறவுகளினதும் நிதி உதவிகளுடன் ஒரு பலமான அமைப்பை வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் உருவாக்குவது கட்டாயமானது. இத்தகைய அமைப்புக்களை மாவட்டங்கள் தோறும் அமைத்தால்கூட, அது இன்னமும் கனதியானதாக இருக்கும்.

எனவே இதுபற்றியும் நம் பொது அமைப்புகள் சிந்திக்க வேண்டும்.

தவிர, வேளாண்மை செய்து தங்கள் குடும்பத்தைப் பாதுகாக்க நினைத்த மூன்று விவசாயிகள் மின்னல் தாக்கி உயிரிழந்தனர் எனில், அதற்கான இழப்பீடு என்னவென்பது பற்றிய ஒரு பொதுவான - தெளிவான அறிவிப்பை அரச தரப்பு வெளிப்படுத்துவதும் இங்கு அவசியமாகின்றது.

# துறைமுக விவகாரம் விவாதத்திற்கு எடுக்கப்பட்டால் தேசத் துரோகிகளை அடையாளம் காணலாம்

## எல்லே குணவங்ச தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

துறைமுக நகரைச் சீனாவுக்கு வழங்குவது சம்பந்தமான சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்த பின்னர் தேசப்பற்றாளர்களையும், தேசத்துரோகிகளை அடையாளம் காண முடியும் என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

துறைமுக நகரத்தின் எதிர்கால நடவடிக்கைகள் இலங்கையின் மாகாணசபைகள், நகரசபை முறை உட்பட இலங்கை அரசின் நிர்வாக முறைக்கு அப்பால் சென்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை துறைமுக நகரின் கணக்காய்வுகளில் தலையிட முடியாது என்ற நிலைமை உருவாகும் என்பதால், குறித்த சட்டத்தை பாராளுமன்றத்தில் அனைவரும் எதிர்க்க வேண்டும்.

எமது நாட்டை கடல் பரப்பு உலகில் பிரிக்கின்றது. கட்லை நிரப்பியே துறைமுக நகரம் உருவாக்கப்பட்டது. எமது நாட்டின் வரைப்படமும் தற்போது மாறியுள்ளது. உருவாக்கப்பட உள்ள துறைமுக நகருக்குள் நாம் செல்ல முடியாது.

அதற்கு வெளிநாட்டு நாணயங்கள் மூலமே கொடுக்கல் வாங்கல் நடைபெறும். இது தனியான நாடு. நாட்டை பிரிக்க பராளுமன்றத்தில் சட்ட மூலத்தைக் கொண்டு வருகின்றனர்.

நாட்டை நேசிக்கும் அறிவுஜீவிகள் இது குறித்து அமைதியாக இருப்பார்கள் எனில், எமக்கு உண்மையான தேசப்பற்றாளர்களையும் தேசத் துரோகிகளையும் இலகுவாக அடையாளம் காண முடியும். அரச துரோகியாக கூட இருக்கலாம், ஆனால் தேசத் துரோகியாக மாறுவது நல்லதல்ல. சீனா எமக்குக் கடனை அள்ளி கொடுக்கின்றது.

அவை டொலர்கள் அல்ல, சீனாவின் யுவான். எமக்கு இது பற்றி சரியாகத் தெரியாது. எனினும் சீனா தனது கொடுக்கல், வாங்கலைச் சரியான முறையில் தீர்த்துக் கொள்கிறது.

கடல் என்பது எமது வளம். கடலுக்குள் இருக்கும் கனிய வளம் பற்றி தற்போது யாரும் பேசுவதில்லை. அதுவும் சீனாவுக்கா என்பது எமக்குத் தெரியாது எனவும் எல்லே குணவங்ச தேரர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# வவுனியாவில் இராணுவத்தினரை மோதித் தள்ளிய கடத்தல் வாகனம்

(வவுனியா)

வவுனியாவில் சட்டவிரோத மரங்க்ளை கடத்திச் சென்ற வாகனம் மோதியதில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்

எ9 வீதியில் இருந்து வவுனியா நோக்கி மரங்களை ஏற்றி சென்ற வாகனத்தினை ஓமந்தை நகர் பகுதியில் அமைந்துள்ள சோதனை சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் வழிமறித்துள்ளனர்.

இதன்போது மரக் கடத்தல்காரர்கள் வாகனத்தினை நிறுத்தாமல் ஓட்டிச் சென்றதுடன் கடமையில் இருந்த இராணுவத்தினர் மீதும் மோதியுள்ளனர்.

இதனால் நீண்ட தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட இராணுவ வீரர் ஒருவர் வீதியில் வீசப்பட்ட நிலையில் படுகாயமடைந்துள்ளதுடன் மற்றொரு சிப்பாயும் காயங்களிற்குள்ளாகியுள்ளார்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வுவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மரங்களை கடத்திச் சென்ற வாகனம் வீதிக் கரையில் விபத்திற்குள்ளாகி நின்றதுடன் அதன் சாரதி தப்பித்து சென்றுள்ளார்.

அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

(ம-3,250 ,299)

# கொரோனாவின் பிடிக்குள் தமிழ்நாடு

(சென்னை)


நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொரோனா பாதிப்பின் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் நேற்று பத்தாயிரத்திற்கு நெருங்கிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை வரையான நிலைவரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 9 ஆயிரத்து 344 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில் 39 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து தமிழ்நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 9 இலட்சத்து 80 ஆயிரத்து 728 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## தெய்வீகத் தன்மை வேண்டும்

❖ எவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை ஏமாற்றிக் கொண்டு தன்னைப் பக்திமான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறானோ அவனுடைய பக்தி பொய்யானது.

❖ வெளிச்சத்தில் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தன் சகோதரனையே பகைக்கின்றவன் இன்னும் இருளிலேயே இருக்கின்றான்.

❖ நையாண்டிக்காரன் அறிவைத் தேடுகிறான். அதை அவன் கண்டறிவதில்லை. ஆனால், உணர்வுள்ளவனுக்கோ அறிவு வெகு சுலபமாய் வரும்.

❖ எந்த ராஜாவும் தன் படைபல மிகுதியால் இரட்சிக்கப்பட மாட்டான். எந்தப் பலமான மனிதனும் தன் பலத்தின் மிகுதியினால் தப்பிவிட மாட்டான்.

❖ பணம் படைத்தவன் கடவுளின் ராஜ்யத்திற்குள் நுழைவதை விட, ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைவது அதிகச் சுலபம்.

❖ சரீர முயற்சியின் பலன் சிறிதளவே. ஆனால், தெய்வீக தன்மையோ அதிகமான பலன் தரும். எந்த விடயத்திலும் பலனுள்ளது, இப்போதைய வாழ்விற்கும், இனி வரப்போகும் வாழ்விற்கும் உறுதி தருவதாக இருக்கும்.

❖ அக்கிரமக்காரர்கள் எதிர்பார்ப்பு அழிந்தே போகும். நேர்மையானவன் இடைஞ்சலில் இருந்து விடுபடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை

## சிந்தித்து செயற்பட்டால் சந்தோசம் வரும்!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**மீன இராசி வாசகர்களே!**

பிறக்கும் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் குரு, விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதே நேரத்தில் இலாபாதிபதி சனி, இலாப ஸ்தானத்தில் பலம் பெற்றிருக்கிறார். எனவே வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்களும் கூடுதலாகவே இருக்கும். சில நேரங்களில் வீண் விரயங்கள் கூட ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு, இடமாற்றங்கள் தானாக வந்து சேரலாம். கொடுக்கல் - வாங்கல்களில் கவனத்துடன் இருக்க வேண்டிய ஆண்டு இது.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான், விரய ஸ்தானத்தில் இருக்கிறார். தொழில் ஸ்தானத்திற்கும் குரு அதிபதி என்பதால் தொழிலில் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். இயல்பான வாழ்க்கையில் சில இடையூறுகள் ஏற்பட்டு மனச் சங்கடத்தை உண்டாக்கும். கூட்டுத் தொழில் நடத்துபவர்களுக்கு கூட்டாளிகளால் பிரச்சினைகள் ஏற்படும். அவர்கள் உடனடியாக விலகுவதாகச் சொல்லி அச்சுறுத்துவர். சனி பகவான் சொந்த வீட்டில் சஞ்சரித்தாலும் அதன் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தேக ஆரோக்கியத்தில் தொல்லைகள் வரலாம். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் திருப்தியாக கிடைக்காது.

தன ஸ்தானத்தில் நான்கு கிரகங்களின் சேர்க்கை உள்ளது. சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் ஆகியவை ஒன்று கூடி கூட்டுக்கிரக யோகத்தை ஏற்படுத்தினாலும் தனாதிபதி செவ்வாய், ராகுவோடு சேர்ந்திருப்பதால் விரயங்களையே அதிகம் சந்திப்பீர்கள். புத- ஆதித்ய யோகம், புத- சுக்கிர யோகம், செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை யோகம் போன்ற யோகங்கள் செயற்படுகின்றன. இதன் விளைவாக கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் யோகம் உண்டு.

அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமின்றி அழகுப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றையும் வாங்கி மகிழக்கூடிய நேரம் இது. பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள். 'பட்டப்படிப்பு முதல் மேல்படிப்பு வரை, படிக்க விரும்பும் பிள்ளைகளைப் படிக்க வைப்பதா? அல்லது வேலைக்கு சேர்த்து விடுவதா? அல்லது வேலையில் இருந்து கொண்டே படிப்பை தொடரச் சொல்வதா?' என்றெல்லாம் உங்கள் மனதில் எண்ணம் கரை புரண்டு ஓடும்.

செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் முன்பு வாங்கிப் போட்ட இடங்களெல்லாம் பலமடங்கு விலைக்கு விற்பனை ஆகலாம். உடன் பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். பாகப்பிரிவினைகளில் உங்களுக்குரிய பங்கு கிடைக்க பெரும் பிரயாசை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அதோடு 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குரு பகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதனாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு பகவான், வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். உடல்நலக் குறைபாடு அதிகரிக்கும். மருத்துவச் செலவுகளால் மனக்கலக்கம் ஏற்படலாம். சங்கிலித் தொடர்போல கடன் சுமை கூடிக்கொண்டே செல்லும்.

**குருப்பெயர்ச்சி காலம்**

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குரு பகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். 13.4.2022 இல் மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. சுக ஸ்தானம், எதிரிகள் ஸ்தானம் மற்றும் இழப்புகள் ஸ்தானம் ஆகிய மூன்றின் மீதும் குரு பார்வை பதிவதால் அந்த இடங்கள் புனிதமடைந்து நற்பலன்களை வழங்கும்.

குறிப்பாக சுக ஸ்தானம் புனிதமடைவதால் ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். ஆச்சரியப்படத்தக்க அளவில் உடல் நலனில் முன்னேற்றமும் உற்சாகத்துடன் பணிபுரியும் வாய்ப்பும் கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் வெற்றி உண்டு. நோயின் தாக்கம் அதிகமாக இருக்கின்றது என்று சொன்ன மருத்துவர்கள், இப்பொழுது படிப்படியாக நோயின் தாக்கம் குறைந்து உடல்நலம் சீராகிக் கொண்டு வருகிறது என்று ஆச்சரியப்படுவர்.

குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் பகையை வெல்லக்கூடிய ஆற்றல் உங்களுக்கு வந்துசேரும். எதிரிகள் உதிரிகளாவர். 'பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது தானாகவே கிடைக்கும். பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு உருவாகும். மேலதிகாரிகள் நீங்கள் கேட்ட சலுகைகளை வழங்க காத்திருப்பர். தொழில் செய்பவர்களுக்கு இருந்த குறுக்கீடுகள் அகலும்.

**ராகு-கேது பெயர்ச்சி காலம்**

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 2 ஆம் இடத்திற்கு ராகுவும் 8 ஆம் இடத்திற்கு கேதுவும் வரப் போகிறார்கள். 'இரண்டில் ராகு இருந்தால் திரண்ட செல்வம் வரும்' என்பார்கள். எனவே எதிர்பாராத தன இலாபம் வரலாம். இதுவரை பற்றாக்குறை பட்ஜெட்டில் உழன்று வந்த நீங்கள் இனி மிதமிஞ்சிய பொருளாதாரத்தில் மிதக்கப் போகிறீர்கள். குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் யோகம் வந்து சேரும். கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெறும். புதிய வாய்ப்புகள் பலவும் வாசல் கதவைத் தட்டும். புனிதப் பயணங்கள் வந்து சேரும்.

அஷ்டமத்தில் கேது அடியெடுத்து வைப்பதால் இழப்புகள் பலவற்றையும் சந்திக்க நேரிடலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. தொழில் சம்பந்தமாக குறுக்கீடுகள் வந்து சேரும். கொடுத்த கடன்கள் வசூலாகுவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் வந்தும், அதை ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகலாம். கேட்ட சலுகைகள் மறுக்கப்படும்.




உங்களுக்கு வரவேண்டிய பெரிய வாய்ப்பு, உடன் பணிபுரிபவர்களுக்கு சென்றால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுபோன்ற காலங்களில் ராகு- கேதுக்களுக்குரிய சிறப்பு பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

**சனியின் வக்கிர காலம்**

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அதாவது இலாப ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியாக இருப்பவர். விரயாதிபதியாக விளங்குபவர் வக்கிரம் பெறுவது நன்மைதான்.

ஆனால் இலாபாதிபதியாகவும் அவர் விளங்குவதால் சனி வக்கிரம் பெறும் பொழுது பணத்தட்டுப்பாடும் அதிகரிக்கும். உறவினர் பகை உருவாகும். அரசு வழிப் பிரச்சினைகள் ஏற்படும். வீடுமாற்றச் சிந்தனைகளும் ஊர் மாற்றச் சிந்தனைகளும் உருவாகும். பொதுவாக இதுபோன்ற வக்கிர காலங்களில், சனிக்கிழமை விரதமிருந்து சனிபகவானை வழிபடுவது நல்லது.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

14.4.2021 முதல் 3.6.2021 வரை. 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய்- சனி பார்வை உள்ளது. இந்த காலகட்டத்தில் பொதுநலத்தில் இருப்பவர்கள் மீது வீண்பழிகள் சுமத்தப்பட வாய்ப்பு உள்ளது. பிறருக்கு நன்மை செய்தாலும் அது அவர்களுக்குத் தீமையாகவே தெரியும். கடுமையாக உழைத்தாலும் வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். சொத்துக்களாலும் பிரச்சினை உருவாகலாம். எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் உங்களுக்கு பொருளாதார விருத்தி ஏற்படும். என்றாலும் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். புதிய ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள்.

தாய்வழி ஆதரவு திருப்தி தரும். சகோதர வழியில் ஒருசிலர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வது சந்தேகம்தான். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வு திருப்தி தரும். என்றாலும் வேலைப்பளு அதிகரிக்கும். செவ்வாய் - சனி பார்வை காலத்தில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. குரு வழிபாடு வளர்ச்சிக்கு வித்திடும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுவதோடு, வள்ளி - தெய்வானை உடனாய ஆறுமுகப் பெருமானை அனுகூலம் தரும் நாளில் வழி ட்டு வந்தால் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் 2 பேர்...

பட்ட மேலும் 2 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 617ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## மானிப்பாயைச்...

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவரே நேற்று உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

சிறுநீரக செயலிழப்பு நோயினால் பாதிக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார்.

பெண்ணின் சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் மின்தகனம் செய்யப்படவுள்ளது. (ம-3,33)

## வெளிநாட்டில்...

தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்படுவதால் வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு மேலும் புதிய கட்டுப்பாடுகளை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் வைத்தியர் சுதத் சமரவீர இதனை தெரிவித்தார். (ம-3)

## கிளிநொச்சி...

உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு அன்று இரவு 9 மணியளவில் சிவபுரம் கிராமத்தில் இரு நபர்களிற்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வீதியால் பயணித்த உயிரிழந்த குறித்த நபர் சம்பவ இடத்தில் முரண்பட்டுக் கொண்டிருந்த அவரது உறவினரிடம் என்ன சத்தம் என வினவியுள்ளார்.

இதன்போது குறித்த நபர் மீது மற்றைய நபர் தாக்குதல் மேற்கொண்டதாகவும், சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து தாக்குதலில் படுகாயமடைந்தவரை கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

தொடர்ந்து அவர் மேலதிக சிகிச்சைகளிற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,100,315)


## காணி தேவை

திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், தாவடி, இணுவில், இராசபாதை ஆகிய இடங்களில் 1½ - 2 பரப்புக் காணி தேவை.

தொடர்பு

077 854 6369

(தரகர்கள் தேவையில்லை)


## யாழ்ப்பாணத்தில் 10...

நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 12 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நால்வருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் சுயதனிமைப் படுத்தலில் உள்ளவர்.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி இருவரும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு, சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகியவற்றில் தலா ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் நால்வரும் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது. அவர்கள் இருவரும் முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டவர்கள்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## யாழ்ப்பாணத்தில்...

போதனா வைத்தியசாலையில் தனிமைப் படுத்தலில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பொலிஸார் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் தொற்றுக்குள்ளான பொலிஸாரின் எண்ணிக்கை 3 ஆக அதிகரித்துள்ளது. (ம-3,18,33)




## சின்னக் கலை...

குண்டுகள் முழங்க அரச மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

மாரடைப்பால் நேற்று அதிகாலை மரணமடைந்த விவேக்கின் உடல் விருகம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அங்கு அவரது நண்பர்கள், திரைத்துறை பிரபலங்கள், நடிகர்கள், நடிகைகள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து மாலை 4 மணியளவில் விருகம்பாக்கத்தில் இருந்து, மேட்டுக்குப்பம் பகுதியில் உள்ள மின் மயானத்திற்கு அவரது உடல், ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் ஏராளமான திரையுலக பிரபலங்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

விவேக்கின் புகழுக்கு பெருமை சேர்க்க, அவரது கலை, சமூகச் சேவையை கௌரவிக்கும் விதமாக-அரச மரியாதையுடன், அவரது உடலை அரசு தகனம் செய்ய தேர்தல் ஆணையம் அனுமதி அளித்திருந்தது.

அதன்படி நடிகர் விவேக்கின் உடலுக்கு, 78 துப்பாக்கிக் குண்டுகள் முழங்க அரச மரியாதை அளிக்கப்பட்டது. இதையடுத்து காவல்துறை சார்பில் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதையடுத்து விவேக்கின் உடலுக்கு அவரது மகள் இறுதிச் சடங்குகளை செய்தனர்.

பின்னர் நடிகர் விவேக்கின் உடல், மேட்டுக்குப்பத்தில் உள்ள மின் மயானத்தில் எரியூட்டப்பட்டது. (ம-3)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## யாழில் முடக்கப்...

பங்களை முடக்கலில் இருந்து விடுவிப்பதா இல்லையா என்பதை 2 வாரங்களின் பின்பே தீர்மானிக்க முடியும் என மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது,

மாவட்டத்தில் திரையரங்குகள், திருமண மண்டபங்கள், பொது நிகழ்வுகள், திருநெல்வேலி பாரதிபுரம் கிராமம் ஆகியன முடக்கப்பட்டிருக்கின்றது.

பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் திங்கட்கிழமை தொடக்கம் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் திருமண மண்டபங்கள், திரையரங்குகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கும்.

அதேபோல் திருநெல்வேலி சந்தையுடன் தொடர்புடைய பாரதிபுரம் கிராமமும் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கும்.

அவற்றை முடக்கலில் இருந்து நீக்குவதா? இல்லையா? என்பதை அடுத்த இரு வாரங்களுக்கு பின்பே தீர்மானிக்கலாம் எனவும் பணிப்பாளர் கூறியுள்ளார். (ம-3)

## பயங்கரவாத...

புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தைச் சேர்ந்த நடன சபேசன் லோகராசா (வயது-45) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மறுவாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் முனைப்பில் ஈடுபட்டனர் என்று சந்தேகத்தின் அடிப்படையில் 24 மணித்தியாலத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 5 பேரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்படவுள்ளனர். (ம-3,18,33,281)

## ஜனாதிபதி...

யுள்ளார் எனவும் விஜயதாஸ எம்.பி. கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொலைபேசி உரையாடலில் பயன்படுத்திய தொனி, தனக்கும் குடும்பத்துக்கும் உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தனது பாதுகாப்பை அதிகரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ கடிதமொன்றை அனுப்பியுள்ளார். (ம-3)

## கோயில் மணி...

மட்டுவில் பகுதியில் உள்ள வைரவர் கோயிலொன்றில் இந்த விபத்து நிகழ்ந்தது.

காலை வேளையில் கோயில் பூசைக்கு சென்ற முதியவர், மணியை அடித்தபோது, அது அறுந்து அவரது தலையில் விழுந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த முதியவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ம-3)

## பிரதமர் மகிந்த...

முக நகரப் பொருளாதார வலயம் தொடர்பான விசேட ஆணைக்குழு சட்டமூலம் சம்பந்தமாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக தெரிய வருகிறது.

புத்தாண்டு காரணமாக கொழும்புக்கு வெளியில் இருக்கும் பிரதமர், கொழும்பு திரும்பியதும் இந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இதனிடையே பிரதமருக்கும் ஆளும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்று எதிர்வரும் திங்களன்று நடைபெறவுள்ளது.

இதன்போது துறைமுக நகர விசேட ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் குறித்து தெளிவுபடுத்தப்பட உள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், திங்களன்று நடைபெறவுள்ளதுடன், அந்த கூட்டத்தில் இது தொடர்பாகக் கவனம் செலுத்தப்ப[illegible]ள்ள[illegible]. (ம-3)


## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் சிவகுமார் புஸ்பராணி அவர்களது அன்புக் கணவர்

அமரர் துரைரத்தினம் சிவகுமார் (ஒளி)

(KTS லொறி உரிமையாளர்)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரிவின் துயரில்......*

ஊழியர் [illegible]

வலி.கிழக்கு [illegible]

(C-1997)

மண்ணில் 1962.06.25

விண்ணில் 2021.04.16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vacancy

Cashier, Bill Clerk, Accounts Clerk, Waiter, Cooking Helper, Cleaner, Sales Rep., Sales man. (6619)

**076 300 5506**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (6582)

**☎ - 076 564 6282**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1925)

**0768226240** DHL

## பிரத்தியேக குழு வகுப்புக்கள்

தரம் 6 முதல் O/L வரை கணிதமும் தரம் 10 மற்றும் O/L மாணவர்களுக்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் தனியாகவோ/குழுவாகவோ அனுபவமிக்க ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (6607)

**☎ - 077 645 2622**

## விற்பனைக்கு

புத்தம் புதிய பதிவு செய்யப்படாத **TVS** முச்சக்கரவண்டிகள் விற்பனைக்கு உண்டு.

**( குறைந்தளவு கையிருப்புக்கள் மாத்திரமே. )** (C-1987)

**077 715 1101, 077 129 0712**

## வாகன சாரதி தேவை

**(Driver - Heavy Vehicle)**

நேர்முகத் தேர்வு : 21.04.2021 புதன்கிழமை காலை 10.00 முதல் 1.00 வரை

- வயது : 40 - 50
- அனுபவம் : ஆகக் குறைந்தது 5 வருடம் (நேர்முகத் தேர்வின்போது அனுபவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
- வதிவிடம் கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(யாழ். மாவட்டத்திற்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.) (6617)

**MALBA ROPES (PTE)LTD, 212, HOSPITAL ROAD, JAFFNA. 021 222 0090**

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு நன்கு சமைக்கத் தெரிந்தவர், சமையல் உதவியாளர் (ஆண், பெண்), யூஸ் அடிக்கத் தெரிந்தவர்கள் தேவை. (6620)

**☎ -077 548 8044**

## கணனி திருத்தம்

**Iphone, Android Phone களும் திருத்திக் கொடுக்கப்படும்.**

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் Laptop களும் வாங்கப்படும். (6614)

தொடர்புகளுக்கு

**NPO Computer System - 077 243 8537**

## உடனடி வேலை வாய்ப்பு



**V2 TRAVELS**

விரைவு பொதிகள் சேவை (C-1895)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)

சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்

சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**0777068777**

v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை

தெல்லிப்பழை, ஆஸ்பத்திரி வீதியில் 2 பரப்பும் 1 குழியும் கொண்ட காணி 2 துண்டுகளாக விற்பனைக்கு உண்டு.

விபரம் : கே. கே. எஸ் வீதியில் இருந்து **Hospital Main Road இல் 3 ஆவது காணி Main Road, Lane** என்பவற்றை இருபக்க முகப்பாகக் கொண்டது. புகையிரத நிலையம், விமான நிலையம், ஆஸ்பத்திரி என்பவற்றிற்கு மிக அருகில் அமைந்துள்ளது.

பரப்பு 30 இலட்சம் (6621)

**தொடர்பு : 077 715 7070**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.

( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம். (6579)

**077 814 7389**

**077 614 7333**

## அன்னா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1927)

070 3305500

077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை

பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை

மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## " சூரியகலத்தினால் உங்கள் நிலத்தை பெறுமதியாக்குங்கள்! "

நிலத்தில் பொருத்தப்பட்ட குறைந்த மின்னழுத்தத்துடனான 75kw சூரியகலமின் உற்பத்தி (PV) நிலையங்கள், கட்டப்பட்ட, சொந்த, மற்றும் செயற்பாடு (Boo) அடிப்படை மற்றும் ஏசிகொள்ளளவு அடிப்படையில் துணை மின்நிலையங்களை இணைத்துக்கொள்ள தேசிய போட்டி ஏலம்மூலம் இலங்கை மின்சாரசபை அழைப்பு விடுகிறது.

இவ் அழைப்பை கருத்திற் கொண்டு, Power consult தனியார் நிலமொன்றை குத்தகைக்கு எடுக்க தயாராகவுள்ளது, அத்துடன் தனியார் நில உரிமையாளர் எவரேனும் ஏலத்திற்கு சுயமாக பங்கேற்று வெற்றிபெறுவாராயின் அவருக்கு உதவுவதற்கும் நாங்கள் தயாராகவுள்ளோம்.

**JAFFNA SUBSTATION**

| Distribution Substation Name | Area | Distribution Substation SIN Number |
|---|---|---|
| MIRUSUVIL CAMP (A088) | Chavakachcheri | A088 |
| VidaththatpalaiKetpeli | Chavakachcheri | A060 |
| MIRUSUVIL CAMP | Chavakachcheri | A088 |
| VEMOURAI NEAR CEMETRY | Chavakachcheri | A120 |
| Nilavarai Sub No.01 Nilavarai Junction, Puttur Road. | Chunnakam | C015 |
| Saanthu Junction (Palaly Scheme V) | Chunnakam | C138 |
| Poompukar | Jaffna City | G088 |
| Chaddy Rd, Mankumpan Rd Junction | Velanai | N014 |
| Beach Side, Manatkadu Sub | Point Pedro | P039 |
| Nadu Kudaththanai | Point Pedro | P041 |
| Ampam | Point Pedro | P048 |
| Vallai | Point Pedro | P049 |
| Ampan Hospital | Point Pedro | P051 |
| Uduththurai | Point Pedro | P088 |
| Vaththiraayan | Point Pedro | P092 |
| Aaliyavalai | Point Pedro | P094 |
| Nagar Kovil North | Point Pedro | P103 |
| Kudaththanai | Point Pedro | P110 |
| Ward 9, Uduththurai | Point Pedro | P131 |

**KILINOCHCHI SUBSTATION**

| Distribution Substation Name | Area | Distribution Substation SIN Number |
|---|---|---|
| MurikandyKovil | Kilinochchi | K004 |
| Murasumooddai | Kilinochchi | K034 |
| Visvamadu | Kilinochchi | K037 |
| Manikkapuram | Kilinochchi | K089 |
| Pannankandy | Kilinochchi | K112 |
| Thoddiyady SLA | Kilinochchi | K127 |
| Kirushnanagar | Kilinochchi | K152 |
| Maanadiththakulam | Kilinochchi | K175 |
| Vannerikkulam | Kilinochchi | K176 |
| Alankulam | Kilinochchi | T011 |
| Keppapilavu | Kilinochchi | Z023 |
| IrannaipalaiPuthukkudiyiruppu | Kilinochchi | Z034 |
| Chemmalai - 1 | Kilinochchi | Z042 |
| Karunaddukeny Junction | Kilinochchi | Z049 |
| Devipuram – 1 | Kilinochchi | Z076 |
| Suthanthirapuram II | Kilinochchi | Z103 |
| Vannankulam | Kilinochchi | Z109 |
| NawatkaduMulliyawalai | Kilinochchi | Z124 |
| Kallappadu School | Kilinochchi | Z138 |
| Iniya Vazhvuillam | Kilinochchi | Z154 |

தொடர்புகளுக்கு

Power Consult Pvt Ltd

**POWERCONSULT (PVT.) LTD**

No 54, Lily Avenue, Marine Drive, Wellawatte, Colombo - 00600

Tel: +94 11 250 8882
+94 11 250 2458

Website: https://powerconsult.lk
Email: sales@powerconsult.lk

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகளுக்கு

**VIJITHARAN - 077 034 4254** (C-1990)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 305

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 18.04.2021 தொலைபேசி : 021 222 3378

## உயிர் பறிக்கும் கொடுமை







## சிரிக்க வைத்தவனே ஏன் அழவைத்தாய்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

மறைந்த ஆங்கில ஆசான் சிவசுப்பிரமணியம் அவர்கள் காலமாகி விட்டார். ஆங்கில மொழியில் விற்பன்னரான சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

நகைச்சுவை நடிகர் விவேக் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி அவரது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

பிலவ புத்தாண்டு சிரிப்பை இழந்தது போல நகைச்சுவை நடிகர் விவேக்கை தமிழ்த் திரையுலகம் இழந்து நிற்கிறது என்றார்.

**சாத்திரியார்:** என்ன செய்யிறது கவிஞர் கண்ணதாசன் சொன்னது போல ஆளுக்கொரு தேதி வைச்சு ஆண்டவன் அழைப்பான். அப்போ யாரழுதால் அவனுக்கென்ன காரியம் முடிப்பான் என்பதுதான் உண்மை. விதிமுடிஞ்சுது எண்டால் அவ்வளவுதான். எங்களோட கூடியிருந்த கூட்டம் எப்ப பொடி எடுப்பினமாம் எண்டுதான் கேட்கும். இதுதான் யதார்த்தம். இவ்வாறு சாத்திரியார் சதாசிவம் கூறும் போது வாத்தியார் வைத்திலிங்கம் களைப்புற்றவர் போல அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த மூப்பர் என்ன வாத்தியார் உடல் நிலை சரியில்லைப்போல.

**வாத்தியார்:** உடல்நிலையில பிரச்சினையில்லை. இண்டைக்கு வேலணைக்குப் போய்வந்ததில களைச்சுப் போனன் அவ்வளவுதான்.



## வேலணை வங்களாவடி குட்டி நகரமாக மாறுமோ?

**கங்காணி:** என்னது வேலணைக்குப் போய் வந்தது களைப்போ?

**வாத்தியார்:** வேலணைக்குப் போய் வந்ததில களைப்பில்லை. ஆனால் காலையில சாப்பிட முடியாமல் போயிற்றுது. அதுதான் களைச்சுப்போனன்.

**சிறாப்பர்:** ஏன் வாத்தியார் வேலணை வங்களாவடிச்சந்தியில சாப்பாட்டுக் கடைகள் இல்லையோ.

**வாத்தியார்:** சாப்பாட்டுக் கடைகள் இருக்குது. ஒரு கடை பூட்டு [illegible] கடையில சாப்பாடில்லை.

**சிறாப்பர்:** அப்ப வங்களாவடிச் சந்தியில இருக்கிற பேக்கரியில பாண் வேண்டியிருக்கலாமே.

**வாத்தியார்:** காலை 8.30 மணிக்கே பேக்கரியில பாண் முடிஞ்சு போச்சுது. சந்தியில பேக்கரி இருக்கிறதால மற்றைய கடைகளிலும் பாண் விற்கிறதில்லை. யாழ்ப்பாணத்துப் பாணும் வேலணைக்குப் போறதில்லை.

**சாத்திரியார்:** நானும் இதுதொடர்பில அவதானிச்சனான். யாழ்ப்பாணத்தில சில பேக்கரிகள் பாண் உற்பத்தியை மட்டுப்படுத்தி றோல், கேக், கறிபணிஸ் போன்ற சிற்றுண்டிகளில ஈடுபட்டிருக்கினம். ஆக, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில இருக்கிற றொலெக்ஸ் பேக்கரி தான் பாண் உற்பத்தியை [illegible] செய்து நுகர்வோரின்ர நலனைக் கவனிக்கிது.

**பண்டிதர்:** அப்ப பாண் உற்பத்தியை மட்டுப்படுத்தியுள்ள பேக்கரிகள் தொடர்பில யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின்ர கவனத்திற்குக் கொண்டு வந்தால் பேக்கரி உரிமையாளர் சங்கம் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

**விதானையார்:** அப்ப இதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவம். பேக்கரிகள் பாண் உற்பத்தியை விடுத்து சாப்பாட்டுக் கடைகளின்ர வேலையைச் செய்யினம். இதை மட்டுப்படுத்தி சாதாரண மக்களுக்கு எந்நேரமும் பாண் கிடைக்கக்கூடியதான வகையில் பாண் உற்பத்தியைச் செய்யவேணும். இதை விட்டிட்டு பெரிய கட்டடங்களைக் கட்டி பேக்கரி என்று பெயர் போட்டுட்டு காலை 8 மணிக்குப் போனாலே பாண் இல்லை எண்டு சொல்லுறது எண்டால், அதில நியாயம் இல்லைத் தானே.

எனவே இந்த விடயத்தை எங்கட யாழ்ப்பாண பேக்கரி உரிமையாளர் சங்கம் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேணுமெண்டு ஆலடி மாநாடு கேட்டுக் கொள்கிறது என அறிவித்தார்.

விதானையார் இவ்வாறு அறிவித்த கையோடு அவசரப்பட்ட கங்காணி கார்த்திகேயன் வேலணை வங்களாவடி பற்றி வாத்தியார் சொன்னார். உண்மையில வேலணை வங்களாவடிச்சந்தி எவ்வளவு பெரிய கட்டட வசதிகளோட, புதுப் பொலிவோட ஒரு குட்டி நகரமாக மாறியிருக்கவேணும்.

யாழ்ப்பாணத்தில எத்தனையோ இடங்கள் நகரங்களாக மாறியிருக்குது. ஆனால் வேலணை வங்களாவடி மட்டும் ஐம்பது வருடங்களுக்கு முன்னால் பார்த்த அதே கோலத்திலதான் இப்பவும் இருக்குது. இதுபற்றி வேலணைப் பிரதேச சபை, பிரதேச செயலகம், வர்த்தகர்கள் சிந்திக்கவேணும்.

இதைவிட வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நடத்துகிற எரிபொருள் நிலையத்தின்ர கோலத்தைப் பார்க்க வயிறு பத்தி எரியுது. அந்தளவுக்கு வேலணை எம்.பி.சி.எஸ்சின்ர எரிபொருள் நிலையம் இருக்குது.

ஆகையால வேலணையில இருக்கிற மிகப்பெரிய வர்த்தகர்கள் ஒன்றுகூடி, வங்களாவடியை எப்படி பெரிய நகரமாக ஆக்குவது என்பது பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேணும்.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடிவமெடுக்கும்

# ஹிட்லர் அவதாரம்

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹிட்லர் அவதாரம் எடுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் கூறியமை அவரின் தனிப்பட்ட கருத்தே. ஒட்டுமொத்த அரசின் கருத்தல்ல

— கெஹலிய"



இரண்டாம் உலக யுத்தத்தில் உலகையே தனது சர்வாதிகார ஆட்சியின் கீழ் கொண்டு வந்த அடோல்ப் ஹிட்லரை துறைமுகத்தில் பாரிய கப்பல் ஒன்றில் ஒரு செய்தியாளர் சந்தித்து பேட்டி எடுத்துக் கொண்டிருந்தார்.

பேட்டியின் இடையே ஏதோ ஒரு கேள்விக்கு பதில் அளித்த ஹிட்லர் நான் என்ன சொன்னாலும் எனது படை வீரர் உடன் செய்வார்கள் என்று கூறுகிறார்.

இதைச் சற்றும் எதிர்பாராத செய்தியாளர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்.

அந்தச்சந்தேகப் பார்வை ஹிட்லருக்குப் பிடிக்கவில்லை.

உடனடியாக தனக்குப் பாதுகாப்பளித்துக் கொண்டிருந்த ஒரு படைவீரரை நீ இந்த கடலில் குதித்து இறந்துபோ எனப் பணிக்கிறார்.

படைவீரனும் அடுத்த கதை இன்றி ஆர்ப்பரிக்கும் கடலில் குதித்து மாண்டு போகிறான்.

ஹிட்லர், பார்த்தாயா என செய்தியாளரை வினவி இப்போது நம்புகிறாயா? என்றார்.

அதற்கு செய்தியாளர் சிரித்துக் கொண்டே நம்பிக்கை வரவில்லை என்றார்.

அடுத்த படைவீரனை அழைத்து ஹிட்லர் உனக்கு நீச்சல் தெரியுமா? என வினவுகிறார்.

படைவீரனோ இல்லை எனக் கூறியதும் "நீயும் கடலில் குதி" எனப் பணிக்கிறார்.

அந்தப் படைவீரனும் உடன் மறு பேச்சின்றி கொஞ்சமும் சலனமின்றி கடலில் குதிக்கிறான்.

சிறிது நேரத்தில் அவனின் உடல் கடல் நீரில் மிதக்கிறது.

இப்போது நம்புகிறாயா? எனச் சிரித்தார் ஹிட்லர்.

செய்தியாளர் இல்லை என்றதும் ஹிட்லருக்குக் கோபம் அதிகமாக வரவே உடன் அடுத்த காவலனை அழைத்து கடலில் குதிக்கும்படி பணிக்கிறார்.

படைவீரனும் கடலில் குதிப்பதற்கு தயாரான நேரம் செய்தியாளர் அவனைத் தடுத்து நிறுத்திவிட்டு இப்போது நம்புகிறேன் என்றதும் ஹிட்லர் அந்த இடத்தில் இருந்து விலகிச் செல்கிறார்.

ஹிட்லர் சென்றதும் அந்தச் செய்தியாளர் கடலில் குதித்து தற்கொலை செய்யத் துணிந்த படை வீரன் அருகில் சென்று உன் தலைவன் கூறியதும் உடன் கடலில் குதித்து உயிரை மாய்க்கத் துணிந்தாயே அவ்வளவுக்கு உனது தலைவன் மீதும் அவரின் சொல்லின் மீதும் மரியாதை வைத்திருக்கிறாயே என்று புகழ்கிறார்.

அதற்கு அந்தப் படைவீரன் கூறுகிறான். "நீங்கள் வேறு, நான் ஹிட்லர் படையில் இருந்து தினம் தினம் துன்பத்தை அனுபவிப்பதைவிட கடலில் குதித்து சாவது எவ்வளவோ மேலானது" என்றான்.

இது ஹிட்லரின் சர்வாதிகாரப் போக்கை வெளிக்கொணரக் கூடிய கதை ஒன்றே.

ஹிட்லரின் மர்ம மரணத்தின் பின் இப்போது ஹிட்லர் தொடர்பான விடயம் உலக வெளியில் அதிகம் உலவத் தொடங்கியுள்ளது.

ஆம், கடந்தவாரம் கண்டியில் நிகழ்வொன்றில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹிட்லர் போன்று செயற்பட வேண்டும் என அவருக்கு வாக்களித்த 69 இலட்சம் பேர் எதிர்பார்க்கின்றனர் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானால் அவர் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுப்பார் என மக்கள் எதிர்பார்த்தனர்.

குறிப்பாக அவர் ஹிட்லர் ஆனால் கூட பரவாயில்லை என மக்[illegible] யக்கர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

தற்போது ஹிட்லர் போல் ஜனாதிபதி செயற்படததால்தான் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஜனாதிபதி ஏதோவொரு வகையில் ஹிட்லராக செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

இக்கருத்து இலங்கை அரசியல் களத்தையும் தாண்டி உலக அரசியல் களத்திலேயே சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. இராஜாங்க அமைச்சரின் குறித்த கருத்துக்கு பதிலளித்து இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றைச் செய்திருந்தமை அதைப் புலப்படுத்தி நின்றது.

"ஜேர்மனியின் சர்வாதிகாரியான அடொல்ப் ஹிட்லர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்னுதாரணமானவர் அல்லர்" என்பதே அவரின் டுவிட்டர் பதிவு.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் ஹிட்லர் விடயம் சூடு பிடிக்க ஆரம்பித்துவிட்டது என்றே கூறவேண்டும்.

இராஜாங்க அமைச்சரின் குறித்த கருத்துக்கு கடும் கண்டனங்கள் எழ ஆரம்பித்ததும் அந்தத் தீயை அடக்கும் வகையில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல குறித்த இராஜாங்க அமைச்சரின் கருத்[illegible]ரின் தனிப்பட்ட கருத்து என்றும் இக்கருத்து அரசாங்கத்தின் கூட்டுக் கருத்தல்ல என்றும் தெரிவித்திருந்தார்.

இரண்டாம் உலகப் போரின் போது ஈவிரக்கமின்றி பல்லாயிரம் பேரின் உயிரைக் கொன்ற சர்வாதிகாரி ஒருவரைப் போல ஒரு நாட்டின் ஜனாதிபதி செயற்பட வேண்டும் என அதுவும் அவரின் ஆட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சுப் பதவியில் இருக்கும் ஒருவர் கூறியிருக்கிறார் எனின், அவ்விடயத்தை சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணிக்குள் பிளவுகள் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில், குறித்த கருத்தானது இன்னமும் தாக்கத்தைச் செலுத்தும் என்பது வெளிப்படையானது.

எது எப்படியோ ஒரு சர்வாதிகாரி போல ஒரு நாட்டின் ஜனாதிபதி செயற்பட வேண்டும் என பொது வெளியில் பகிரங்கமாக பொறுப்புவாய்ந்த அதிகாரி ஒருவர் கேட்டுக் கொண்டதும் அதற்கு ஜேர்மன் தூதுவர் பதில் வழங்கியதும் இவ்விடயத்தை தணிப்பதற்கு அக்கருத்து அவரின் தனிப்பட்ட கருத்தென அரசு மறுத்தான் அடித்ததும் ஏதோ ஒரு விடயத்தை மக்களுக்குச் சொல்லியிருக்கிறது. அவ்வளவே.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கர்ணன்

## திரைவிமர்சனம்

பொடியன்குளம் என்கிற வறண்ட பூமியின் குடிமக்களுக்குக் காலங்காலமாக மறுக்கப்படும் உரிமை களுள் ஒன்று பேருந்து வசதி. பக்கத்து நகரம் செல்ல அவர் கள் ஆதிக்கச்சாதியினர் வாழும் மேலூருக்குச் சென்று தான் பேருந்து ஏறவேண்டும்.

அங்கே போனால் கேலியும் வன்சொற்களும் வன் முறையுமே பரிசாகக் கிடை க்கின்றன. இதனால் கல்லூரி செல்லும் கனவு, அவசரகால சிகிச்சை என பொடியன்குளத்தின் சகல மும் வேகமாய்க் கடந்தோடும் பேருந்துச் சக்கரங்களுக்கு இரையாக, 'குனிந்தது போதும்' என நியாயம் கேட்டு கம்பீரமாய் தலை நிமிர்த்துகிறார் ஊரின் தலை மகனான கர்ணன்.

அவரோடு வேறுபட்டு, பின் கூட நின்று, இறுதியாய் தோளோடு தோள் உரசி அடக்குமுறைக்கு எதிராகப் போர்புரிகிறது மொத்தப் பொடியன்குளமும். கர்ணன் தலைமை தாங்க, துரியோதனன் அறிவுரை வழங்க, எமராஜா உடன் நிற்க, போரின் முடிவு இந்த முறை மாற்றியெழுதப்படுமா என்பதே மீதிக்கதை.

கர்ணன் தன்னிடம் இருப்பதைக் கொடுக்கும் வள்ளல் அல்லன். மறுக்கப்பட்டதைப் பெறத்துணியும் மாவீரன்!

## திருமண அறிவிப்பை வெளியிட்ட ராய்லட்சுமி

கற்க கசடற திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமான நடிகை ராய்லட்சுமி தொடர்ச்சியாக பல முன்னணி நாயகர்களின் படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் அவருடைய திருமணம் குறித்த பல்வேறு வதந்திகள் அவ்வவ்போது வந்துகொண்டிருந்தன. அதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் நடிகை ராய்லட்சுமி ஒரு பதிவொன்றை இட்டுள்ளார்.

குறித்த பதிவு தற்போது வைரலாகி வருகின்றது. அவர் இட்டுள்ள பதிவில், ' நீண்ட நாட்களாகப் பல பேர் இதுகுறித்து கேட்டு வருவதால் இதைப்பற்றி பேச முடிவெடுத்திருக்கிறேன்.

முதலில் நான் எனது உறவுநிலை என்ன என்பதை மறைக்கவில்லை. மேலும் அது அடுத்தவருக்குத் தேவையில்லாத விடயமும்கூட. அடுத்து எனக் கென ஒரு தனியுரிமை உண்டு. எனது துணையின் நலனையும் நான் பாதுகாக்க வேண்டும்.


ஏப்ரல் 27, 2021 அன்று எங்களுக்கு திருமண நிச்சயம் நடைபெறுகிறது. அதற்கான அழைப்பிதழ்களை நெருங்கிய நண்பர்களுக்குக் கடந்த வாரம் கொடுத்திருந்தோம்' எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.நா.மனித உரிமையாளர் விடும் அறிக்கைக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைக்கும் எதுவித தொடர்பும் இல்லாதிருக்கிறதே?



பக்கத்து வீட்டுப் பெண் என்னை உற்று உற்றுப் பார்க்கிறாள். இது காதல்தானே மாமா?

**தருஷ் யாழ்ப்பாணம்**

**பக்கத்து வீட்டுப் பெண் என்னை உற்று உற்றுப் பார்க்கிறாள். இது காதல்தானே மாமா?**

முதலில் இந்த விடயத்திற்கு என்னை மாமா என்று கூப்பிட்டதே ஏதோ ஒரு மாதிரி இருக்கிறது.

இப்படித்தான் என்னையும் ஒரு பெண் உற்று உற்றுப் பார்த்தாள். நானும் என்னவோ ஏதோ என நினைத்து இதயத்தில் பூச்செடி எல்லாம் வளர்த்தேன்.

ஒருநாள் என் அருகில் வந்து உங்களைப் பார்க்க காணாமல் போன எனது பெரியப்பா மாதிரி இருக்கிறது என்றாள்.

பிறகென்ன வளர்த்த மலர்ச்செடியை பிடுங்கி எறிந்து விட்டேன்.

**யோகசிவதர்சன் மந்துவில்**

**அணு உலைக் கழிவை ஜப்பான் கடலில கலக்கப்போகிறதாமே?**

என்னது அணு உலைக் கழிவை கடலில் கலக்கப் போகிறார்களா? கேட்க வயிறு கலக்குகிறதே.

இந்த உலகம் தமக்கு மட்டும் சொந்தம் என மனிதன் நினைத்து அழிவை விலைக்கு வாங்கி வைத்திருக்கிறான் என்பதே உண்மையானது.

இயற்கையினால் கட்டுண்ட இந்த உலகம் அழியும் நிலைக்கு வந்து விட்டது என்பதே முடிவானது.

எல்லாம் அவன் செயல் அவ்வளவே.

**தேவா மானிப்பாய்**

**ஐ.பி.எல் எப்படிப் போகிறது யாருக்கு கிண்ணம் கிடைக்கும் என நினைக்கிறீர்கள்?**

இப்போதைய நிலையை வைத்துக் கொண்டு கிண்ணம் யாருக்கு எனக் கூறிவிட முடியாது.

ஏனென்றால் நடப்பு சம்பியன் மும்பை அணி கடந்த வருடமும் தோல்வியைச் சந்தித்த பின்னரே மீண்டெழுந்து கிண்ணத்தை வென்றது.

T20 என்பது யாருக்குச் சாதகம் என்பதை கூறிவிட முடி யாது. ஏனென்றால் கடைசி ஒரு பந்து கூட போட்டியை திசை மாற்ற வல்லது.



**நேதாஜி வதிரி**

**முதலமைச்சர் பதவிக்கு மாவை தகுதியற்றவர் என்கிறாரே விக்னேஸ்வரன்?**

பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவியை விட மாவை சேனாதிராசாவிற்கு முதலமைச்சர் பதவியில் அதிக-அதீத விருப்பம் இருப்பது இன்று நேற்றல்ல எப்போதோ தெரிந்த விடயம். சரி-பிழை- அப்படி- இப்படி என ஆயிரம் சொல்லலாம். ஆனால் கட்சி எடுக்கும் முடிவே இறுதியானது.

தேர்தல் என்றாலே உள்குத்து, வெளிக்குத்து இருந்தே தீரும்.

இந்தக் குத்துக்களை எல்லாம் தாண்டி வந்து மக்கள் வாக்களித்து முதலமைச்சர் ஆகி அந்தக் கதிரையில் சாதாரணமாய் இருந்து விடலாமா என்ன.

**அருட்கதிர் துன்னாலை**

**தமிழர் ஒருபோதும் நம்பிக்கை இழக்கக் கூடாது என சம்பந்தன் ஐயா கூறுகிறார். அப்படியென்றால் யாரை நம்பச் சொல்கிறார் வியாசரே?**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் மதிப்பிற்குரிய சம்பந்தன் ஐயா இன்றுவரை இந்தா வருகிறது தீர்வு, அந்த வந்து கொண்டிருக்கிறது தீர்வு என்று அறிக்கை விட்டதை விட வேறு எதையும் செய்து விடவில்லை.

அன்று நல்லாட்சி அரசிற்கு முட்டுக் கொடுக்காது கைவிட்டிருந்தால் ஐ.நா அன்றே தமிழர் விடயத்தில் தீர்வு கண்டிருக்கும்.

இழந்த பின்பு இழக்கக்கூடாது எனப் பேசுவதில் பிரயோசனம் இல்லை. இப்போதைக்கு இதையே கூற முடியும்.

**பிரகாஷ் நெல்லியடி**

**கோவிலுக்குப் போனாலும் மனம் நிம்மதி அடையவில்லையே என்ன செய்ய வியாசரே?**

மனம் என்பது எப்பேற்பட்டது தெரியுமா? சின்ன வயதில் வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருப்பார்.

ஆனால் எமது மனம் ஒன்று, வீட்டில் அம்மாவைப் பற்றியோ அல்லது நண்பர்களுடன் விளையாடுவது பற்றியோ சிந்தித்ததை நினைவுபடுத்திப் பாருங்கள்.

மனப்பாரம் தீர கோவில் சென்றால் அதை மறந்து இறைதியானத்தில் இருக்க முயற்சியுங்கள். மனதை ஒரு நிலைப்படுத்தி இறைதியானத்தை தொடர்ந்து செய்யுங்கள். கொஞ்சம் கொஞ்சமாய் உங்கள் மனம் பிரகாசிக்க ஆரம்பிக்கும். செய்து பாருங்கள் இந்த உண்மையை உணர்வீர்கள்.

**சுதன் குப்பிழான்**

**ஐ.நா.மனித உரிமையாளர் விடும் அறிக்கைக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைக்கும் எதுவித தொடர்பும் இல்லாதிருக்கிறதே?**

ஒரு திரைப்படத்தில் செந்தில் உணவுக் கடை ஒன்றின் உரிமையாளர். ஒருவர் யாசகம் பெற கடைக்கு வருவார்.

அவர் கடை முதலாளியான செந்திலை தர்ம பிரபு, வள்ளல் என்று புகழ்வார்.

செந்திலோ தன்னைப் புகழும் அவருக்கு விதவிதமான உணவு வகைகள் கொடுக்கும்படி உத்தரவு போட்டுக் கொண்டே இருப்பார்.

கடைசிவரை அந்த உணவுகள் எதுவும் வரவில்லை. யாசகர் கேட்பார் நீங்கள் சொன்ன உணவு எதுவும் வரவில்லையே என.

அதற்கு செந்தில் சொல்வார், நீ என்னை கொடைவள்ளல், தர்மபிரபு, அப்படி இப்படி என புகழ்ந்தாய் எனது மனம் சந்தோசமடைந்தது. அதற்காக நானும் உனது மனம் சந்தோசமடைய உணவுவகைகளை வழங்கச் சொல்லிக் கூறினேன். அதுக்கும் இதுக்கும் சரியாய் போய் விட்டது. ஓடிப்போ என

இதுதான், ஐ.நா.-செந்தில்
யாசகர்-தமிழனம்

**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## என் ஆசைகள்

வானத்தின் எல்லை வரை சென்று
வானிற்கு முத்தமிட ஆசை எனக்கு
கடலின் ஆழத்திற்கு சென்று
மீன்களுடன் வாழவும் ஆசை எனக்கு

பூக்கள் சூழவுள்ள தோட்டத்தில்
பூவாக மலரவும் ஆசை எனக்கு
பறவை போல் கவலை மறந்து
வானில் பறக்கவும் ஆசை எனக்கு

யாருமில்லா வீதியில்
வீறுநடை போட ஆசை எனக்கு
கொட்டும் மழையில் குடையின்றி
குழந்தை போல நனைந்திட ஆசை எனக்கு

நிலவொளியில் உன் கரம் பிடித்து
உலா வர ஆசை எனக்கு
உன் கரம் பிடித்து உலகம் சுற்றிவர
ஆசை எனக்கு

என் ஆசைகளுக்கு வரி அமைக்கவும்
ஆசை எனக்கு என் ஆசைகள்
நிறைவேறாது என்றாலும்
நிறைவேற வேண்டும்
என்ற ஆசையும் எனக்கு
என் கனவிலாவது
நிறைவேறும் என் ஆசைகள்

**சு.சுவஸ்திகா**
**கந்தர்மடம்**

## பெண் என்று பிறந்து விட்டால்



அன்று யாரோ சொன்னார்கள் - பெண் இவள் பேதை என்று
இன்று யாரோ சொல்கிறார்கள் - பெண் இவள் மேதை என்று

கனவை சுமந்து செல்லும் பெண்ணின் வாழ்வில்
பல தடங்கள் ஒவ்வொரு உறவாக கண் முன்

வலிகளை கடந்து செல்லும் இவளின் வாழ்க்கை கதையை
கூறுவதற்கு என் கவியில் கூட வரிகள் இல்லையடா

நட்பை தொலைத்த நிமிடம் காதலை புதைத்த தருணம்
உறவை வளர்த்த கணங்கள் - வலியை
மறந்து சிரித்து மகிழ்ந்த ஒவ்வொரு கணங்கள்

பெண்மையை மதித்து நட - ஆண்மை வெல்லும்
அவளைப் போல் உன்னால் வாழ முடியாது
பெண் என்று பிறந்து விட்டால்

ம.கோல்டாமேரி
அச்சுவேலி
யா/ புனித தெரேசாள் ம.க.

## வாழ்வின் மகிமை

மனிதனாக பிறந்ததே
கடவுள் தந்த கொடையாகுமே
மகிழ்ச்சியாய் வாழ மனிதன்
அறிவைப் பெற வேண்டுமே
அறிவைப் பெற்றவன் முட்டாளாக
வாழக் கூடாதல்லவோ
அறிவைப் பெற்றவன் அதிக
சாதனைகள் செய்யனுமே
மனிதனை மனிதன் கொலை செய்வது
ஏற்புடையவை அல்லவே
மனிதன் புனிதனாக வாழ
கடவுள் வரம் வேண்டுமே
மனிதப் பிறப்பு மகத்தான பிறப்பு
என்பதை உணரும் வரை
மனித வன்முறைகள்
தொடரத்தான் செய்திடுமே

**பெ.தனா, தெல்லிப்பழை**

## பாவிகள் உலகம்

பாவமும் மோசமும் நிறைந்த
பாவிகள் உலகம்
நேசமும் பாசமும் இங்கே
வாழ்வதில்லை

நித்தம் நித்தமிங்கே பொய்யுரைப்பார்
சித்தம் கலங்கி சிறுமதி கொள்வார்
பித்தம் பிடித்தேயிவர்
பிதட்டல் வார்த்தை பேசிடுவார்

நல்லவர் போல் தினம் நடிப்பார்
நன்றியோடு நன்மையை அழிப்பார்
வையகம்தனில் வாழ்ந்திடும்
வஞ்சகர் தன்னிலை பார்த்திடாயோ

க.சிவகுமார்
சுழிபுரம்

## மௌனத்தின் தேடல்- 524



## நீ ஒரு சுமைதாங்கி

மனிதா துன்பங்கள் பல வந்து
சிந்தையைக் குழப்பி
உன்னை நெருங்கியதால்
சுமை தாங்கிடாது துவண்டு விட்டாய்
அஞ்சிடாதே நீ ஒரு சுமைதாங்கியாய்
வாழ்க்கை எனும் சக்கரத்தை
உருட்டிச்செல்
ஒளிமயமான எதிர்காலம்
உனக்குண்டு தளர்ந்திடாதே

**த.சிவா, நாவலர் வீதி**

## மௌனத்தின் தேடல்- 525



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசச் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தலைக்கணம்

ஈன்றெடுத்த தாய்க்கு
பத்துத் திங்கள்
குழந்தை இன்பச்சுமை
தோள் மேல் பிள்ளை
அப்பனுக்கு பாசச்சுமை
சிறு முதுகு மூஷிகத்திற்கு
பிள்ளையார் பக்திச்சுமை
தலைக்கணமோ மானிடா உன் ஆயுட்சுமை
தலையால் தான் அழிந்த
தீக்குச்சியாய் உன் வாழ்வும்
கருகிப் போகவும் கூடும்
கவனம் – தலைக்கணம்

**எஸ்.சௌமியன்**
**கிளிநொச்சி**

## தலையும் சுமையும்

எண் சாண் உடம்பிற்கு
என்றும் சிரசே பிரதானம்
இது ஐம்புலக்களின்
இருப்பிடம் மட்டுமன்றி
மனித உடல் உறுப்புகளின்
தலைமைச் செயலகமுமாகும்
தலைக்கணம் கெடுதியானது
சுமையை இறக்கி வைப்பது
சுலபமான காரியமல்ல
சுகமெனச் சகிப்பதும் சரியல்ல
பிழைகளைச் சரி செய்வதே
தலை சிறந்த செயலாகும்

**க.நாகராசா, நுணாவில்**

## மனிதமாடு

நம் மூதாதையர்களின் காலத்தில் மாடுகள் வண்டியை இழுத்து
மனிதர்களுக்கு பேருதவி புரிந்தன ஆனால் இன்று
இங்கே இந்த மனிதனோ இப்படி தன் கவிழ்ந்த தலையோடு
கைகளால் வண்டியை இழுக்கும்
அவல நிலையை மண்ணில் கண்டோம்
அதனால் மனதில் நாம் வேதனை கொண்டோம்

**சுப்பிரமணியம் ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

## என்ன இருந்து என்ன பயன்

கந்தைக்கும் கஞ்சிக்கும் வழியின்றி
கஷ்டப்பட்ட உழைப்பாளிகட்காக
காந்தியடிகள் வழக்காடினார்
ஏழைத் தொழிலாளர்க்காக ஏசுபிரான்
ஏர்க்கலப்பையை தானே செய்தார்
எல்லாம் உள்ளவர் ஒன்பது வீதம்
ஏழைகள், தொழிலாளர் எண்பது வீதம்
இருக்கின்றதோர் நாட்டினிலே
என்னதான் வளர்ச்சி இருந்துதான்
என்ன பயன்?

வாணியழகன், கிளிநொச்சி

## மாதகலா...

மாதகலா மண்கும்பானா
மண்டைதீவா நயினாதீவா
வந்த வரலாறு தன் வழிமாறும்
தங்கள் வரலாறே தமிழர் வரலாறு
தாங்க முடியாத தலைப்பாரம்
தாழ முடியாமல் தமிழர் தரப்பு
வீங்கி விழி பிதுங்கி வீழும் நிலை
[illegible]

வைகதன் கொக்குவில்

## தலைக்கணம்


தலைக்கணம் உன்னை வாழவிடாது
தலைக்கணம் உன்னை சாகவிடாது
தலைக்கணம் உன்னை நரகம் வரை
கொண்டு செல்லும் கொடிய நோய்

**கஜா, சங்கானை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாமின் கால்தடங்களைப் பற்றிய சின்னக் கலைவாணர் விவேக்

"மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாமிற்கு மிகவும் நெருக்கமானவர். "கிரீன் கலாம்" என்ற பெயரில் தொடர்ந்து, இலட்சக் கணக்கான மரக்கன்றுகளை நட்டு வந்தார். அவருடைய இலக்கு தமிழ்நாட்டில் ஒரு கோடி மரக்கன்றுகளை நட வேண்டும் என்பதுதான்."



**மாரடைப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த, நடிகர் விவேக் 17.04.2021 அன்று காலமாகிவிட்ட செய்தி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறது.**

தமிழ் சினிமாவில் உள்ள நகைச்சுவை நடிகர்களின் வரலாற்றில் "விவேக்" என்ற பெயருக்கு அத்தனை வலிமை இருக்கிறது. பொதுவாகவே, காமெடி நடிகர்களை மக்களை எளிதில் கவர்ந்துவிடுவார்கள். அதில் விவேக் கொஞ்சம் ஸ்பெஷல். மக்களுக்கு தேவையான சீர்திருத்த கருத்துக்களை தன்னுடைய படங்களில் பேசியவர். அந்த விடயம்தான் விவேக்கை ஜனங்களின் கலைஞன், சின்னக்கலைவாணர் ஆகிய பெயர்களை வாங்கிக்கொடுத்தது.

மக்களுக்கான பல விடயங்களை திரையில் தன்னுடைய நகைச்சுவை உணர்வோடு சேர்த்து பேசிய நடிகர் விவேக் இனி நம்மோடு இல்லை என்ற செய்தி அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் தள்ளியிருக்கிறது.

கோவில்பட்டியில் பிறந்தவர், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் எம்.கொம் படிப்பை முடித்தார். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வில் வெற்றி பெற்று அரசாங்க ஊழியராக தலைமைச் செயலகத்தில் பணியாற்றினார்.

ஆனால், நடிப்பின் மேல் அதீத ஆர்வம் இருந்ததால், அரசு பணியில் இருந்தாலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் மெட்ராஸ் ஹியூமர் கிளப்பில் இணைந்து பணியாற்றினார். இயக்குநர் பாலச்சந்தர் இயக்கத்தில் வெளியான "மனதில் உறுதி வேண்டும்" திரைப்படத்தில் சுஹாசினியின் தம்பியாக திரையில் அறிமுகமானார்.

இந்தப் படத்தில் அவர் நடித்த முதல் ஷொட் என்ன என்பதை சமீபமாக பேசியிருந்தார். அதில், "என்னுடைய முதல் படம், பாலச்சந்தர் சேர் இயக்கத்தில "மனதில் உறுதி வேண்டும்" அந்தப் படத்துல நான் நடிச்ச முதல் நாளை பத்தி பேசுறது ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. தி.நகர் ரங்கநாதன் தெரு பக்கத்துல ராமேஸ்வரம் தெருனு ஒண்ணு இருக்கு. அங்க காமக்கோடி வீடுனு ஒரு தனி வீட்டுலதான் ஷூட்டிங். இப்போ அந்த இடம் அப்பார்ட்மென்டா மாறிடுச்சு. அந்த வீட்டு மாடில இருந்து தடதடனு இறங்கி வந்து "அக்கா வர்றாங்க அக்கா வர்றாங்க"ன்னு சொல்லணும். அப்புறம், சுஹாசினி உள்ள வருவாங்க. எப்படியிருக்கனு எல்லாம் கேட்பாங்க. அதுக்கெல்லாம் பதில் சொல்றதுதான் நான் நடிச்ச முதல் ஷொட்.

எங்களுடைய டயலொக் எல்லாம் பேசி முடிச்சவுடன் நான் கமராவைப் பார்த்து "ஓகேவா சேர்"னு கேட்டுட்டேன். கே.பி. சேர் டென்ஷனாகி "அட அறிவுகெட்டவனே"னு திட்டிட்டு அப்புறம் கட் சொன்னார். சுஹாசினி என் கிட்ட, "நம்ம டயலொக் முடிஞ்சாலும் டைரக்டர் "கட்"னு சொல்லுற வரைக்கும் நம்ம அந்தக் கரக்டர்லயே இருக்கணும்"னு சொல்லிட்டு இருந்தாங்க.

அப்போ டைரக்டர் வேகமா என் கிட்ட வந்தார். மறுபடியும் ஏதோ திட்டப்போறார்னு நினைச்சேன். ஆனா, அவர் என் காலை பார்த்துட்டு, "என்னடா பண்ணி வெச்சிருக்க?"னு கேட்டார். வேகமா படிக்கட்டுல இருந்து இறங்கி வரும்போது ,கால் நகம் பெயர்ந்து ரத்தம் வந்திருந்தது. பாலச்சந்தர் சேர் எவ்வளவு பெரிய ஜாம்பவான். ரஜினி, கமல்னு ரெண்டு உச்ச நட்சத்திரங்களை உருவாக்குனவர் இப்போ நம்மளை இயக்குறார்னு சந்தோஷம் கலந்த பதற்றத்துல வேகவேகமா இறங்கி வந்ததுல அப்படியாகிடுச்சு.

உடனே, மேக்கப் டீமை கூப்பிட்டு மீசைக்கு ஒட்டுற பசையை கொஞ்சம் அந்தக் காயத்துல போட்டுவிட்டாங்க. அப்புறம்தான் ரத்தம் நின்னுச்சு. "முதல் படத்துல அதுவும் முதல் ஷொட்லேயே ரத்தம் சிந்தி நடிக்கிறாண்டா இவன்"னு சொல்லி சிரிச்சார் கே.பி. சேர்.

என்னுடைய முதல் ஷொட்ல திட்டும் வாங்கிட்டேன், பாராட்டும் வாங்கிட்டேன். அப்படி ஸ்டார்ட்டான இந்த வண்டி இத்தனை வருஷமா ஓடிக்கிட்டு இருக்கு. மோதிரக் கையால குட்டு வாங்கியிருக்கோம்ல..!" என்றார் மகிழ்ச்சியாக.

பாலச்சந்தர் கண்டெடுத்த முத்துக்களில் மிக முக்கியமானவர் விவேக். அடுத்தடுத்து அவருடைய இயக்கத்தில் நடித்து வந்தவருக்கு, பின் ஏகப்பட்ட வாய்ப்புகள் வந்தன. சின்ன படம், பெரிய படம் என்று பார்க்காமல் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் மிகச் சரியாக பயன்படுத்தி நகைச்சுவை நடிகராக உச்சத்திற்கு சென்றார்.

1987ஆம் ஆண்டு அறிமுகமாகியிருந்தாலும் 2000 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இருந்து விவேக் இல்லாத படங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். ரஜினி, கமல், விஜய், அஜித், விக்ரம் என தொடங்கி இப்போதைய இளம் நாயகர்ளான ஹிப்ஹாப் ஆதி, ஹரிஷ் கல்யாண் வரை தொடர்ந்து உற்சாகமாக பயணித்து வந்தார். விஜய், அஜித்துடன் தொடர்ந்து எக்கச்சக்கமான படங்களில் பணியாற்றினார்.

படங்களின் பெயர்கள் மக்களின் நினைவில் இல்லாமல் போனாலும் இவருடைய நகைச்சுவை காட்சியை சொன்னால் உடனுக்குடன் நினைவுக்கு வருமளவிற்கு இவரது நடிப்பும் நகைச்சுவை உணர்வும் தனித்துவம் கொண்டது.

வடிவேலு ஒரு பக்கம் உச்சத்தில் சென்று கொண்டிருக்க, மறுபக்கம் தனக்கான பாணியில் பரபரப்பாக இயங்கி வந்தவர், விவேக். கருத்துக்களுடன் கூடிய நகைச்சுவைக் காட்சிகளை எழுதி நடிப்பதுதான் விவேக்கின் ஸ்டைல்.

எம்.ராதா, என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோரைத் தொடர்ந்து, சீர்திருத்த கருத்துக்களை தன்னுடைய வசனங்களில் பேசிவந்தார். 2019ஆம் ஆண்டு விஜயுடன் "பிகில்", அஜித்துடன் "விஸ்வாசம்" ஆகிய படங்களில் நடித்தார். நீண்ட நாட்களுக்கு பிறகு, விஜய், அஜித் ஆகியோருடன் இணைந்து நடித்திருந்தார். காமெடி கரக்டர்களில் தூள் கிளப்பிவந்த விவேக், சமீபமாக குணச்சத்திர கதாபாத்திரங்களில் பயங்கரமாக ஸ்கோர் செய்தார்.

"தாராள பிரபு" படம் இந்தியில் வெளியாகி ஹிட்டான "விக்கி டோனார்" படத்தின் ரீமேக் என்றாலும் டாக்டர் கண்ணதாசன் என்ற கரக்டரில் இவருடைய பங்கு அபாரமானது. அந்தப் படத்தை மிக அழகாக தாங்கிச் சென்றது விவேக்தான். இவர் லீட் ரோலில் நடித்த "வெள்ளை பூக்கள்" திரைப்படமும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

30 வருட சினிமா பயணத்தில் இன்னும் கமல்ஹாசனுடன் இணைந்து நடிக்கவேயில்லை. "இந்தியன் 2" படத்தில்தான் முதன்முதலாக கமலுடன் இணைந்தார். குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடிக்க நிறைய படங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். இளம் இயக்குநர்கள், இளம் நாயகர்கள் என இந்தக் காலத்துக்கு இளைஞர்களோடு பயணிப்பது விவேக்கிற்கு மிகவும் பிடிக்கும்.

மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாமிற்கு மிகவும் நெருக்கமானவர். "கிரீன் கலாம்" என்ற பெயரில் தொடர்ந்து, இலட்சக் கணக்கான மரக்கன்றுகளை நட்டு வந்தார். அவருடைய இலக்கு தமிழ்நாட்டில் ஒரு கோடி மரக்கன்றுகளை நட வேண்டும் என்பதுதான்.

இயற்கை மீது எவ்வளவு நேசமும் அக்கறையும் உள்ளதோ அதே அளவிற்கு, இசை மீது அதீத காதல் கொண்டவர். இளையராஜாவின் தீவிர ரசிகர். சமீபமாக, அவருடைய புது ரெக்கோர்டிங் ஸ்டுடியோவுக்கு சென்று, இளையராஜாவின் பாடல்களை இவர் பியானோவில் வாசித்த வீடியோவைக் காட்டி வாழ்த்து பெற்று வந்தார். எல்லா காமெடி நடிகர்களிடம் நட்பு பாராட்டி வரும் விவேக், நல்ல நடிகர் மட்டுமல்ல நல்ல மனிதர் என்பதுதான் திரைத்துறையில் இருக்கும் பலரின் கருத்தாகவும் இருக்கிறது. இதுவரை, ஆறு முறை தமிழ்நாடு மாநில விருதுகளை பெற்றுள்ளார். 2009ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மஸ்ரீ விருதினை கொடுத்து கௌரவித்தது.

விவேகானந்தன் என்ற பெயரை சினிமாவுக்காக விவேக் என்று மாற்றினார். ஆனால், இவ்வளவு குறுகிய காலத்தில் அந்தப் பெயர் வரலாறாக மாறும் என யாரும் நினைக்கவில்லை. 15.04.2021 வரை அதே சிரித்த முகத்தோடு இருந்தவர், இனி நம்மோடு இல்லை என்று நினைக்க நெஞ்சம் மறுக்கிறது.

விவேக் இனி ஜனங்களோடு இல்லாமல் போனாலும் எப்போதும் அவர் ஜனங்களின் கலைஞன்தான். அவருடைய நகைச்சுவை காட்சிகளும் அதில் இருக்கும் கருத்துகளும் என்றும் அழிவில்லை.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சோடி தோட்டுக்காய் உயிரையே பறித்த கொடுமை

## மீளுமா எம் சமூகம்?



த.சுபேசன்

ஒரு சோடி காதுத் தோட்டிற்காக ஓர் உயிரைக் கொன்று அதை நம்பிவாழ்ந்த மற்றோர் உயிரை அநாதையாக்கிய, எள்ளளவேனும் மனிதாபிமானம் இல்லாத சம்பவம் ஒன்று கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலையில் தென்மராட்சி-மீசாலை கிழக்குப் பகுதியில் இடம்பெற்றிருந்தது.

மீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த 80வயது முதியவர் செல்லையா சிவராசா கொள்ளையனால்கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம்தான் இன்று வரை ஒவ்வொரு மனித மனங்களிலும் இழையோடிக்கொண்டிருக்கின்றது.

ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த சிவராசா தென்மராட்சியைச் சேர்ந்த ராசம்மா என்பவரை மணம் முடித்து தென்மராட்சியின் மீசாலை கிழக்கு பகுதியில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அமைதியான வாழ்வை நடத்தி வந்துள்ளார். குணத்தில் சிறந்தவராகவும், மற்றவர்களை மதிக்கும் தன்மை கொண்டவராகவும், சமூகத்தில் சிறந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தவர்களாகவும் வாழ்ந்த சிவராசா-ராசம்மா தம்பதியினருக்கு ஆண்டவன் குழந்தைப் பாக்கியத்தை கொடுக்கவில்லை.

மீசாலை கிழக்கு ஊர் எல்லைத் தெருவில் அமைதியான சூழலில் ஒருவருக்கு ஒருவர் துணையாக, அன்பிற்கு இலக்கணமாய் வாழ்ந்த அந்த வயோதிபத் தம்பதியின் வாழ்வில் அன்று விதி விளையாடியிருந்தது.

ஏப்ரல் 12 ஆம் திகதி திங்கட்கிழமை நடுச்சாமம் 12 மணிக்கு நாய்கள் குரைக்க ஆரம்பிக்கின்றன. இருப்பினும் அண்மைக்காலமாக திருட்டுக்கள் குறைவடைந்ததன்ாலோ என்னவோ அயலவர்கள் அதனை பெரிதாக பொருட்படுத்தவில்லை.

அந்த நேரம் சிவராசா-ராசம்மா தம்பதியினர் தனித்திருந்த வீட்டின் பின் கதவு உடைக்கப்பட்டு திருடன் உள் நுழைந்து தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பிக்கிறான்.

முதலில் ராசம்மாவை அணுகிய கொள்ளையன் அவரின் கை, கால்களைக் கட்டி விட்டு சத்தம் போட்டால் "கணவரை வெட்டுவேன்" என மிரட்டுகிறான். தான் கத்தி சத்தம் போட்டால் கணவரின் உயிருக்கு ஆபத்து என உணர்ந்த ராசம்மா நடப்பது நடக்கட்டும் என ஆண்டவனை வேண்டிக் கொண்டு அமைதியாகிறார். வந்த திருடன் ராசம்மாவின் பின் பக்கமாக நின்றுகொண்டு காதுத் தோட்டினை கழற்றி எடுத்துக் கொண்டு வீட்டினை சல்லடை போட்டு ஆராய ஆரம்பித்துள்ளான்.

அப்போது உசாரடைந்த சிவராசா முகத்தை கறுப்புத் துணியால் மறைத்திருந்த திருடனை அடையாளம் கண்டாரோ தெரியவில்லை திருடனின் பெயரை உச்சரித்து அவனை எச்சரித்திருக்கக்கூடும் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இதற்கு மேல் விட்டு வைத்தால் தான் மாட்டிக்கொள்ள நேரிடும் என நினைத்த அந்தக் கொள்ளையன் துணி ஒன்றினால் ஈவிரக்கமின்றி மதிப்பளித்து பேணிப் பாதுகாக்க வேண்டிய அந்த முதுசத்தை கழுத்தை நெரித்து கொலை செய்திருக்கிறான்.

அல்லது சிவராசா அவலக்குரல் எழுப்ப அதனை கட்டுப்படுத்த திருடன் அவரின் கழுத்தை நெரிக்க சிவராசா உயிரிழந்திருக்கக்கூடும் எனவும் ஒவ்வொருவர் மனக்கண்ணிலும் ஒவ்வொரு தோற்றப்பாடு. எது என்னவோ அந்த எண்பது வயது முதியவரின் கழுத்தை நெரிக்கும் அளவிற்கு கொடூர மனம் கொண்ட அந்த கொள்ளையனை எவராலும் எச் சந்தர்ப்பத்திலும் மன்னிக்க முடியாது. இதைச் செய்தவன் கூட ஏன் செய்தேன் என இப்போது தனது மனதிற்குள் புழுங்கி அழக்கூடும்.



இதற்கிடையில் சிவராசாவை காப்பாற்ற முனைந்த ராசம்மாவையும் கொள்ளையன் ஏதோ செய்திருக்கக்கூடும். கணவனை பறிகொடுத்த ஏக்கத்தில் ராசம்மாவுக்கு நடந்தவை எவையும் சரியாக ஞாபகமில்லை. கணவன் அடங்கிப் போக முன்னரே ராசம்மா திருடனின் தாக்குதலால் சுயநினைவிழந்து விழுந்திருக்கக்கூடும்.

முதியவர் உயிரிழந்ததனை உணர்ந்த கொள்ளையன் வீட்டில் பணம், நகை எனப் பெறுமதியான பொருட்கள் இருந்தும் அவை மீது நாட்டம் காட்டாமல் ராசம்மாவின் காதில் இருந்து அபகரித்த அந்த ஒரு சோடி தோட்டுடன் சிவராசாவின் வீட்டை விட்டு வெளியேறுகிறான்.

ஆனால் நாய்களின் குரைப்புச் சத்தம் மேலும் அதிகமாக ஏதோவொரு சந்தேகத்தில் சிவராசாவின் வீட்டில் இருந்து ஒரு காணி தள்ளியுள்ள வீட்டில் இருந்த தந்தையும்-தனயனும் டோச்லைற் உடன் வீதிக்கு இறங்கியுள்ளனர். அப்போது சிவராசா வீட்டிற்கு அடுத்ததாக உள்ள சந்தியில் பிளசர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று கிழக்குப் பக்கமாக கொடிகாமம் நோக்கி விரைந்து செல்கிறது.

12.30 மணிக்கு யார் மோட்டார் சைக்கிளில் செல்வது என ஆராய்ந்த அவர்களின் மனதில் ஏதோ ஒரு சந்தேகம் எழுந்திருக்கிறது. இதற்கிடையே மயக்கத்தில் இருந்த ராசம்மா தனது வாய்க் கட்டினை அவிட்டு விட்டு அழுத சத்தம் அயல் வீட்டு தந்தைக்கும் மகனுக்கும் கேட்க விரைந்து சென்ற அவர்கள் ராசம்மாவின் கைக் கட்டினை அவிழ்த்து அவரை தேற்றியுள்ளனர்.

இவ்வளவு நடந்தும் சிவராசா தனது படுக்கையில் குப்புறப் படுத்திருக்கிறார்.

கணவனை திருடன் கழுத்தை நெரித்த அதிர்ச்சியில் ராசம்மாவிற்கு அந்த நேரம் ஞாபகம் வரவில்லை.

உதவிக்கு வந்தவர்களிடம் "அவரை ஒருக்கால் பாருங்கோ படுக்கையில் படுத்திருக்கிறார்" எனக் கூறியுள்ளார்.

**"முதலில் ராசம்மாவை அணுகிய கொள்ளையன் அவரின் கை, கால்களைக் கட்டி விட்டு சத்தம் போட்டால் "கணவரை வெட்டுவேன்" என மிரட்டுகிறான். தான் கத்தி சத்தம் போட்டால் கணவரின் உயிருக்கு ஆபத்து என உணர்ந்த ராசம்மா நடப்பது நடக்கட்டும் என ஆண்டவனை வேண்டிக் கொண்டு அமைதியாகிறார். வந்த திருடன் ராசம்மாவின் பின் பக்கமாக நின்றுகொண்டு காதுத் தோட்டினை கழற்றி எடுத்துக் கொண்டு வீட்டினை சல்லடை போட்டு ஆராய ஆரம்பித்துள்ளான்."**

வந்தவர்களும் திருடன் சிவராசா அண்ணைக்கு மயக்க மருந்து அடித்திட்டான் போல. அதுதான் மயக்கத்தில கிடக்கிறார் என நினைத்து தனது படுக்கை விரிப்பில் குப்புறப் படுத்திருந்த சிவராசாவை தூக்கி எழுப்புகின்றனர்.

தூக்கிய அயலவர்களுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. மயக்கத்தில் கிடக்கிறார் என நினைத்து தூக்கியவர்கள் உடல் விறைத்து, கண் முழி வெளியே பிதுங்கிய நிலையில் காணப்பட்ட சிவராசாவின் கழுத்தில் இறுக்கப்பட்டிருந்த துணியை அவிழ்த்து முதலுதவி செய்தும் எந்த அசைவுமில்லை.

இருப்பினும் அவர்களுக்கு மனம் கேட்கவில்லை. உடனடியாக அம்புலன்ஸ் சேவையை நாடுகின்றனர். அவர்கள் வந்து பரிசோதனையில் சிவராசாவின் உயிர் பிரிந்து சில மணி நேரங்கள் ஆகியிருந்ததனை உறுதிப்படுத்தியிருந்தனர். தனக்கு ஒரே துணையாக பல தசாப்தங்களாக இருந்த சிவராசாவின் இழப்பை அந்த நிமிடம் ராசம்மாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தாங்கிக்கொள்ளவும் முடியவில்லை.

நேரம் கடந்தோடியது. முறைப்பாடு கிடைத்து இரவு இரண்டு மணியளவிலேயே சாவகச்சேரி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். காலையில் சிவராசா வீட்டிற்கு முன்பாக சனக்கூட்டம். வீட்டிற்குள் செல்ல முடியாதவாறு பொலிஸார் அபாயப் பகுதியாக சிவராசா வீட்டு வளவினை அறிவித்திருந்தனர்.

பலருக்கு சம்பவம் தெரியாது. சிவராசா அண்ணை வீட்ல இரவு களவாம். அதுதான் பொலிஸ் நிக்கிது என்று அவரவர் அறிந்ததை பேசிக்கொண்டிருந்தனர்.

ராசம்மாவும் வீட்டு வாயிலுக்கு வெளியே கதிரையில் உக்காந்திருக்கிறார். தனது நகை முழுவதும் கொள்ளையன் கொண்டு சென்றிருப்பதாகவே அதுவரை ராசம்மா எண்ணியிருந்தார். ஆனால் தடயவியல் பொலிஸார் வீட்டில் இருந்த ஏனைய பணம், நகைகள் திருட்டுப் போகவில்லை என்பதனை உறுதிப்படுத்தியிருந்தனர். அப்போது தான் விடயம் அறிந்த அயலவர் ஒருவர் சம்பவ இடத்திற்கு வருகிறார். இருப்பினும் களவு போன விடயம் மாத்திரமே அவருக்கு தெரிந்திருக்கின்றது போலும்.

"சிவராசா அண்ணை எங்க ஆளக் காணேல. பொலிஸில என்ரி போடப் போட்டாரோ?". எனக் கேட்ட அந்த வார்த்தை ராசம்மாவின் அழுகையை மேலும் அதிகரித்திருந்தது. அந்த இடத்தில் நின்றவர்கள் மனங்களிலும் அந்த கேள்வி பாரிய தாக்கத்தையும் இரக்கத்தையும் உண்டுபண்ணியிருந்தது.


ஆரம்பத்தில் மூன்று திருடர்கள் வந்திருந்ததாக ராசம்மா தெரிவித்த போதிலும் பொலிஸார் ஒரு கொள்ளையன் மாத்திரமே வந்திருந்ததனை விசாரணைகள் மூலமாக கண்டறிந்திருந்தனர். மனிதாபிமானமற்ற இந்தக் கொலையை சிவராசாவிற்கு தெரிந்த யாரோ தான் செய்திருக்கக்கூடும் என அனைவரும் உறுதியாகக் கூறி வரும் நிலையில் ராஜபக்ஷ தலைமையிலான சாவகச்சேரி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த கொலைச் சம்பவம் தனித்திருக்கும் வயோதிபர்களுக்கும் பாதுகாப்பில்லை என்ற செய்தியை தந்திருக்கின்றது. முதுமையை கண்டால் இரங்குவார்கள் என்ற நம்பிக்கையை குறித்த கொலைச் சம்பவம் அடியோடு மாற்றியுள்ளது.

தென்மராட்சி-புத்தூர்ச் சந்திப் பகுதியில் கடந்த வருடம் நத்தார் தினத்தன்று அப்பாவிப் பொதுமகன் ஒருவர் நடு வீதியில் வைத்து மார்பில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட அந்த அச்ச நிலைமையில் இருந்து மீள முன்னர் புது வருட தினத்தை அண்மித்து இடம் பெற்றுள்ள இரண்டாவது கொலைச் சம்பவம் தென்மராட்சி மக்களை மேலும் அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

எண்பது வயது முதுமைக்குக் கூட பாதுகாப்பில்லாத ஓர் இக்கட்டான கால கட்டத்தில் எமது சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. மக்கள் மனங்களில் குடிகொண்டுள்ள அச்சத்தை அடியோடு அழிக்க வேண்டிய பாரிய பொறுப்பு பாதுகாப்பு தரப்பிற்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கொலையில் மன்றந் திருக்கும் மர்மங்கள் துலங்குமா? இல்லை இதுவும் கடந்து போகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தின் நன்மை நோக்கி




உடுவிலூர் கலா.

மனிதன் ஒரு சமூகப்பிராணி. நன்மை, தீமைகள் யாவும் சமூகமயப் படுகின்றன. ஒரு சமூகத்தின் ஆரோக்கியம் தனி மனிதனின் ஆரோக் கியத்திலேயே தங்கியுள்ளது. மனிதனுக்கும் சமூகத்துக்குமான தொடர் பானது மிகவும் நெருக்கமானது. நேர் சிந்தனை கொண்ட ஒவ்வொரு மனித னையும் சமூகம் அங்கீகரிக்கின்றது. நம்மை மனிதனாக வாழவைத்த சமூகத்துக்கு நாம் செய்ய வேண்டியவை நிறையவே இருக்கின்றன. நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் சமூகத்தின் நலம் நோக்கி அமைய வேண்டியது கட்டாயமானது.

இன்று உலக நாடுகள் கொண்டுள்ள பாரிய பிரச்சினை கொரோனாத் தொற்று. தொடர்ந்து நாம் உயிரிழப்புக்களை சந்தித்ததாலோ என்னவோ கொரோனா வைரஸ் எம்மீது கொஞ்சம் கருணை காட்டியுள்ளது எனலாம். ஆரம்பத்தில் எதிர்பாராத விதமாக ஒருசிலருக்கு ஏற்பட்ட தொற்று சுகாதாரத் துறையினரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினால் கட்டுப்படுத்தப்பட்டது. தற்போது சமூகம் பற்றிய அக்கறையீனமும் சுயநலமும் பணம் தேடும் வணிக சிந்தனையும் கொண்ட ஒரு சிலரால் பல தொற்றாளர்கள் கண் டறியப்பட்டதுடன் பல குடும்பங்கள் அங்குமிங்குமாக தனிமைப்படுத்தப்பட் டுள்ளன. பொது வெளியில் முடக்கல் நிலை தொடர்வதால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இன்றைய நிலையில் ஒவ்வொருவரும் தம்மைத்தாம் பாதுகாத்தாலே போதும். சமூகம் பாதுகாக்கப்படும். கொரோனாத் தொற்றான இக்கட்டான இந்நேரத்திலும் கஞ்சா கடத்தல், கொலை, கொள்ளை, வாள்வெட்டு, பாலியல் தொழில் என இழிநிலை செயற்பாடுகள் நடந்த வண்ணமேயுள் ளன. பணத்துக்காக எப்படியும் வாழலாம் என வாழ்பவர்களால் பல குப்பை மேடுகள் உருவாகின்றன. இந்நோய்த் தொற்றுக்கு காரணமாக உள்ளவர் கள் சமூக விரோதிகளே. சுகாதாரப் பணியாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் போன்றோர் உயிரைப் பணயம் வைத்து சமூகத்துக்காக, நாட் டுக்காக உழைக்கும் போது சமூகத்துரோகிகளாக இருப்போரை என்ன செய்வது?

"ஊரோடின் ஒத்தோடு" என்பார்கள். எப்போதும் ஒத்து வாழ்வதே நலம். அடுத்தவரை ஏமாற்றி சமூகத்தை ஏமாற்றுபவர்கள், தம்மைத் தாமே ஏமாற்றுகிறார்கள். என்றோ ஒருநாள் தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும். சமூகத்தின் விரோதியாக வாழ்வதை விட செத்து மடிவது மேல்.

உயிரிழப்புக்கள் நமக்குக் சாதாரணமாகிவிட்டன. இந்த நேரத்தில் வாகன விபத்துக்கள், நீர்நிலைகள் போன்றவற்றாலும் தற்கொலைகளாலும் கூட உயிரிழப்புக்கள் நிகழ்ந்த வண்ணமேயுள்ளன. "சிறுபான்மை" என்னும் வரையறைக்குள் இருக்கும் நாம் இனியாவது உயிரிழப்புக்களை தவிர்க்க வேண்டும். மனிதத்தை தக்கவைக்க வேண்டும். இருக்கும் உயிர்களை பறிகொடுக்காது இருப்பதே நம்மினத்தைப் பாதுகாக்க ஒரேவழி.

போதைப் பொருள் கடத்தலும் பாவனையும் எம் சமூகத்தில் பரவலாக அச் சமின்றி தொடர்கின்றது. போதைப் பொருட்களால் நடுத்தெருவுக்கு வந்த குடும்பங்கள் எத்தனை, பாலியல் வன்புணர்வால் பலியான பெண்கள் எத் தனை பேர்? பாதிக்கப்பட்ட சிறுவர்கள், மாணவர்கள் எத்தனை பேர்? சிறையுள் இருக்கும் இளைஞர்-யுவதிகள் எத்தனை பேர்? என்பதை சமூகத்துரோகிகளாக செயற்படும் போதைப் பொருளாளர்கள் சிந்திக்க வேண்டும். கடத்தல்காரர், விற்பனையாளர், பாவனையாளர் யாவருமே சமூகத்துரோகிகளே. இதில் கசப்பான உண்மை என்னவெனில் பெண் களின் பங்களிப்பும் அதிகமாகியுள்ளது.

நாம் ஒன்றிணைந்து கொரோனாவை ஒழிக்க வேண்டிய நேரமிது. ஒவ் வொரு உயிரையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்போடு தம்மை முழுவதுமாக அர்ப்பணித்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் சுகாதார அதிகா ரிகள்,பணியாளர்கள் அனைவரும் நம்மைப் போல் மனிதரே. அவர்கள் நிற்பது சொர்க்கத்தில் அல்ல. தொற்றுக்களத்தில். சற்று அசட்டையீனமாக அவர்கள் இருந்தாலும் தொற்றுக்கு ஆளாகும் நிலை. எவ்வளவு சிரமங் களை எதிர்கொண்டு அந்த ஆடைகளை அணிந்திருக்கிறார்கள். அவர் களுக்கும் குடும்பம் உண்டு. நாம் என்ன செய்கிறோம்? முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளி பேணி, அடிக்கடி கைகளை கழுவி சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்போம். சுயதனிமைப்படுத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் சமூகத்தின் நன்மைகருதி தனிமையாய் இருப் போம். பி.சி.ஆர்.பரிசோதனை செய்யும் நிலை வந்தால் தயங்காது பரிசோதனைக்கு உட்படுவோம். வீண் வதந்திகளை பரப்பாமலும் நம் பாமலும் காலத்தின் நிலை உணர்ந்து வாழ்வோம்.

ஆக ஆரோக்கியமுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற் படுவோம். தொடரும் முடக்கல் நிலையால் பொருளாதாரம், கல்வி போன் றவற்றில் பின்னடைவுகளை சந்தித்துள்ள நாம் கிடைத்துள்ள ஒவ்வொரு நிமிடத்தையும் மகத்தான தருணமாக மாற்றி சமூகத்துக்கு நன்மை செய்ய முனைப்புடன் செயற்படுவோம்.

# புது வருடத்தில் புதியதொரு சிந்தனை

நாம் வாழ்கின்ற இந்த வாழ்க்கை நிரந்தரமில்லாத ஒன்று. வாழும் காலம் வரை மகிழ்வுடனும் அனைவருடனும் ஒற்றுமையோடும் வாழவேண்டும்.ஒவ் வொருவர் மனதிலும் பல ஆசைகளும், இலட்சியங்களும் அலைமோதிக் கொண்டே உள்ளன.ஆனால் எமது எண்ணம் போல் வாழ்க்கை அமைகின் றதா? என்றால் இல்லை என்றே பதில் கூறவேண்டும். ஏன் உங்களால் மட்டும் சாதிக்க முடியவில்லை? நாம் அதற்கு முயற்சி செய்யவில்லை என்பதே உண்மை. இதோ வாழ்க்கையில் சாதிப்பதற்கு எமக்கு கட்டாயம் இருக்க வேண்டிய பண் புகள் சில,

- **உனது இலக்கு பெரியளவில் இருத்தல் வேண்டும்**

எதிர்காலத்தில் நீ எந்த நிலைக்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகின் றாயோ, அந்த இலக்கு உயர்ந்ததாக இருத்தல் வேண்டும்.அதை நீ ஒரு குறிப் பேட்டில் எழுதி,அந்த இலக்கை அடைய நீ செய்ய வேண்டியவை எவை என் பதை சிந்தித்துப்பார்.

- **சரியான திட்டமிடலை மேற்கொள்.**

உனது எதிர்கால இலக்கை அடைய நீ செய்ய வேண்டியது திட்டமிட்டபின் தினந்தோறும் அதை மேற்கொள்ளப்பழகு. எடுத்துக்காட்டாக நீ சிறந்த வைத் தியராகவோ, சட்டத்தரணியாகவோ வருவதற்கு ஆசைகொண்டால், அதை மனதில் கொண்டு தினந்தோறும் அதை நோக்கி நகரவேண்டும்.

- **நேரத்தை ஆளப்பழகு**

இந்த நிமிடம் தான் உனக்கானது.எந்தவொரு சூழ்நிலையிலும் நேர த்தை வீணாக்காதே.நீ திட்டமிட்டபடி அந்தந்த வேலையை அதற்காக ஒதுக்கிய நேரத்தில் செய்து முடி.

- **பிறகு என்பதை பிற்போடு**

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிறகு செய்வோம்.பிறகு பார்த்துப்போம் என்று தள்ளிவைக்காதே. நீ திட்டமிடலின்படி நடப்பவன்.ஆனால் பிறகு என்ற ஒரு வார் த்தை உன்னை இலக்கு நோக்கி அழைத்துச் செல்லாது.

- **என்னால் முடியும் என்ற மந்திரத்தை உச்சரி**

எந்த வேலையானாலும்,எந்த கஷ்டமான நிலை வந்தாலும் ,இந்த பிரச் சினையில் இருந்து "என்னால் வெளியில் வர முடியும்" ,"என்னால் இதை நிச் சயம் செய்யமுடியும்" என்ற எண்ணங்களை மனதில் பதித்துக்கொள்.

- **அவமானங்களை சேமி**

நீ கடந்து வந்த வாழ்க்கைப்பாதையில் எத்தனையோ பல அவமானங்களை கடந்து வந்திருப்பாய். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீ சந்தித்த அவமானங் களை, வலிகளை மறந்து விடாதே. அவை நிச்சயம் உன்னை வலிமையாக்கும்.

- **விமர்சனங்களை தள்ளிவை**

நீ புதிதாக ஏதும் செய்ய தொடங்கும் போது, ஏன் உனக்கு இந்த வேலை, இது உன்னால் முடியாது என எம்மை கவனம் சிதற வைக்க பலர் வருவார்கள். அவர்கள் கருத்தைபுறந்தள்ளி விட்டு, நீ உன் இலக்கை நோக்கி பயணி....

- **தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்தாதே**

உனது இலக்கை நோக்கி நீ செல்லும் பொது உனது கவனம் பல வழிகளிலும் திசை திரும்பி நீ பாதை மாறி செல்ல வாய்ப்புண்டு. எனவே உனது இலக்கை நோக்கிச் செல்லும் நேரத்திலும் ஏனைய விடயங்களில் கவனம் செலுத்தாதே.

- **நினைப்பதை முடி**

நிச்சயமாக நீ ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டு அதற்கேற்றபடியே செயல் களில் ஈடுபடுவாய். அவ்வாறிருக்கும் போது இன்றைய நாளுக்கான வேலைகளை இன்றே செய்து முடிக்கப்பழகு.

- **இறுதிவரை போராடு**

உனது இந்தப்பயணத்தில் ஓரிரு நாட்கள் திட்டமிட்டு அதற்கேற்றாற்போல் செயல்களை தொடர்ச்சியாக செய்து விட்டு அதன்பின் மறந்து விடாது வாழ்நாள் முழுவதும் தொடர்சசியாக போராடிக்கொண்டே இரு. நிச்சயம் ஒரு நாள் உன் விருப்பம் போல் வாழ்க்கை மாறும்.

புஸ்பராசா கோபிகா




## நீங்களும் எழுத்தாளரே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்.

- அரசியல் • ஆன்மிகம் • பொழுதுபோக்கு • "வியாசர்" கேள்விகள்
- வாழ்வில் மறக்க முடியாத விடயங்களை எழுதுங்கள்.

தரம் கண்டு பிரசுரிக்கப்படும். "உங்களை உலகறிய செய்கிறோம் நாம்"

முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
சிறு "பத்தி" எழுத்துக்கள் வரவேற்கத்தக்கது.

ஆசிரியர், வலம்புரி,
இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மியன்மார்" மிரட்டும் ராணுவம் அஞ்சாத மக்கள்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்துவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத்தின் அட்டூழியங்களால் இந்தியாவின் அண்டை நாடான மியன்மார் அமைதியிழந்து தவிக்கிறது. இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடி வரும் மக்கள்மீது இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களால், இதுவரை 600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

மியன்மாரில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், ஆங் சான் சூகி தலைமையிலான 'தேசிய ஜனநாயக லீக் கட்சி' வெற்றிபெற்றது. ஜனாதிபதி வின் மைன்ட் தலைமையில் ஆடசியமைக்கப்பட்டது. ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி, புதிய அரசை ஏற்பதற்கு அந்நாட்டு இராணுவம் மறுத்துவிட்டது.

அதனால், அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல் நிலவிவந்தது. இந்தநிலையில், பெப்ரவரி முதலாம் திகதியன்று ஆட்சியைக் கவிழ்த்து, அதிகாரத்தைக் கைப்பற்றியது இராணுவம்.

தற்போது, இராணுவத் தலைமைத் தளபதி மின் ஆங் லெய்ங் கையில் அதிகாரம் இருக்கிறது. இராணுவ ஆட்சிக்கு எதிராக அங்கு பெரும் போராட்டங்களை மக்கள் முன்னெடுத்து வருகிறார்கள்.

ஆட்சிக்கவிழ்ப்பு, இராணுவ ஆட்சியால் ஏற்படும் உள்நாட்டுக் குழப்பங்கள் போன்றவை மியன்மாருக்குப் புதிதல்ல. பிரிட்டிஷாரிடமிருந்து 1948ஆம் ஆண்டு மியன்மாருக்கு விடுதலை கிடைத்திருந்தாலும், அங்கு ஒருபோதும் அமைதி நிரந்தரப்பட்டதில்லை.

1962ஆம் ஆண்டு ஆட்சிக்கவிழ்ப்பு நடைபெற்று, ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது. இராணுவ ஆட்சிக்கு எதிராக அங்கு ஏராள்மான போராட்டங்கள் நடைபெற்றன. ஜனநாயகத்துக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்ற ஆங் சான் சூகி, 1989 ஆம் ஆண்டு வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டார்.

பின்னர், அடுத்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவர் வெற்றிபெற்றார். ஆனாலும், அவரிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கு இராணுவம் மறுத்துவிட்டது. 15 ஆண்டுகள் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்ட அவருக்கு, அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட ஆங் சான் சூகி, 2012 ஆம் ஆண்டு இடைத்தேர்தல் ஒன்றில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், ஆங் சான் சூகி தலைமையிலான 'தேசிய ஜனநாயக லீக் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்தது.








2020 தேர்தலில் அதைவிடப் பெரிய வெற்றியை அதாவது, 83 சதவிகித வாக்குகளை அந்தக் கட்சி பெற்றது. ஆனால், ஆட்சியை இராணுவம் கவிழ்த்துவிட்டது. ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின்மைன்ட் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் மூத்த அதிகாரிகளும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். பொது இடங்களில் ஐந்து பேருக்கு மேல் கூடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் நிலையில், இராணுவத்துக்கு எதிரான போராட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தலைநகர் நேபிடோ, யாங்கூன், மண்டலே உள்ளிட்ட நகரங்களில் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு போராட்டம் நடத்தி வருகிறார்கள். போராட்டங்களில் இளைஞர்களே பெருமளவில் பங்கேற்கிறார்கள். புத்த துறவிகள் பேரணி நடத்துகிறார்கள்.

தொடர்ச்சியான இந்தப் போராட்டங்கள், இராணுவ ஆட்சியாளர்களுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுத்து வருகிறது. போராட்டத்தை நசுக்குவதற்கு பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதுடன், வட்ஸ்அப் போன்ற தகவல் தொடர்பு செயலிகளும் முடக்கப்பட்டுள்ளன.

போராடிவரும் மக்கள்மீது இராணுவம் கொடூரமான தாக்குதல் நடத்தி வருகிறது. கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும், இறப்பர் தோட்டாக்களால் சுட்டும் போராட்டக்காரர்களை விரட்டியடிக்கிறார்கள். அதனால், பாதுகாப்புக்காக இரும்புக் கவசங்களுடன் போராட்டங்களில் மக்கள் பங்கேற்கிறார்கள். அப்படியும் கூட, இராணுவத்தின் தாக்குதல்களில் இதுவரை 600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சுமார் 3,000 பேர் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்

மியன்மார் இராணுவத்தின் இத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு, உலகம் முழுவதும் கண்டனங்கள் எழுந்துள்ளன. "அமைதியான போராட்டத்துக்கான உரிமை மதிக்கப்பட வேண்டும். மக்களின் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க நினைத்தால், மியன்மார் ராணுவம் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" என்று ஐ.நா.சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய சூழலில், ஓராண்டு காலத்துக்கு அவசரநிலை தொடரும் என்று முதலில் அறிவித்திருந்த ராணுவம், போராட்டங்கள் வலுத்து வருவதால், 'நீண்டகாலம் இராணுவ ஆட்சி இருக்காது. ஜனநாயக ரீதியில் நடைபெறும் தேர்தலில் வெற்றி பெறும் கட்சியிடம் அதிகாரத்தை இராணுவம் ஒப்படைக்கும்' என்று கூறியுள்ளது. ஆனால், தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பது பற்றி மட்டும் இராணுவம் வாய் திறக்கவில்லை.

போராட்டக்காரர்கள் மீதான இராணுவத்தின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாகச் செய்திகள் வருகின்றன. இருப்பினும், அடக்குமுறைகளைக் கண்டு பெரிதாக அச்சப்படாமல், தங்கள் உரிமைகளுக்காக மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் கோபத்தையும் உறுதியையும்விட ஒரு வலிமையான ஆயுதம், உலகின் எந்த இராணுவத்திடமுமில்லை.

## இந்தியாவும் மியன்மாரும்!

தற்போது மியன்மார் என்று அறியப்படும் பர்மா, 1939 ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்தது. விடுதலைக்குப் பிறகு, தனித்தனி நாடுகளாக ஆகிவிட்ட இந்தியாவும் பர்மாவும் நெருக்கமான உறவையே பேணிவந்தன.

மியன்மாரில் கணிசமான எண்ணிக்கையில் இந்தியர்கள் வசித்து வந்த நிலையில், 1930களில் நடந்த ஜப்பான் ஆக்கிரமிப்பு, 1960களில் ஏற்பட்ட வன்முறை உள்ளிட்ட காரணங்களால் அங்கிருந்து இந்தியர்க்ள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். அதனால், மியன்மாரில் இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது. அண்டை நாடாக இருந்தபோதிலும், தற்போதைய இராணுவ ஆட்சி குறித்து இந்திய அரசு 'அமைதி' காத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## தோப்பில் தெரிந்த தீபம்

காலத்தின் பதிவு 66




"அரச வீதியின் முகப்பைக் கவனித்தாயா அமீர்?" என்று வினவினான் அநபாயன்.

"கவனித்தேன்" என்றான் அமீர் தலையைக் குனிந்த வண்ணமே.

"அதோ செல்லும் ஒவ்வொரு வண்டியும் புரவியும் இதர வாகனங்களும் நிறுத்தப்படுகின்றன" என்று மீண்டும் குறிப்பிட்டான் அநபாயன். அமீருக்கு மட்டும் கேட்கும் குரலில்.

"அது மட்டுமல்ல வாகனங்களை எட்டிப் பார்த்துச் சோதனையும் செய்கிறார்கள்" என்ற அமீரின் பதிலில் சிறிது கவலையும் தொனித்தது.

"புரவிகளில் வருபவர்கள் கீழிறக்கப்படுகிறார்கள்" என்று சுட்டிக் காட்டினான் அநபாயன்.

"ஆம் சிலருடைய வாள்களும் இதர ஆயுதங்களும் கூடப் பறிக்கப்படுகின்றன."

"ஆயுதமுள்ள யாரையும் அரச வீதிக்குள் அனுமதிக்க மாட்டார்கள் போலிருக்கிறது."

"அதைப்பற்றி நமக்கு ஏன் கவலை? உங்களிடம் ஆயுதம் ஏதுமில்லை. என்னிடமிருக்கும் குறுவாள்கள் இரண்டையும் காவலர் பறித்துக் கொண்டாலும் பாதகமில்லை."

"இதை அறிந்துதான் ஆயுதமேதும் கொண்டுவர வேண்டாமென்று என்னைத் தடுத்துவிட்டாயா?"

"ஆம்."

"எப்படித் தெரியும் உனக்கு?"

"இந்த ஆயுத நீக்கல் உற்சவம் பாலூரில் சில நாட்களாக அடிக்கடி நடக்கிறது. பாலூரின் ஜனத் தொகையில் மூன்றிலொரு பங்கு தமிழர்கள் இல்லையென்றால் இத்தனை நாள் தமிழ் வணிகரும், மற்றோரும் நிராயுதபாணிகளாகப் பட்டிருப்பார்கள். அது முடியாததால், அடிக்கடி இத்தகைய பரிசோதனையும் ஆயுதப் பறிமுதலும் நடக்கிறது. சாதாரணமாகவே பாலூரில் தமிழரைப் பற்றி எச்சரிக்கை அதிகம். அதுவும் நீங்கள் சிருஷ்டித்த இன்றைய நிலை மிகவும் மோசமல்லவா?" என்று விளக்கினான் அமீர்.

"ஆம் ஆம்" அநபாயனின் அந்த இரண்டு 'ஆமி'னில் கவலை மிதமிஞ்சித் தொனித்தது.

"நீங்கள் உங்கள் நண்பர்களை நீதிமண்டபத்திலிருந்து விடுவித்தது முதல் ஊர் மூலை முடுக்குகளிலெல்லாம் காவல் பலப்படுத்தப்பட்டு விட்டது" என்று மேலும் விபரித்தான் அமீர்.

"அதைத்தான் வரும் வழியில் பார்த்தோமே" என்றான் அநபாயன்.

"அப்படியிருக்க, அரச வீதியில் மட்டும் எச்சரிக்கைக் குறைவாயிருக்குமா? அதுவும் பீமன் மாளிகையும் மாளிகையின் முக்கிய வாயிலான கிழக்குப் பகுதியும் இருக்குமிடத்தில் கேட்க வேண்டுமா?" என்று அமீர் விளக்கினான்.

அமீரின் இந்த விளக்கம் தேவையென்றாலும், அது தேவைப்பட்டதுபோல் தலையை அசைத்த அநபாயன், "ஆம் அமீர்! நிலைமை புரிகிறது எனக்கு. இருப்பினும் இந்த வீதிக்குள் எப்படி நுழைவது என்பதுதான் புரியவில்லை என்றான்.

"அதற்கு மருந்து வைத்திருக்கிறேன்" என்று அமீர் சமாதானம் சொன்னான்.

"மருந்து பலிக்குமா?" என்று வினவினான் அநபாயன்.

"நூற்றுக்குத் தொண்ணூறு பலிக்கும்" என்று திடமாகச் சொன்னான் அமீர்.

"பத்து சந்தேகந்தான்?"

"ஆம்"

"அந்தப் பலிக்காத பத்தில் சிக்கிக் கொண்டால்?"

"போரிட்டுத்தான் தப்ப வேண்டும்."

"வாளைக்கூட வேண்டாமென்று நிராயுதபாணியாக அழைத்து வந்து விட்டாயே! போரிடுவது எப்படி?"

அத்தனை அபாயத்திலும் மெள்ள நகைத்தான். "அநபாயரே! உங்கள் திறமையை அறியாமலா உங்களை நிராயுதபாணியாக அழைத்து வந்தேன்? நம்மிடம் வாளில்லாமற் போனாலென்ன, எதிரிகளிடம் வாளிருக்குமே. காவலன் எவனாவது சந்தேகப்பட்டால் என் குருவாள் அவனைத் தீர்த்துவிடும். அது பலிக்கவில்லையென்றால் நீங்கள் அவன் மீது பாய்ந்துவிடலாம். புலிக் குட்டிக்குப் பாய்ச்சலை நானா சொல்லித் தர வேண்டும்?" என்றான் அமீர்.

இந்தப் பதில் சொல்லி முடிவதற்கும் இருவரும் வீதி முகப்புக் காவலை எட்டுவதற்கும் சரியாயிருக்கவே, மேற்கொண்டு ஏதும் பேசாமல் ஈட்டிகளைக் கொண்டு வழிமறித்து நின்ற காவலர் கூட்டத்திடம் வந்து இருவரும் புரவிகளை நிறுத்தினார்கள். அவர்களுக்கு முன்பிருந்த இரண்டு வண்டிகள் சோதிக்கப்பட்டு அரச வீதிக்குள் நகர்ந்ததும் அமீரின் புரவியையும் அநபாயனின் புரவியையும் இருமுறை சுற்றி வந்து அவை இரண்டிலும் பக்க வாட்டில் தொங்கிய நான்கு பெரும் பைகளைத் தட்டிப் பார்த்தானர் காவலர் இருவர். இந்தச் சோதனை நடந்து கொண்டிருக்கையிலேயே முன் வண்டிகளை அனுப்பிவிட்டுப் புரவிகளை அணுகிய காவலர் தலைவனொருவன், "ஏன் முக்காட்டிருக்கிறீர்கள்? எடுங்கள் முக்காட்டை? உங்கள் முகத்தைப் பார்ப்போம்" என்று மிக முரட்டுத்தனமாகக் கூறி, முக்காடுகளைக் களையத் தன் வாளின் நுனியையும் அநபாயன் முகத்துக்காகத் தூக்கினான்.

அந்த வாளின் நுனி மட்டும் அந்த முகத்திரையைச் சற்று விலக்கியிருந்தால், அடுத்து நிகழ்ந்திருக்கக் கூடிய சம்பவங்களையோ, அந்தச் சம்பவங்களின் முடிவையோ ஊகிப்பது கஷ்டம். ஆனால் அத்தகைய இக்கட்டான நிலையை அமீரின் அதிகாரக் குரல் தடுத்து நிறுத்தியது. "கலிங்கத்தில் பிறநாட்டு வணிகரை அவமதிக்கும் நாகரிகம் எத்தனை நாளாகப் பரவியிருக்கிறது?" என்று மிகவும் கசப்பும் கடுமையும் நிறைந்த குரலில் கேட்டான் அமீர்.

அமீரின் இந்தக் கேள்வியால் திடுக்கிட்ட காவலர் தலைவன் அநபாயனை விட்டு அமீரை நோக்கித் திரும்பினான். "சில நாட்களாகத்தான் பரவியிருக்கிறது, அவசியத்தை முன்னிட்டு" என்று அதிகாரத்துடன் கூறவும் செய்தான்.

"அந்த அவசியம் இதற்கும் தேவையா?" என்று அமீர் தன் மடியிலிருந்த சின்னஞ்சிறு சீலையொன்றை எடுத்துக் காவலர் தலைவனிடம் நீட்டினான்.

அதைக்கையில்வாங்கிக்கொண்டு பக்கத்திலிருந்த வீரனொருவனைப் பந்தம் பிடிக்கச் சொல்லி பந்தத்தின் வெளிச்சத்தில் சீலையைப் பிரித்துப் படித்த காவலர் தலைவனின் முகத்தில் குழப்பத்தின் ரேகை பெரிதும் படர்ந்தது. "ஆம் உத்தரவு திட்டவட்டமாகத்தான் இருக்கிறது. ஆனால்..." என்று ஏதும் புரியாமல் இழுத்தான் காவலர் தலைவன்.

"சீலையிலிருப்பது கலிங்கபிரான் மாமன்னர் பீமருடைய முத்திரை" என்று சற்றுக் கடுமையுடன் உணர்த்தினான் அமீர்.

"அது தெரிகிறது" காவலர் தலைவன் பதில் சொன்னானே தவிர, மேலும் குழப்பமே அவன் குரலில் தொனித்தது.

"அரண்மனைக்கு வேண்டிய பல வாணிபப் பொருட்களைக் கொடுப்பவன் நான். அரசமாளிகைப் புரவி வர்த்தகத்திலும் பங்கு பெற்றவன். ஆகையால் நான் அரச மாளிகைக்குள் நுழைவதையோ, அரசரை நேரிடையாகப் பார்ப்பதையோ யாரும் தடை செய்ய முடியாது. என் பெயரைக் கூடக் கேட்க முடியாது. சீலையில் உத்தரவு தெளிவாயிருக்கிறது" என்றான் அமீர்.

காவலர் தலைவன் சில விநாடிகள் யோசித்தான். பிறகு கேட்டான். "அது சரி நீங்கள் வேண்டுமானால் போகலாம், உங்களைச் சோதனை செய்ய அவசியமில்லை. ஆனால் இவரை ஏன் நாம் அனுமதிக்க வேண்டும்?" என்று.

"அரச காரியமாகப் போவதால்" என்றான் அமீர்.

"அரச காரியமாக எங்கு போகிறீர்கள்?"

"அரண்மனையின் பின்புறத்துக்கு?"

"பின்புறத்துக்கு எதற்காக?"

"அங்குதானே குதிரைச் சாலை இருக்கிறது." (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நினைப்பது நிறைவேறும்
இயற்றியவர் : மணி
இசை : எம்.எல்.ஶ்ரீகாந்த்
பாடியவர்கள் : எம்.எல்.ஶ்ரீகாந்த், வாணி ஜெயராம்



ஹே...ஹே...ஹே...ஹோ...ஹோ...
ஹோ...ம்...ஆ...ஹா...ஓஓஓ...
நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு
நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு

இருவரும் சேர்ந்திருந்தால் அன்போடு
இன்றுபோல் வாழ்ந்திடலாம் பண்போடு
நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு

ஒருவரின் இதயத்தில் ஒருவர் குடியிருந்தால்
ஒருவரில் இருவரையும் ஒருடலாய் கண்டிடலாம்
ஒருவரின் இதயத்தில் ஒருவர் குடியிருந்தால்
ஒருவரில் இருவரையும் ஒருடலாய் கண்டிடலாம்

தனிமை உனக்கேது...தாங்கும் இதயம் எனக்கேது
தனிமை உனக்கேது...தாங்கும் இதயம் எனக்கேது
உலகத்தை மறந்து வந்து உறவு சொல்லி விளையாடு
உலகத்தை மறந்து வந்து உறவு சொல்லி விளையாடு

நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு
நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு
ம்ஹும்..ம்ம்ஹும்..ம்ஹும்...ஹே..ஹே...
அ..அ..ஆ..அ..அ..ஆ..அ..அ..அ..அ..அ..அ..ஆ...

தேன் சுவைத்தமிழ் பேசி தெம்மாங்கு இசைபாடி
இருவரும் பெருமையுடன் இன்பமெல்லாம் கண்டிடலாம்
தேன் சுவைத்தமிழ் பேசி தெம்மாங்கு இசைபாடி
இருவரும் பெருமையுடன் இன்பமெல்லாம் கண்டிடலாம்

காதல் கவிபாடு...காலமெல்லாம் உறவாடு
காதல் கவிபாடு...காலமெல்லாம் உறவாடு
மனதை பறிகொடுத்தேன் மறந்து வாழ முடியாது
மனதை பறிகொடுத்தேன் மறந்து வாழ முடியாது

நினைப்பது நிறைவேறும் நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான் இருந்தால் உன்னோடு
இருவரும் சேர்ந்திருந்தால் அன்போடு
இன்றுபோல் வாழ்ந்திடலாம் பண்போடு (2)

ஹஹ...ஹஹஹா...ஹஹா...
ஹோஹோ..ஹோஹோ...ஹோ...ஹஹா...
ம்ஹும்...ம்ஹும்...ம்...ம்ஹும்...

# இனியும் இனிது!

(கடந்த வாரத் தொடர்ச்சி)

ஆனால், இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் டிஜிற்றல் புரட்சி, தொழிற்புரட்சியைவிடப் படுவேகமாக மனிதர்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுக்கொண்டிருக்கிறது.

புதுக் கார் வாங்கினால், இரண்டே வருடங்களில் புதிய மொடல் விற்பனைக்கு வந்து, நாம் வாங்கிய காரைப் பழைய காராக்கி விடுகிறது. செல்போன் வாங்கினால் ஆறே மாதங்களில் அடுத்த மொடல் வந்து, நாம் வாங்கிய போனைப் பழைய மொடலாக்கி விடுகிறது. இன்னொருபுறம், 'உங்கள் போனை அப்டேட் செய்துகொள்ளுங்கள்' என்று வாரா வாரம் நோட்டிபிகேஷன் வந்து விடுகிறது. ஒருவர் எந்தத் துறையில் இருந்தாலும் தன்னை அப்டேட் செய்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இப்போது இருக்கிறார். அதைச் செய்யாவிட்டால், அவர் இரக்கமின்றி ஒதுக்கப்படுவார் என்பதே யதார்த்தம்.

பல இலட்சம் முறை எழுதப்பட்டு, பல கோடிமுறை படிக்கப்பட்ட ஒரு சொற்றொடர் என்றால் அது, 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதாகத்தான் இருக்கும். வீதியில் திடீரென நாம் கடக்கும் எந்த மரமும் அதற்கு முன் நாம் பார்த்த அதே நிலையில் இருப்பதில்லை. இலை உதிரும், மீண்டும் துளிரும். துளித்துளியாய் வேர்கள் வழி நீர் மேலேறும். அடிமரத்திலும் கிளைகளிலும் இருக்கும் பட்டைகள் உரிந்து கீழே விழுந்து, அதன் தழும்புகள் ஆறும் முன்பே அங்கே புதிதாய் பட்டைகள் உருவாகும். இவையெல்லாம் யாருக்காகவும் காத்திராமல் இயற்கை தன் போக்கில் நிகழ்த்தும் மாற்றங்கள்.

மரத்தில் நடக்கும் மாற்றம் மனிதனிலும் நடந்துகொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு நாம் இருந்த உடம்பு என்பது, வேறு செல்களால் ஆன உடம்பு. இப்போது இருப்பது முற்றிலும் வேறு புதிய செல்களினால் ஆன உடம்பு. குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ச்சியாக நம் உடல் தன்னைத்தானே புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது. 'ஒரே ஆற்றில் நீ இரண்டு முறை நீராட முடியாது' என்ற ஜென் வார்த்தைகளை இந்தக் கோணத்திலிருந்து படித்தால் உண்மை மேலும் நன்றாகப் புரியும். நம் முயற்சி ஏதுமின்றி, உடல் தன்னை மாற்றிக் கொள்ளும். மனதையும் அறிவையும் புதுப்பித்துக் கொள்ள வேண்டியது நம் பொறுப்பு.

கடந்த காலத்திற்கு அவ்வப்போது ஒரு நடை போய்விட்டு வருவதில் சுகம் காண்பது இயல்புதான். ஆனால் கடந்த காலத்திலேயே உழல்வது ஆரோக்கியமானதில்லை. ஒரு புதிய வேலைக்கு வந்த நாள் முதல், பழைய வேலையைப் பற்றியே பேசுவார்கள். "அந்த அலுவலகம் மாதிரி வருமா?" என்பார்கள். ஆனால், அந்தப் பழைய அலுவலகத்தில் இருந்த நாள்வரை அந்த வேலையைப் பற்றி நல்லவிதமாகப் பேசியிருக்க மாட்டார்கள். இப்படிக் கடந்த காலத்திலேயே வாழ்பவர்கள், மாற்றங்களில் சுருண்டு போகிறார்கள்.

மகத்தான மாற்றங்களின் தொடக்கப்புள்ளி என்பது மாபெரும் குழப்பமான சூழலாகவே இருக்கும். ஆனால், அதைக் கடக்காமல் மாற்றம் சாத்தியம் இல்லை. மாற்றத்துக்கு அஞ்சுகிறவர்கள், புதிய தொடக்கங்களைச் சந்திப்பதில்லை. அவர்களின் வானத்தில் புதிய விடியல்கள் தோன்றுவதில்லை.

மாற்றங்கள் வரும்போது... சவால்கள் குறுக்கிடும்போது... அதைப் பேராபத்தாக நினைத்து ஒதுங்கலாம். அல்லது, பெரும்வாய்ப்பாகக் கருதி அடித்து ஆடலாம். மன நிலையே மாற்றத்தை உறுதி செய்கிறது. நம்மில் பலரும் கிரிக்கெட் ரசிகர்கள் என்பதால் அதிலிருந்தே உதாரணம் எடுத்துக்கொள்வோம். சுப்பர் ஓவர்தான் வெற்றியைத் தீர்மானிக்கப்போகிறது என முடிவான பின், களத்தில் இறங்குவது பயமென்பதை அறியாத இரு பட்ஸ்மேன்களாகவே இருப்பார்கள். உலகின் தலை சிறந்த பௌலர்தான் அந்த ஓவரைப் போடப்போகிறார் என்பது தெரிந்தும் துளியும் தயக்கமின்றி எதிர்கொள்வார்கள். அப்படித்தான் வெற்றி சாத்தியப்படும்.

மோட்டோ ஜிபி போன்ற பைக் பந்தயங்களில் அடிக்கடி உச்சரிக்கப்படும் தாரக மந்திரம் என்ன தெரியுமா? Races are won not in straight lines. It is won only in corners. நேர்கோட்டில் வேகமாக பைக் ஓட்டுவது பெரிய விடயமில்லை. திருப்பங்கள், அதுவும் திடீர்த் திருப்பங்கள் தான் சிறந்த பைக் ரைடர் யார் என்பதை நிர்ணயிக்கும். பைக் ரேஸுக்குப் பொருந்துவது வாழ்க்கைக்கும் பொருந்தும். ரேஸ் வீரர் கார்னரிங் செய்யும் போது இரண்டு நொடிகளில் இருபது முடிவுகள் எடுத்தாக வேண்டும். அதாவது எங்கே த்ராட்டிலை அதிகப்படுத்துவது, பாடி பொசிஷன் எப்படி இருக்க வேண்டும், எங்கே பிரேக் பிடிக்க வேண்டும், எந்த அளவுக்கு பிரேக் பிடிக்க வேண்டும் என்று நொடிகளில் முடிவெடுத்து அதைச் செம்மையாகச் செயற்படுத்த வேண்டும். மாற்றத்தைச் சரியாகக் கையாளாவிட்டால் பேரிழப்பைச் சந்திக்க நேரிடும்.



'மாற்றங்களைக் கண்டு மக்கள் அஞ்சுவதே இது போன்ற இழப்புகளுக்கு பயந்து தான்' என்று சிலர் வாதிடக் கூடும். அதனால்தான் பலரும் தங்கள் கம்ஃபோர்ட் ஜோனைத் (Comfort Zone) தாண்டி வெளியே வருவதில்லை. ஆனால், இன்றைய மேனேஜ்மெண்ட் குருக்கள் என்ன சொல்கிறார்கள்... "வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும் என்றால் Come out of your Comfort zone."

திருமணம் செய்து கொண்டால், வாழ்க்கை முறை மாறிவிடும் என்பது எல்லாருக்கும் தெரியும்தானே! பெரும்பாலானோர் திருமணம் செய்ய முற்படுவது அந்த ஒரு மாற்றத்தை எதிர்நோக்கியே! போலவே, வாழ்க்கையில் என்ன மாறுதல்கள் வந்தாலும் அவற்றை முன்கூட்டியே கணித்து அதற்குத் தகுந்தாற்போல நாம் தயாராகிவிட்டால்... மாற்றம் என்பதும் திருமண வாழ்க்கையைப் போல இனிமையானதாகவே இருக்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சிங்கம் கொடுத்த பரிசு

சிங்கராஜா வேட்டைக்குப் போனபோது ஆபத்தில் மாட்டிக் கொண்டார். வேட்டைக்காரர்கள் விரித்த வலையில் வசமாகச் சிக்கிக்கொண்டார்.

வலையிலிருந்து வெளியேற முடியாமல் உறுமினார். சத்தத்தைக் கேட்டு ஓடிவந்தது எலி.

"எலியே, என்னைக் காப்பாற்று" என்று பரிதாபமாகக் கேட்டார் சிங்கராஜா.

"இப்படி மாட்டிக் கொண்டீர்களே ராஜா, இதோ நான் உங்களை விடுவிக்கிறேன்" என்று பற்களால் வலையைக் கடித்து ராஜாவை விடுவித்தது.

"அன்பு எலியே, உருவத்தில் சிறியவனாயினும் இன்று நீ செய்த உதவி மிகவும் பெரியது. மகத்தானது. என்னைக் காப்பாற்றிய உனக்கு, இல்லை இல்லை உன் இனத்துக்கே நன்மை செய்யப் போகிறேன். இன்று முதல் நீங்கள் அச்சமின்றி வாழலாம்.

யாரும் உங்களை வேட்டையாடவோ, பிடிக்கவோ கூடாது என்று உத்தரவிடப் போகிறேன்" என்று நன்றியோடு சொன்னார் சிங்க ராஜா.

மறுநாள் அரசவையில் தன்னைக் காப்பாற்றிய எலிக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தார் சிங்க ராஜா.

எலிகளை யாரும் கொல்லவோ, வேட்டையாடவோ கூடாது என்று தடை விதித்தார். அவ்வாறு செய்வது தேசத் துரோகம் என்றும் அறிவித்தார்.

இதைக் கேட்டு அனைத்து விலங்குகளும் திடுக்கிட்டன. சிங்க ராஜாவின் புத்தி இப்படிப் போகிறதே? எலிகள் பெருகினால் காட்டுக்கு நாசம் விளையுமே என்று பேசிக் கொண்டன.

ராஜாவின் அறிவிப்பால் எலிகளுக்கு சந்தோஷம். எதிரிகளே இல்லாததால் இஷ்டத்துக்கு ஆட்டம் போட்டன. எறும்புகள் சேர்த்து வைத்த உணவுகளைக் கொள்ளை அடித்தன. பொருட்களை நாசம் செய்தன. இவற்றின் ஆட்டம் பூனைகளுக்கும் பாம்புகளுக்கும் தெரிய வந்தபோதும் ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தன.



ஒருகட்டத்தில் பூனைகளின் முதுகிலேயே சவாரி செய்ய ஆரம்பித்தன எலிகள். ஆனால் அவை ராஜாவின் அரண்மனைக்குள் மட்டும் நுழையவே இல்லை.

எல்லா விலங்குகளும் நரியிடம் சென்று, எலிகளின் அத்துமீறல்களிலிருந்து காக்க வேண்டும் என்று முறையிட்டன.

(தொடரும்)

# மகாபாரதம்




அப்போது இந்திர உலகத்திலிருந்து ஒரு தேர் வந்தது. அதில் வந்திறங்கிய அருச்சுனன் தன் தேவ லோக அனுபவங்களை சிவ பெருமானிடம் பாசு பதக்கணை பெற்றது, நிவாத கவசர்களைக் கொன்றது, காலகேயர்களை அழித்தது என எல்லாவற்றையும் சொன்னான். அனைவரும் மகிழ்ந்தனர்.

இந்நிலையில் வனவாசம் பத்து வருடங்கள் ஓடிவிட்டது. மீதம் இரண்டு ஆண்டு காலம் அவர்கள் காம்யகம் முதலிய வனங்களில் சஞ்சரித்தனர்.

அப்போது அவர்களைச் சந்திக்க சத்தியபாமாவுடன் கண்ணன் வந்தார். அனைவரும் வணங்கி மகிழ்ந்தனர். பாண்டவர்கள் பாஞ்சால நாட்டில் இருக்கும் உப பாண்டவர்களின் நலனையும் துவாரகையில் இருக்கும் சுபத்திரை அபிமன்யு நலத்தையும் கிருஷ்ணரி டம் கேட்டு அறிந்தனர்.

அத்தருணத்தில் தவ முனிவர் மார்க்கண்டேயர் வந்தார். தொடர்ந்து நாரதரும் வந்தார். மார்க்கண்டேயர் புண்ணிய கதைகளைக் கூறினார்.

"ஒவ்வொரு உயிரும் தான் செய்த நல்வினை, தீவினைப் பயன்களை அனுபவிக்கின்றன. வினையின் பிடியிலிருந்து யாருமே தப்பிக்க இயலாது. எத்தனை பிறவி எடுத்தாலும் வினைப் பயன் தொடர்ந்து வந்து பயனைத் தரும்.

வரும் காலத்தில் பன்னிரு சூரியர்களின் வெப்பத்தைத் தாங்காது உயிரினங்கள் துன்புறும், கடல் நீர் நிலைகள் அனைத்தும் வற்றிவிடும் புல், பூண்டு, மரம் ஆகியவை அனைத்தும் தீயால் கருகிவிடும். ஓயாது மழை பொழியும். ஊழிக் காற்று எழுந்து பிரளயத்தை ஏற்படுத்தும். உலகு அழியும். பின் கண் ணபிரான் மீண்டும் உலகையும் உயிரினங்களையும் படைப்பார், காப்பார்.

மறுபடியும் ஒரு ஊழிக்காலத்தில் உலகை அழிப்பார். இப்படிப் படைப்பதும் காப்பதும் அழிப்பதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். இதுதான் இறைவனின் மகிமை" என பல கதைகளைக் கூறினார்.

எல்லாவற்றையும் கேட்டு அனைவரும் இன்பம் அடைந்தனர். எல்லோரும் அறநெறியில் நிற்கவேண்டும் என மார்க்கண்டேயர் எடுத்துரைத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகுபலி சாம்சன் ராஜஸ்தானுக்கு கிண்ணம் வென்று தருவாரா?

அடி தரும் வலியை விட பயம் தர வலிதான் பெரிது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு பயத்தை பஞ்சாபுக்கு மட்டுமல்ல, ஐ.பி.எல்.ஆடும் அத்தனை அணிகளுக்கும் காட்டியிருக்கிறார் சஞ்சு சாம்சன். அனல் தெறிக்கும் ஆட்டத்தால், ஆடுகளத்தைச் சூடாக்கி, கப்டன் எனும் கோலோச்சி, வான்கடே ஸ்டேடியத்தில் தன் தனி இராஜ்ஜியத்தை நிறுவியிருக்கிறார் சாம்சன்!

2013 ஆம் ஆண்டு, புதுமுக வீரராக, பஞ்சாப்புக்கு எதிராக, தனது அறிமுகப் போட்டியில் ஆடிய சாம்சன், கப்டனாக தனது முதல் போட்டியில், அதே பஞ்சாப்புக்கு எதிராகவே களம் கண்டார். எனினும், 18 வயது பாலகனாக, விளையாட்டில் வீரியம் இருந்தாலும் சற்றுத் தயக்கமும் காணப்பட்ட, அந்த பழைய சாம்சன் இப்போதில்லை. தன்னம்பிக்கை ததும்பி வழிய, போராட்ட குணம் போர்க்கொடி தூக்க, ஆட்டத்தில் நேர்த்தியும் பக்குவமும் நிரம்பியிருக்க, இந்த எட்டு வருடங்கள் அவரைப் பலவகையில் பண்படுத்தியும் மேம்படுத்தியும் இருக்கிறது. போட்டியின் முதல் ஓவரில் ஒன் டவுனில் களமிறங்கிய சஞ்சு சாம்சன், இறுதிப் பந்து வரை நின்று ஆடினார். தோல்வியைத் தவிர்க்க போராடவில்லை அவர். வெற்றியை எட்டத்தான் முட்டி மோதினார்.

### அறிமுகத் தொடர்!

சாம்சன் ராஜஸ்தானுக்காக ஆடிய 2013 அறிமுகத்தொடர், ராஜஸ்தானுக்கான கீ பிளேயராக இவர் இருப்பார் என நிறைய நம்பிக்கை வெளிச்சத்தை, அவர் மீது பாய்ச்சியது. இதே பஞ்சாப்புக்கு எதிராக, அறிமுகப் போட்டியில் ஆடிய சாம்சன், அதில் ரஹானேவுடன் இணைந்து கடைசி நேர மாயம் செய்து, 23 பந்துகளில், 27 ரன்களைக் குவித்து, அணியின் வெற்றிக்கு வித்திட்டார். அதே ஆண்டு நடைபெற்ற இன்னொரு ராஜஸ்தான்-பஞ்சாப் போட்டியிலும் இதே இணைதான், அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தது. அந்தப் போட்டியில், 33 பந்துகளில், 47 ரன்களைக் குவித்திருந்தார் சாம்சன். அந்த சீசனில், 205 ரன்களைக் குவித்திருந்த சாம்சனின் ஸ்ட்ரைக்ரேட், 115.73 ஆக இருந்தது. எனினும், சரியாகப் பட்டை தீட்டப்பட்டால், வைரமாக அவர் ஜொலிக்க வாய்ப்புள்ளது என்பதுதான் கிரிக்கெட் வல்லுநர்களின் கருத்தாக இருந்தது.

### டோனிக்கு மாற்று வீரர்?!

டோனி ஓய்வை நெருங்கிய காலகட்டத்தில் இருந்து, இன்றுவரை தொடரும் விவாதமான, அணியின் "நிரந்தர விக்கெட்கீப்பர்" என்ற இடத்துக்கான ரேஸில் இவரும் பங்கேற்றார். ஒவ்வொரு போட்டியில் சாம்சன் சிறப்பான பங்காற்றும் போதும், இந்த விடயத்தை ஒட்டியே கருத்துக்கள் எழுந்தன.

### இந்திய அணியில் இடம்!

பேக்கப் விக்கெட் கீப்பர் வேண்டுமென்பதற்காகவே, பல தொடர்களில், இந்திய அணியில் இவரது பெயரும் இணைக்கப்படும். ஆனால், விளையாட வாய்ப்புக் கிடைக்கும் போட்டிகள் மிகச் சொற்பமாகவே இருந்து வந்தன. விளையாடும் அந்தப் போட்டிகளிலும் சொல்லிக் கொள்ளும்படியான சாதனைகளை நிகழ்த்தத் தவறுவார் சாம்சன். இதுதான், "ஸ்டோரி ஆஃப் சாம்சன்ஸ் லைஃப்" என பல்லாண்டுகளாய், தொடர்ந்து கொண்டிருக்கும் கதை.

### நிலைப்புத்தன்மை இல்லாதது!

சாம்சனின் மிகப்பெரிய பலவீனமே, நிலைப்புத்தன்மை இல்லாததுதான். தொடரின் சில போட்டிகளில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்துவார். 2013 சம்பியன்ஸ் லீக் இருபது-20 இறுதிப் போட்டியில், மும்பை இந்தியன்ஸ்'க்கு எதிராக, 33 பந்துகளில் அவர் அடித்த 60 ரன்களைப்போல மிரட்டலாக பெரிய இன்னிங்ஸ் ஆடுவார். சரவெடி சாம்சன் என பத்திரிக்கைகளில் தலைப்புச்செய்திகளில் இடம்பிடிப்பார், கொண்டாடப்படுவார். ஆனால், அடுத்த போட்டியிலேயே புஸ்வாணமாக மாறி ஏமாற்றமளித்து வெளியேறுவார். சங்கிலித் தொடராக, இதுதான் பல ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்தது. 2013 இல் பத்து இலட்சத்துக்கு வாங்கப்பட்ட சாம்சன், 2014 ஐ.பி.எல்.இல், நான்கு கோடிக்கு



வாங்கப்பட்டு ஸ்டார் பிளேயராகக் கருதப்பட்டார். அதன்பின், ராஜஸ்தானின் தடைக்காலத்தில் டில்லியோடு பயணித்த சாம்சனை, தடைக்காலம் முடிந்ததும் மறுபடி தனது கூடாரத்துக்குள் கொண்டு வந்தது ராஜஸ்தான்! அவர் மீதிருந்த நிறைய நம்பிக்கையினால்தான் ஸ்மித் போன்ற ஒரு கைதேர்ந்த வீரர் வகித்த கப்டன் பதவியை, இந்த வருடம் சாம்சனிடம் கொடுத்து அழகு பார்த்துள்ளது ராஜஸ்தான் நிர்வாகம்.

### 2020 சீசன்!

கடந்த சீசனை, சிஎஸ்கேவுக்கு எதிரான போட்டியில், அமர்க்களமாக ஆரம்பித்தார் சாம்சன். 32 பந்துகளில் 74 ரன்களைக் குவித்திருந்த அவரது இன்னிங்ஸில், ஒரே ஒரு பவுண்டரியோடு, பிரமாண்டமாக, ஒன்பது சிக்ஸர்களை விளாசி இருந்தார். லொக்டௌனில் 20,000 இற்கும் மேலான பந்துகளை பயிற்சியின்போது சந்தித்து தன்னுடைய மேம்படுத்தப்பட்ட வெர்ஷனாக வந்திருந்தார் சாம்சன். 2013 இல் 115.73 ஆக இருந்த அவரது ஸ்ட்ரைக்ரேட் 2020 இல் 158.89 ஐ எட்டித்தொட்டது.

### கப்டன் கிரீடம்!

கடந்த ஆண்டு, எட்டாவது இடத்தில் முடித்து, மோ[illegible] நிறைவு செ[illegible] தவறுகளைக் களைந்தெறியும் விதமாக, கப்டனாக சாதிக்கத் தவறிய ஸ்மித்தை, அதிரடியாக, இந்த வருடத்து மினி ஏலத்திற்கு முன் வெளியேற்றியதால், கப்டனாக யார் தொடர்வார் என்ற கேள்வி எழ, தங்களுடன் நீண்டகாலமாய் பயணித்து வரும், சாம்சனைக் கப்டன் ஆக்கினர். பண்ட்டின் மேலிருந்த எதிர்பார்ப்பு இல்லையெனினும் இந்த இளைஞர் ராஜஸ்தானின் தலையெழுத்தை எப்படி மாற்றுவார் என்ற ஆவல் மேலோங்கியது.

### பட்ஸ்மன் சாம்சன்!

"கப்டன் என்பது ஃபீல்டிங்கின் போது தான், பட்டிங்கின்போது அல்ல!" என அண்மையில் தெரிவித்திருந்தார் சாம்சன். ஆனால், கப்டன் பதவி அவருக்குக் கூடுதல் பொறுப்பைக் கொண்டுவர, தவறான ஷாட்களுக்குப் போகாமல், அதே நேரத்தில், நிதானத்தையும் கைவிடாமல் ஆடிக் கொண்டிருந்தார் சாம்சன்.

### பவர்ப்ளே ஓவர்களும் சாம்சனின் அரைசதமும்!

கிங் லெவின் பஞ்சாப் அணியுடனான போட்டியில் இலக்கு பெரியதென்பதால், தொடக்க ஓவர்களிலிருந்தே அடித்து ஆட வேண்டியதன் கட்டாயத்தை உணர்ந்திருந்த சாம்சன், பவர்ப்ளே ஓவர்களில் 27 ரன்களைச் சேர்த்திருந்தார். அதில் 24 ரன்கள், பவுண்டரிகள் மூலமாகவே வந்திருந்தது. அதன்பின், மறுபக்கம் விக்கெட்டும் வீழ்ந்ததால், சாம்சனின் ஆட்டம் கொஞ்சம் மட்டுப்பட்டு, 30 பந்துகளில் 41 ரன்கள் என்றிருக்க, அதற்கடுத்த மிரிடியத்தின் ஓவரில், 33 பந்துகளோடு அதை அரைசதமாக்கினார்.

### சாம்சனின் சதம்!

ஷிவம் துபே விக்கெட் வீழ்ந்து, பராக்குடன் கைகோர்த்த பின்தான், சாம்சன் இன்னமும் ஆபத்தானவராக மாறத் தொடங்கினார். முதல் 50 ரன்களை அடிக்க 33 பந்துகளை எடுத்துக் கொண்ட சாம்சன், அடுத்த 50 ரன்களை 21 பந்துகளிலேயே அடித்து, தனது மூன்றாவது சதத்தையும் எட்டினார். இதற்கு முன்னதாக, 2017 ஆம் ஆண்டு, டில்லி டேர் டெவில்ஸ்'க்காக ஆடிய போது, 62 பந்துகளில் சாம்சன் சதமடிக்க, அணி வெற்றி பெற்றது.

அதன்பின், 2019 இல் சன்ரைசர்ஸ்'க்கு எதிரான போட்டியில், 54 பந்துகளில் சாம்சன் சதமடித்தும் அணி தோல்வியைத் தழுவியது. இம்முறையும் 54 பந்துகளில், சாம்சன் சதமடித்தும் போட்டி, எதிரணிக்குச் சாதகமாக முடிந்தது.

### அச்சமென்பது மடமையடா!

சாம்சனின் இன்னிங்ஸ் முழுவதிலுமே அவர் ஒரு அட்டாக்கிங் கிங்காகவே காட்சியளித்தார். சுழல்பந்து, வேகப்பந்து வீச்சாளர்களென எல்லோரையும் ஒரு கை பார்த்தார், முக்கியமாக, மிரிடியத்தின் பந்துகள்தான் சாம்சனிடம் சிக்கி சின்னாபின்னமாகின. அவர் தனக்கு வீசிய 11 பந்துகளில் 29 ரன்களை அடித்திருந்தார் சாம்சன்.

இலக்கு அதிகமானதே, அடித்து விடுவோமா? மறுபுறம் விக்கெட் விழுகிறது இது நமது வீழ்ச்சியின் ஆரம்பமா?! என்ற எந்தச் சந்தேகமோ, கலக்கமோ, கப்டனாக பதில் சொல்ல வேண்டி இருக்குமென்ற பயமோ அவரது முகத்தில் சற்றும் வெளிப்படவில்லை.

இடையில் குறுக்கிட்ட ஷமியின் இறுதி ஓவரும் அர்ஷ்தீப்பின் அசத்தலான கடைசி ஓவர் தவிர்த்து, போட்டியின் போக்கை, தான் விரும்பிய திசையில் தான் நகர்த்திக் கொண்டிருந்தார். அரைசதத்தைக் கடந்த அடுத்த பந்திலேயே, கள அம்பயர் அவருக்கு எல்பிடபிள்யூ தர, அதற்கு இரண்டாவது சிந்தனையேயின்றி, விநாடி நேரத்திற்குள், ரிவ்யூவுக்குப் போகும்போது, அவர் முகத்தில் தென்பட்டது நம்பிக்கை.

அது இதுவரை சாம்சனிடமிருந்து வெளிவராத அவரது இன்னொரு பக்கம். டாஸ் போட்ட காசை எடுத்து வைத்துக் கொண்ட குழந்தைத்தனமான சாம்சனின் பக்கத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட பக்குவமுடையது அந்தமுகம்!

### கிளைமேக்ஸ் காட்சிகள்!

கடைசி ஓவரில், அர்ஷ்தீப் பந்தில், டீப் எக்ஸ்ட்ரா கவரில் சாம்சன் அடித்த அந்த சிக்ஸர், வெற்றி கிட்டத்தட்ட கிட்டும் தொலைவில்தான் என்று ஊர்ஜிதப்படுத்தியது. எனினும், ஐந்து ரன்கள் எடுக்க வேண்டிய கடைசிப் பந்தில், டைமிங் கச்சிதமாக இருந்தும் இன்னமும் கொஞ்சம் பவரேற்றி அடித்திருக்க வேண்டியது.

ஆனால், அர்ஷ்தீப்பின் கட்டர்பால், பவுண்டரி லைனுக்கு மிக அருகில் ஹூடாவிடம் தஞ்சமடைய, கடைசிப் பந்துவரை உண்மையான வீரராகப் போராடிய சாம்சனின் ஆட்டமும், வெற்றிக்கனவும் வீணாய் முடிந்தது.

எனினும், சுலபத்தில் பணியாமல், பின்வாங்காமல், இறுதிவரை போராடிய அவரது மனோபாவம் தான் பாராட்டுக்குரியது. அணியின் தோல்வியோடு வந்திருந்தாலும் காலத்திற்கும் பேசப்படப் போகும் இன்னிங்ஸ் தான் இது!

ஐந்தாவது பந்தில் ஸ்ட்ரைக்கை மாரிஸிடம் கொடுத்திருந்தால், பவுண்டரியுடன் சுப்பர் ஓவருக்கான வாய்ப்பிருந்திருக்கும் என சிலர் சொன்னாலும் நன்றாக செட்டில் ஆகி இருந்த பட்ஸ்மனாக, அந்தத் தருணத்தில், தன்னம்பிக்கை மிகுதியோடு சாம்சன் எடுத்த முடிவு சரியே! கப்டனாக அறிமுகப் போட்டியிலேயே சதமடித்த முதல் வீரர் என்ற பெருமையைத் தன்வசமாக்கியுள்ளார்.

கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, கப்டன் சாம்சன் இதேபோல் சம்பியன் சாம்சனாகத் தொடர்ந்தால், ராஜஸ்தான் கோப்பையை நோக்கி வீரநடை போடலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டோன் ஹேரன்ஞ் (இங்கிலாந்து)

(கடந்த வார தொடர்ச்சி)

இனிகோ ஜோன்ஸ் என்னும் 17 ஆம் நூற்றாண்டு கட்டடக்கலை நிபுணர்தான் முதன்முதலாக ஸ்டோன் ஹேறன்ஞ் பற்றி முழுமையான ஆய்வுப்பணியில் ஈடுபட்டு அது ரோம தேசத்து மக்களின் வழிபாட்டுத்தலம் என்று அறிவித்தார்.

18 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த பழம் பொருள் சேகரிப்பாளர் ஒருவர் அது பிரிட்டிஷ் பழங்குடி இனப்பிரிவான கெந்த் இன மக்களின் ஆலயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

2003 ஆம் ஆண்டில் ஷெபீல்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் மைக் பார்க்கர் பியர்ஸன் என்பவர் தலைமையில் ஸ்டோன் ஹேறன்ஞ் பகுதியை ஆய்வு செய்ய அதிகாரபூர்வமான குழு ஒன்றை அமைத்தது. அந்தக்குழுவில் அவருடன் டாக்டர் ஜோஷுவா போலார்ட், காலின் ரிச்சர்ட்ஸ், கதே வில்ஹாம் மற்றும் பேராசிரியர்கள் ஜூலியன் தாமஸ், கிரிஸ் டில்ஹே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

ஆப்ரெ துளைகள் தொழில்நுட்பம் மூலம் நடுத்தர வயது பெண் ஒருத்தியின் எலும்புக்கூடுகளின் சில பகுதிகளும் இளம் வயது ஆண் மகனின் எலும்புப் பகுதிகளும் கண்டெடுக்கப்பட்டன.



இரண்டாம் கட்ட ஆய்வுப்பணியில் ஏவான் நதியின் ஆற்றுப்படுகையில் சிறிய வீடுகளும் அவற்றின் அறைப்பகுதிகளும் கண்டறியப்பட்டன. மூங்கிலால் ஆன வீட்டு உபயோக மரப்பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.

தொடர்ந்து நான்கு வெவ்வேறு காலகட்ட ஆய்வில் அறியப்பட்ட அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்பட்ட முடிவுகளை மைக் பியர்சன் அறிவித்தார். அதன்படி ஸ்டோன் ஹேறன்ஞ் என ஒட்டுமொத்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஷெபீல்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மான்செஸ்டர் பல்கலைக்கழகம், ப்ரிஸ்டால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் துணை புரிந்த இந்தத் திட்டத்துக்கு இன்னும் சில கல்வி நிறுவனங்களும் நிதி உதவி அளித்திருக்கின்றன.

அரசு தாண்டி பல்வேறு கல்வி நிறுவனங்கள் தாமாக முன்வந்து இந்தத் திட்டத்தில் ஆர்வமுடன் பங்கேற்றதைப் பார்க்கும் போது இங்கிலாந்து மக்கள் தங்கள் தொன்மையான வரலாற்றை தெரிந்து கொள்ளக் காட்டும் உண்மையான ஈடுபாட்டையும் மனிதகுல மேம்பாட்டின் மீதான அக்கறையையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தியாவிலும் இதுபோன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் இருக்கின்றன. அவற்றை முறையாகவும் துரிதமாகவும் அறிவியல் பூர்வமான ஆய்வுக்கு உட்படுத்தினால் அவற்றின் மகத்துவத்தை உலகம் அறியவும் அதன்மூலம் நமது தொன்மைக்கால மக்களின் கலாசாரம், பண்பாடு, கலை ஆகியவற்றின் உன்னதமான கூறுகளை உணரவும் செய்யலாம்.

எப்படி மருத்துவக் கல்லூரிகள் கண்டிப்பாக வைத்தியசாலைகளை அமைத்து மக்களின் சுகாதாரப் பணிகளில் ஈடுபடுகின்றனவோ அதுபோல எல்லாப் பல்கலைக்கழகங்களும் தொல்லியல் பணிகளில் ஈடுபட வேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தை உருவாக்க வேண்டும். எல்லாவற்றையும் அரசு செய்துவிடும் என்ற போக்கு எல்லா மட்டத்திலும் இன்று பரவலான அசட்டு நம்பிக்கையாகத்தான் தெரிகிறது.

அந்தக் கருத்தாக்கத்தைத் தகர்த்து ஒவ்வொருவருக்கும் சமூகப் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்த்த இதுபோன்ற பணிகளில் ஈடுபடக் கல்வி நிறுவனங்கள் தாமாக முன்வர வேண்டும்.

யார் கண்டது. அந்தப் பணிகள் பரவலாக மேற்கொள்ளப்படுமேயானால் உலக அதிசயங்களை மிஞ்சிய அதிசயங்கள் நமக்குள் புதைந்து கிடப்பது வெளிப்படலாம்.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2287

### தேவா

பொண்ணுங்கதான் கெத்து பசங்கலாம் வெத்து
எங்க அந்த ஸ்கூட்டிக்கு சென்ரர் ஸ்டாண்ட்
போடு பார்ப்போம்



### சுதன்

மாதாஜி, பிதாஜி அடுத்து என்ன?
பப்ஜி
சனியனே குருஜிடா



### வருஷ்

வருசா வருசம் கொரோனா பண்டிகைக்கு ஒரு
மாசம் லீவு விடுவாங்களா?
என்னது கொரோனா பண்டிகையா?



### சுபா

பகல் முழுக்க சுட்டெரிக்கிற SUN எங்க
அந்த வெயில்லயும் ஊர் சுத்திட்டு
திரியுற என் SON எங்க



### மதி

சம்பளம் வாங்கின உடனே கடனெல்லாம் அடச்சிட்டு
நம்மகிட்ட இருக்கிற மிச்சத்தைப் பார்த்தா அடுத்து
யாருகிட்ட கடன் வாங்கலாம்னு யோசிக்க
வேண்டியதா இருக்கு...



### ஹரி

நான் யார் கூடவும் Chat பண்ண
Facebook வரல்ல
மீம்ஸ் பார்த்து சிரிச்சிட்டுப் போக வந்தேன்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 249

## நீரிழிவு உள்ளவர்கள் சுவையாக எவற்றை உண்ண முடியும்?

நீரிழிவு நிலை உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவு வகைகள் உண்மையிலே அனைவருக்குமே பொருத்தமான ஒரு ஆரோக்கிய உணவுமுறையாக அமைந்திருக்கிறது. இந்த உணவு வகைகளை சுவை நிறைந்ததாக சமையல் செய்து உண்பது மனதுக்கும் உடலுக்கும் புத்தூக்கத்தை கொடுத்து மனிதனின் ஆரோக்கியத்தை வளர்க்க உறுதுணையாக அமையும்.

இவற்றை போதிய அளவில் படுத்த முடியும். நீரிழிவு நிலை உள்ளவர்கள் பழவகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இது முற்றிலும் தவறானது.

அன்னாசி, விளாம்பழம், பப்பாசிப் பழம், கொய்யாப்பழம், ஜம்புப்பழம், வாழைப்பழம், வத்தகப்பழம், தோடம் பழம், மாதுளம்பழம், நாவற்பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்தவை.

இவற்றை போதிய அளவில்

உணவு வகைகளை குறைத்துக் கொள்வது நல்லது. காரணம் இவை சமிபாடு அடையும் பொழுது அதிகளவு குளுக்கோஸ் உண்டாகின்றது.

ஒப்பீட்டளவில் தீட்டாத அரிசிமா, குறைவாக தீட்டப்பட்ட குத்தரிசி, உழுத்தம்மா, பயற்றம்மா போன்றவற்றில் செய்யப்படும் உணவுவகைகள் வெள்ளை நிற அரிசிவகைகள், வெள்ளை நிறமா வகைகளில் செய்யப்படும் உணவுகளிலும்

பயக்கும் அளவுக்கு அதிகமான உப்பு வகைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**உணவு முறை சம்பந்தமான சில தகவல்கள்.**

அதிகளவு பழவகைகளையும், மரக்கறி வகைகளையும் உண்பது எம்மை மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம், நிறை அதிகரிப்பு, கொலஸ்ரோல் அதிகரிப்பு போன்ற



**சுவையாக எவற்றை உண்ண முடியும்?**

முட்டை,பால்,கோழி இறைச்சி, மீன், இறால், தயிர், மோர் போன்றவை அதிக புரதத்தையும், விற்றமின்கள், கனியுப்புக்களையும் கொண்டவை. இவற்றை உங்களுக்குப் பிடித்த சுவையான வடிவத்தில் தயார் செய்து உண்ணமுடியும்.

சமையலின் பொழுது வாசனைத் திரவியங்கள, போதியளவு உறைப்பு, புளி, மஞ்சள்,இஞ்சி, சீரகவகைகள், வெந்தயம்,மல்லி போன்றவற்றை வேண்டிய அளவில் சேர்த்துக் கொள்ள முடியும். இவை உடல் நலத்திற்கு நன்மை பயப்பவையாக அமைவதுடன் உணவின் சுவையையும் அதிகரிக்க உதவும்.

மரக்கறி வகைகளை தெரிவு செய்யும் பொழுது வெவ்வேறு வர்ணங்களில் காணப்படும் பலவகை மரக்கறி வகைகளை மாறி மாறி தெரிவு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் எல்லா வகையான ஊட்டச்சத்துக்களும் எமக்கு கிடைக்கும். பூசணி, கரட், பீற்றூட், முள்ளங்கி உட்பட அனைத்து வகையான மரக்கறி வகைகளையும் பயன் உண்ண முடியும். பழங்கள் உண்ணும் பொழுது குருதிக்குளுக்கோஸின் அளவு சற்று அதிகரித்தாலும் கூட இவற்றை உண்ணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் பல மடங்கு அதிகமாகும்.

பழச்சாறுகளில் வெல்லத்தின் செறிவு அதிகமாகும். நார்த்தன்மை குறைவாகவும் இருப்பதுடன் பசியை கட்டுப்படுத்தும் வீதமும் குறைவாக இருக்கிறது.

எனவே பழங்களை பழச்சாறாக மாற்றி குடிப்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்ததாகும்.

கொட்டை வகைகளான கச்சான், கடலை, மரமுந்திரிகை (கயூ), பொட்டுக் கடலை போன்றவை உடல் ஆரோக்கியத்தை வளர்க்க உதவும். எனவே இவற்றை இடைநேரத்தில் தேநீருடன் உண்ண முடியும். புரதச்சத்து அதிகமுள்ள பயறு, உழுந்து, சோயா, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை சுவைபட போதிய அளவில் சமைத்து உண்ணமுடியும்.

**உணவு முறையில் எந்த வகையான மாற்றங்கள் செய்ய முடியும்?**

மாப்பொருள் செறிவு அதிகமுள்ள அரிசி,கோதுமை, ஆட்டாமா, குரக்கன் போன்றவற்றை பயன்படுத்தி செய்யும் பார்க்க சிறந்தவையாகும்.

மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகளை உண்ணும் பொழுது உணவுக்கோப்பையில் அரைப்பங்கு இலை வகைகள், மரக்கறிவகைகளால் நிறைந்திருப்பது அவசியமாகும்.

உணவிலே சீனி, சர்க்கரை, பனங்கட்டி, குளுக்கோஸ் போன்றவற்றை தவிர்த்து அவற்றிற்குப் பதிலாக தேவை ஏற்படின் இனிப்புச்சுவையுள்ள இனிப்பூட்டிகளை பயன்படுத்துவது நல்லது. இந்த இனிப்புச்சுவையுடைய இனிப்பூட்டிகள் உடல் நிறையையோ அல்லது குருதிக்குளுக்கோஸின் அளவையோ அதி கரிக்க மாட்டாது.

எண்ணெய், பட்டர்,கொழுப்பு என்பன அதிகமுள்ள பொரித்த உணவுவகைகளுக்குப் பதிலாக "பக்" செய்யப்பட்ட உணவு வகைகளை தெரிவு செய்வது நல்லது.

உப்பை முற்றாக தவிர்த்து விட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அளவான உப்பு சேர்த்து சுவையாக சமையல் செய்யமுடியும். உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை தவிர்த்து விடுவது நன்மை நோய் நிலைகளிலிருந்து பாதுகாக்கும்.

வீட்டின் அன்றாட பாவனைக்கு சிறிய உணவுக் கோப்பைகளையும், சிறிய தேநீர் பேணிகளையும் பயன்படுத்துவோம். இது நாம் மேலதிகமாக உண்பதை தவிர்க்க உதவும். சோறு, பிட்டு போன்றவற்றை பரி மாறுவதற்கு சிறிய கரண்டிகளையும் மரக்கறி வகைகளை பரிமாறுவதற்கு பெரிய கரண்டிகளையும் பயன்படுத்து வோம்.

உணவை ஆறுதலாக சுவைத்து ரசித்து உண்ணும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரே வகையான உணவில் அனைத்து வகையான ஊட்டச்சத்துக்களும் அடங்கி இருக்காது. எனவே நாம் உண்ணும் உணவின் வகைகளை மாற்றிக்கொள்வது பயன்தரும்.

உள்ளூரிலே உற்பத்தியாகும் இயற்கையான உடன் உணவு வகைகளை தெரிவு செய்வது பலவழிகளிலும் நன்மை பயக்கும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org